# திருக்குறள்

## ஒருவரி விளக்க உரை


உரையாசிரியர்

வித்வான். ல. சண்முகசுந்தரம்



பாமா பதிப்பகம்

பொன்னான நூல் பதிப்பாளர்கள்
5, சிவஞானம் சாலை,
(தி. நகர் தலைமை தபால் நிலையம் அருகில்)
தி. நகர், சென்னை – 600 017.

முதற்பதிப்பு : ஏப்ரல் 1994

© ஆசிரியர்க்கு

**Price : Rs.12/-**

**Published by**

**Bhama Pathippakam**
5, Sivagnanam Road
T. Nagar, Madras - 17

---

Laser Typeset at : LKM Computer Prints, Ms.
Printed at : Shakti Printers, Madras - 5.

# முகவுரை

*திருக்குறள் ஒரு வாழ்க்கை நூல், வாழ்க்கையை மதிக்கும் நூல். வாழ்க்கையைத் தெய்வமாக மதிக்கும் நூல்.*

*அன்பு, பொறுமை, கொடை, புகழ், நீதி, நேர்மை முதலிய அம்சங்களும் வாழ்க்கையில் பரிமளிக்கும். எரிச்சல், பொய், கருமித்தனம் முதலிய அம்சங்களும் வாழ்க்கையில் தொனிக்கும்.*

*அதனால் வாழ்க்கையைத் துருவித் துருவி நோக்குகிறார் திருவள்ளுவர்.*

*திருக்குறள் பாடல்களின் குறிக்கோளே வாழ்க்கையைச் செம்மைப்படுத்துவது தான்.*

*வாழ்க்கையோடு ஒட்டிய மெய்ப்பொருளை வைத்து 1330 குறள்களுக்கும் தெளிவுரை எழுதி யுள்ளேன்.*

*பொன்னான நூல்களைப் பொன்னான முறையில் தேடி வெளியிடும் பாமா பதிப்பகத்து உரிமையாளர் நண்பர், பாஸ்கரின் வேண்டுகோளுக கிணங்கி இந்த எளிய இனிய உரையை திருக்குறள் முழுவதுக்கும் எழுதியுள்ளேன்.*

*வாசகர்கள் படித்து வாழ்க்கையின் நறுமணத்தை நுகர வேண்டுகிறேன்.*

**இப்படிக்கு**
**வித்வான் ல. சண்முகசுந்தரம்**

# இருவருக்கு என் நன்றி

திருக்குறளுக்கு எவ்வளவோ விளக்க உரைகள் பலவடிவங்களில் வந்துகொண்டு இருந்தாலும், இன்றைய சூழ்நிலையில் உள்ள அனைவரும் எந்த செய்தியாக இருந்தாலும், சுருக்கமாக இருந்தால்தான் விரும்புகிறார்கள். அந்த வகையில் உலக விசயங்கள் அனைத்தையும் இரண்டே வரியில் சொல்லும் திருக்குறளுக்கு ஒருவரியில் சுலபமான தமிழில் விளக்க உரை எழுதியுள்ளார் இதன் உரையாசிரியர் திரு. வித்வான் ல. சண்முகசுந்தரம் அவர்கள்.

இது அச்சில் உள்ளபோதே இதை பார்த்து பல பிரபல பதிப்பாளர்கள் பாராட்டு தெரிவித்தார்கள். அதுவே இதன் முதல் வெற்றிதான்.

திரு. வித்வான் ல. சண்முகசுந்தரத்துடன் எனக்கு பழக்கம் சில நாட்களேயானாலும், என் மீது அன்புகொண்டு அவரின் பல நூட்களை எங்கள் பதிப்பகம் வாயிலாக வெளிவருவதை அவர் பெருமையாக நினைப்பதைப் பார்க்கும்போது, மிகவும் வியப்பாக உள்ளது. இது வெளியீட்டாளர், எழுத்தாவர் என்ற முறைக்கும் அப்பாற்பட்ட அன்பு. அவருக்கு என் மனமார்ந்த நன்றி.

ஒருவரியில் விளக்க உரை வந்தால் நன்றாக இருக்கும் என்று குமுதம் வார இதழ் மூலம் கூறி எனது ஆர்வத்தைத் தூண்டிய எழுத்தாளர் திரு. சுஜாதா அவர்களுக்கும் என் நன்றியினை தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**என்றென்றும் அன்புடன்**
**எஸ். பாஸ்கர்,**
**பாமா பதிப்பகம்**

# திருக்குறள்
# ஒருவரி விளக்கஉரை

# 1. அறத்துப்பால்

## 1. பாயிர இயல்

### 1. கடவுள் வாழ்த்து

1. அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

2. கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்.

3. மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்.

4. வேண்டுதல் வேண்டாமை இலான்அடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல.

5. இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

6. பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்.

7. தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது.

8. அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

9. கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை.

10. பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்.

# 1. அறத்துப்பால்

## 1. பாயிர இயல்

### 1. கடவுள் வாழ்த்து

1. எல்லா உலகங்களுக்கும் ஆதார நாயகன் இறைவன்.
2. பக்தி இல்லாதவர்கள் எவ்வளவு படித்தாலும் பலன் இல்லை.
3. இறைவனை வழிபட வழிபட சக்தி பெருகும்.
4. இறைவனை நம்பினவர்களுக்கு தொல்லை இல்லை.
5. பக்தி பெருகப் பெருக எல்லாம் அவன் செயல் என்பது விளங்கும்.
6. இறைவனை நெருங்க நெருங்க ஞானம் பெருகும்.
7. பக்தி இருந்தால் தொல்லை இல்லை. அது இல்லை என்றால் ஒரே தொல்லைதான்.
8. தருமக் கடல் என்றால் இறைவன். அவன் நினைப்பு இருந்தால் பிறப்பும் இறப்பும் இல்லை.
9. பக்தி இல்லாதவன் கண்ணிருந்தும் குருடன்.
10. பக்தி உள்ளவர்கள் முக்தி பெறுவார்கள். மற்றவர்கள் பிறந்து பிறந்து உழல்வார்கள்.

## 2. வான் சிறப்பு

1. வான்நின்று உலகம் வழங்கி வருதலால்
தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று

2. துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை.

3. விண்இன்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து
உள்நின்று உடற்றும் பசி.

4. ஏரின் உழாஅர் உழவர் புயலென்னும்
வாரி வளங்குன்றிக் கால்.

5. கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை.

6. விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே
பசும்புல் தலைகாண்பு அரிது.

7. நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்தெழிலி
தான்நல்கா தாகி விடின்.

8. சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு.

9. தானம் தவம்இரண்டும் தங்கா வியன்உலகம்
வானம் வழங்கா தெனின்.

10. நீர்இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்
வான்இன்று அமையாது ஒழுக்கு.

## 2. வான் சிறப்பு

1. உலகைக் காப்பாற்றுவது மழை.
2. உண்ணும் உணவும் மழைதான், பருகும் நீரும் மழைதான்.
3. மழை இல்லை என்றால் பசியும் பட்டினியுந்தான்.
4. மழை இல்லாவிட்டால் உழவர்களும் இல்லை. விளைநிலமும் இல்லை.
5. அதிகமாகப் பெய்து கெடுப்பதும் அளவோடு பெய்து எடுப்பதும் மழைதான்.
6. மழை பெய்யவில்லை என்றால் உலகில் ஒரு புல்லைக்கூடப் பார்க்க முடியாது.
7. சமுத்திரமே வறண்டு போகும் மழை இல்லை என்றால்.
8. பஞ்ச காலத்தில் கோவிலாவது? வழிபாடாவது? தெய்வங்கள் பாடே திண்டாட்டந்தான்.
9. தானம் பண்ணுவது தவ வேள்விகள் பண்ணுவ தெல்லாம் பருவ மழை பெய்கிற வரைதான்.
10. மழை இல்லை என்றால் தண்ணீர் இல்லை. தண்ணீர் இல்லை என்றால் வாழ்வு இல்லை.

## 3. நீத்தார் பெருமை

1. ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவல் துணிவு

2. துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து
இறந்தாரை எண்ணிக்கொண் டற்று.

3. இருமை வகைதெரிந்து ஈண்டுஅறம் பூண்டார்
பெருமை பிறங்கிற்று உலகு.

4. உரனென்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து.

5. ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலுங் கரி.

6. செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்.

7. சுவைஒளி ஊறுஓசை நாற்றமென்று ஐந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு.

8. நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்.

9. குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயும் காத்தல் அரிது.

10. அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்.

# 3. நீத்தார் பெருமை

1. *தன்னலம் இல்லாதவர்களின் சிறப்பைத்தான் இலக்கியங்கள் பறைசாற்றுகின்றன.*
2. *பிறந்து இறந்தவர்களை எண்ண முடியாது. அருளாளர் பெருமையும் அப்படியே.*
3. *உண்மையை உணர்ந்த பெரியவர்களின் தியாகமே நிலைத்து நிற்கும்.*
4. *ஐம்புலன்களையும் கட்டுப்படுத்தி வாழ்கிற வனே ஆனந்தமயமாக இருப்பான்.*
5. *அருளாளனுடைய பெருமைக்கு முன் தேவேந்திரனும் நிற்க முடியாது.*
6. *பெரியவர்கள் உயர்ந்த லட்சியத்தை நிறை வேற்றுவார்கள், சாதாரணமானவர்களால் அது முடியாது.*
7. *எது உண்மை எது போலி என்று தெரிவது தான் ஞானம்.*
8. *உண்மையை உணர்ந்தவர்களின் சொல் ஒவ்வொன்றும் மந்திரந்தான்.*
9. *உத்தமர்களுக்கு கோபம் வராது. வந்தால் சும்மா விடாது.*
10. *அருளாளர்களுக்கு ஒரு பெயர் அந்தணர்.*

## 4. அறன் வலியுறுத்தல்

1. சிறப்புஈனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்கு
ஆக்கம் எவனோ உயிர்க்கு.

2. அறத்தினூஉங்கு ஆக்கமும் இல்லை அதனை
மறத்தலின் ஊங்கில்லை கேடு.

3. ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வா யெல்லாஞ் செயல்.

4. மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்துஅறன்
ஆகுல நீர பிற.

5. அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்.

6. அன்றறிவாம் என்னாது அறஞ்செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை.

7. அறத்தாறு இதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை.

8. வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்குங் கல்.

9. அறத்தான் வருவதே இன்பம்மற் றெல்லாம்
புறத்த புகழும் இல.

10. செயற்பால தோரும் அறனே ஒருவற்கு
உயற்பால தோரும் பழி.

# 4. அறன் வலியுறுத்தல்

1. நெறிமுறை தவறாத வாழ்வுதான் ஆனந்தம். அதுதான் மேலான செல்வம்.
2. அறவாழ்வை விட்டுவிட்டால் மனிதனாக முடியாது.
3. முடிந்த அளவுக்கு நெறிமுறைகளைப் பாதுகாக்க வேண்டும்.
4. மனதில் குற்றம் குறை இல்லாமல் இருக்க வேண்டும். அதுதான் அறம்.
5. பொறாமை, பேராசை, ஆங்காரம், கொடுஞ் சொல் இந்த நான்கும் அறப்பண்புக்கு எதிரிகள்.
6. ஒழுக்கத்தை நாளைக்குப் பார்த்துக் கொள்ளலாம் என்று ஒத்தி போடக்கூடாது.
7. வாழ்க்கையில் வசதி — வசதியின்மை இவற்றை வைத்து தருமத்தை எடைபோடக் கூடாது.
8. தொடர்ந்து நல்லதே செய்பவர்களுக்கு பிறவித் துன்பம் இல்லை.
9. நீதிநெறி பிறழாமைதான் இன்பம். அதுதான் உண்மையான புகழ்.
10. ஒவ்வொரு செயலும் நல்ல செயலாகவே இருக்க வேண்டும்.

# 2. இல்லறவியல்

## 5. இல்வாழ்க்கை

1. இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை.

2. துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை.

3. தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை.

4. பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல்.

5. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

6. அறத்தாற்றின் இல்வாழ்க்கை யாற்றின் புறத்தாற்றிற்
போஒய்ப் பெறுவது எவன்.

7. இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாம் தலை.

8. ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை உடைத்து.

9. அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன்பழிப்பது இல்லாயின் நன்று.

10. வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.

# 2. இல்லறவியல்

## 5. இல்வாழ்க்கை

1. குடும்ப வாழ்க்கைதான் எல்லோரையும் காப்பாற்றுகிறது.
2. அநாதைகள், வறியவர்கள், கூன் குருடு எல்லோருக்குமே துணை குடும்பம் நடத்து கிறவன்தான்.
3. முதியோர், குருக்கள், உறவினர் எல்லோரை யும் ஆதரிக்கிறான் குடும்பம் நடத்துகிறவன்.
4. பிறர் பசியை ஆற்றுகிறவன் பரம்பரை செழிப்பாக இருக்கும்.
5. குடும்ப வாழ்க்கைக்கு அன்பு ஒரு கண். தருமம் ஒரு கண்.
6. குடும்ப வாழ்க்கையை நல்ல படியாக நடத்தினால் போதும். அதுதான் தவம்.
7. சிறப்பாகக் குடும்பம் நடத்துகிறவன்தான் கடமையை நிறைவேற்றும் மனிதன்.
8. தவத்தில் எல்லாம் மேலான தவம் பண்பட்ட குடும்ப வாழ்க்கைதான்.
9. தர்ம நெறி - சத்திய நெறி என்றாலே குடும்ப வாழ்க்கைதான்.
10. நல்ல படியாகக் குடும்பம் நடத்துகிறவன் சிறந்த தெய்வப் பிறவி.

# 6. வாழ்க்கைத் துணைநலம்

1. மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.

2. மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித் தாயினும் இல்.

3. இல்லதென் இல்லவள் மாண்பானாள் உள்ளதென்
இல்லவள் மாணாக் கடை

4. பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மையுண் டாகப் பெறின்.

5. தெய்வந் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை.

6. தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்.

7. சிறைகாக்குங் காப்புஎவன் செய்யும் மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை.

8. பெற்றாற் பெறின்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு.

9. புகழ்புரிந்த இல்லிலோர்க்கு இல்லை இகழ்வார்முன்
ஏறுபோல் பீடு நடை.

10. மங்கலம் என்ப மனைமாட்சி மற்றுஅதன்
நன்கலம் நன்மக்கட் பேறு.

## 6. வாழ்க்கைத் துணைநலம்

1. குடும்பத்துக்கு ஏற்ற மனைவிதான் வாழ்க்கையில் யோகம்.
2. குடும்பப்பாங்கு பெண்ணிடம் இல்லை என்றால் வாழ்க்கையில் ஒன்றும் இல்லை.
3. மனைவி நல்லவளாக வாய்த்து விட்டால் போதும். எல்லாம் வாய்த்துவிடும்.
4. குடும்பப் பொறுப்பில் உறுதியுடைய பெண்ணுக்கு நிகராக எதுவும் இல்லை.
5. உத்தமப் பெண்ணுக்கு கணவன் கண்கண்ட தெய்வம்.
6. தன் கணவன் பெருமையையும் பாதுகாப்ப வளே பெண்.
7. மன உறுதி உள்ள பெண்ணுக்கு ஒரு பாதுகாப்பும் வேண்டாம்.
8. கணவன் பெருமையால் புகழ் பெறுகிறாள் பெண்.
9. குடும்ப வாழ்க்கையை ஒழுங்காக நடத்துவது தான் பெருமை.
10. உயர்ந்த மனைவி சிறந்த புதல்வர் இரண்டுந்தான் வாழ்க்கை.

# 7. மக்கட் பேறு

1. பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த
மக்கட்பேறு அல்ல பிற.

2. எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்.

3. தம்பொருள் என்பதம் மக்கள் அவர்பொருள்
தம்தம் வினையான் வரும்.

4. அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்
சிறுகை அளாவிய கூழ்.

5. மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றுஅவர்
சொற்கேட்டல் இன்பம் செவிக்கு.

6. குழல்இனிது யாழ்இனிது என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்.

7. தந்தை மகற்குஆற்றும் நன்றி அவையத்து
முந்தி யிருப்பச் செயல்.

8. தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது.

9. ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்.

10. மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை
என்னோற்றான் கொல்எனுஞ் சொல்.

# 7. மக்கட் பேறு

1. அறிவுள்ள பிள்ளையாய் வளர வேண்டும். அதுதான் தலைசிறந்த பாக்கியம்.
2. பண்புள்ள பிள்ளைகளைப் பெற்று வளர்த்தவன் புகழ் மங்காது.
3. குழந்தைகள்தாம் உண்மையான செல்வம்.
4. குழந்தையானது அளைந்து பிசைந்த உணவு அமிழ்தம்தான்.
5. குழந்தைகள் தொட்டாலே புளகாங்கிதந் தான். அவர்கள் மழலைச் சொல்தான் தேவகானம்.
6. எந்த இசையும் குழந்தையின் பேச்சின் பக்கம் வரமுடியாது.
7. தகப்பனுடைய கடமை மகனை அறிஞனாக்குவது.
8. தன்னைவிட தன் பையன் கெட்டிக்காரன் என்று பெயர் எடுக்க வேண்டும்.
9. பிள்ளையின் பெருமை காதில் விழவிழ தாய்க்குப் பரவசம் உண்டாகும்.
10. மகன் செய்ய வேண்டிய கடமை "இன்னார் மகன் அல்லவா இவன்" என்கிற பெயர்தான்.

# 8. அன்புடைமை

1. அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கண்ணீர் பூசல் தரும்.

2. அன்பிலார் எல்லாந் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு.

3. அன்போடு இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு
என்போடு இயைந்த தொடர்பு.

4. அன்புஈனும் ஆர்வம் உடைமை அதுஈனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு.

5. அன்புற்று அமர்ந்த வழக்கென்ப வையகத்து
இன்புற்றார் எய்துஞ் சிறப்பு.

6. அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை.

7. என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை அறம்.

8. அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்று.

9. புறத்தறுப் பெல்லாம் எவன்செய்யும் யாக்கை
அகத்துறுப்பு அன்பி லவர்க்கு.

10. அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு.

# 8. அன்புடைமை

1. அன்பைக் கட்டுப்படுத்த முடியாது.

2. உயிரை மட்டுமல்ல உடம்பையே கொடுத்துதவும் அன்பு.

3. உடம்புக்கும் உயிருக்கும் உள்ள உறவு – அன்பின் அடையாளம்.

4. அன்பிலிருந்து ஆர்வமும், ஆர்வத்திலிருந்து மெய்யுணர்வும் பிறக்கும்.

5. அன்பு இல்லை என்றால் ஆனந்தமும் இல்லை.

6. கோபத்தின் மூலம் கொடுமை நிகழ்வதற்கும் அன்புதான் காரணம்.

7. அன்பில்லாதவனை கொதிக்கும் எண் ணெய்ச் சட்டியில் போடுவான் எமன்.

8. அன்பில்லாத குடும்பம் காய்ந்து பட்டுப்போன மரம்.

9. அன்பின் அழகே அழகு.

10. அன்புள்ளவன்தான் மனிதன். அன்பில்லாத வன் செத்த பிணந்தான்.

# 9. விருந்தோம்பல்

1. இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு.

2. விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று.

3. வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதல் இன்று.

4. அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து
நல்விருந்து ஓம்புவான் இல்.

5. வித்தும் இடல்வேண்டும் கொல்லோ விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம்.

6. செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு.

7. இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்
துணைத்துணை வேள்விப் பயன்.

8. பரிந்தோம்பிப் பற்றற்றேம் என்பர் விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார்.

9. உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா
மடமை மடவார்கண் உண்டு.

10. மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து.

# 9. விருந்தோம்பல்

1. விருந்தினர்களை மகிழ்வித்து உபசரிப்பது தான் குடும்ப லட்சணம்.
2. அமிர்தமாக இருந்தாலும் விருந்தினரோடு சேர்ந்து சாப்பிட வேண்டும்.
3. விருந்தினர்களை மகிழ்விக்க வாழ்க்கையில் மங்களம் பெருகும்.
4. வரவேற்று உபசரிக்கிறவன் வீட்டில் லட்சுமி கடாட்சம் தாண்டவம் ஆடும்.
5. விருந்தினர்களை உபசரிக்கிறவன் நிலத்தில் விளைச்சல் வருஷாவருஷம் கூடும்.
6. விருந்தினரை எதிர் பார்பவனை தெய்வமே பாராட்டும்.
7. விருந்துதான் வேள்வி. அதன் பெருமைக்கு அளவே இல்லை.
8. விருந்தினரை உபசரிக்காதவன் செல்வம் மாயமாய் மறைந்துவிடும்.
9. விருந்தினரை உபசரிக்காதவன் மடையன். இருந்தும் இல்லாத தரித்திரன்.
10. அனிச்சப் பூவை விட மென்மையானவர்கள் நம்மை நாடி வரும் விருந்தினர்.

# 10. இனியவை கூறல்

1. இன்சொலால் ஈரம் அளைஇப் படிறுஇலவாஞ்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்.

2. அகனமர்ந்து ஈதலின் நன்றே முகனமர்ந்து
இன்சொல னாகப் பெறின்.

3. முகத்தான் அமர்ந்துஇனிது நோக்கி அகத்தானாம்
இன்சொ லினதே அறம்.

4. துன்புறூஉந் துவ்வாமை இல்லாகும் யார்மாட்டும்
இன்புறூஉம் இன்சொ லவர்க்கு.

5. பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு
அணியல்ல மற்றுப் பிற.

6. அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை
நாடி இனிய சொலின்.

7. நயன்ஈன்று நன்றி பயக்கும் பயன்ஈன்று
பண்பின் தலைப்பிரியாச் சொல்.

8. சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்
இம்மையும் இன்பந் தரும்.

9. இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது.

10. இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.

# 10. இனியவை கூறல்

1. அருளும் அன்பும் இருந்தால் வார்த்தையில் இனிமை இருக்கும்.
2. மனம் திறந்து பேசுவது, அள்ளிக் கொடுப்பதை விட மேல்.
3. பார்வையில் கனிவு பேச்சில் குளுமை இதுதான் அறம்.
4. இனிமையாகவே ஒருவன் பேசினால் அவனுக்கு யாதொரு கஷ்டமும் இல்லை.
5. பணிவும் இன்சொல்லுமே அழகு. நகை அழகு அதன் பின்னேதான்.
6. நல்ல கருத்தை இனிமையாகச் சொன்னால் பாவம் கரையும் புண்ணியம் பெருகும்.
7. நல்ல சொல்லை நல்லபடியாகச் சொன்னால் புண்ணியம் வேறு செய்ய வேண்டாம்.
8. தன்னலம் இல்லாத இன்சொல் இம்மைக்கும் துணை மறுமைக்கும் துணை.
9. இனிமையாகப் பேசுவது ஆனந்தம் என்று தெரிந்தும் ஏன் கடுமையாகப் பேசுகிறார்கள்?
10. மாம்பழம் வேண்டாம் என்று வேப்பம் பழத்தைத் தின்பது மடத்தனம். கடுஞ் சொல்லும் அப்படியே.

# 11. செய்ந்நன்றி அறிதல்

1. செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்ற லரிது.

2. காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது.

3. பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலிற் பெரிது.

4. தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார்.

5. உதவி வரைத்தன்று உதவி உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து.

6. மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க
துன்பத்துள் துப்பாயார் நட்பு.

7. எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்
விழுமந் துடைத்தவர் நட்பு.

8. நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று.

9. கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த
ஒன்றுநன்று உள்ளக் கெடும்.

10. எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

## 11. செய்ந்நன்றி அறிதல்

1. ஒன்றையும் எதிர்பாராமல் ஒருவர் செய்த உதவிக்கு இணையாக வானமும் இல்லை. பூமியும் இல்லை.
2. தக்க சமயத்தில் கிடைத்த உதவி பூமியை விடப் பெரியது.
3. பலனை நினைக்காமல் ஒருவர் செய்த உதவி கடலைவிடப் பெரியது.
4. தினை அளவு சிறிய உதவியையும் பனை அளவு பெரிதாக மதிப்பார்கள் நல்லவர்கள்.
5. நல்லவர்களுக்குச் செய்த உதவிக்கு அளவற்ற சிறப்பு உண்டு.
6. ஆபத்தில் உதவியவர்கள் உறவை விடக் கூடாது.
7. ஒருவர் செய்த உதவியை ஏழேழு பிறவிக்கும் நினைப்பார்கள் நல்லவர்கள்.
8. நல்ல காரியத்தை மாறி மாறி நினைக்க வேண்டும். கெட்டதை மறந்துவிடவேண்டும்.
9. உதவி செய்தவன் விரோதியானாலும் அவன் உதவியை மறக்கக் கூடாது.
10. செய்ந்நன்றி மறந்தவன் உருப்படவே மாட்டான்.

# 12. நடுவுநிலைமை

1. தகுதி எனவொன்று நன்றே பகுதியால்
பாற்பட்டு ஒழுகப் பெறின்.

2. செப்பம் உடையவன் ஆக்கஞ் சிதைவின்றி
எச்சத்திற் கேமாப்பு உடைத்து.

3. நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை
அன்றே ஒழிய விடல்.

4. தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப் படும்.

5. கேடும் பெருக்கமும் இல்லல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க் கணி.

6. கெடுவல்யான் என்பது அறிகதன் நெஞ்சம்
நடுஒரீஇ அல்ல செயின்.

7. கெடுவாக வையாது உலகம் நடுவாக
நன்றிக்கண் தங்கியான் தாழ்வு.

8. சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி.

9. சொற்கோட்டம் இல்லது செப்பம் ஒருதலையா
உட்கோட்டம் இன்மை பெறின்.

10. வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தமபோற் செயின்.

## 12. நடுவுநிலைமை

1. ஞாயம் ஒன்றுதான் வாழ்க்கைக்கு குறிக்கோள்.
2. நேர்மை தவறாதவன் குடும்பம் ஆனந்தமாக இருக்கும்.
3. லாபம் கிடைத்தாலும் ஞாயத்துக்கு விரோதமாக நடக்கக் கூடாது.
4. நீதிமானா வஞ்சகனா என்பதை அவனுக்குப் பின் அவன் பேர் சொல்லும்.
5. வாழ்க்கையில் ஞாயத்தை விட்டுக் கொடுக்கக் கூடாது.
6. நெறிமுறையை மீறினால் தொல்லைக்குமேல் தொல்லைதான்.
7. ஞாயமுடையவன் ஏழையாக இருந்தாலும் அவனையே மற்றவர்கள் மதிப்பார்கள்.
8. தராசுமுள் போல நேர்மை இருக்க வேண்டும்.
9. சொல்லில் பிரட்டு செயலில் உருட்டு இரண்டும் கூடவே கூடாது.
10. பணத்துக்குத் தக்க சாமான்தரும் வியாபாரிபோல் மனச்சாட்சிக்குத் தக்கபடி நடக்கவேண்டும்.

# 13. அடக்கமுடைமை

1. அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும்.

2. காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்
அதனினூஉங் கில்லை உயிர்க்கு.

3. செறிவறிந்து சீர்மை பயக்கும் அறிவறிந்து
ஆற்றின் அடங்கப் பெறின்.

4. நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது.

5. எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்
செல்வர்க்கே செல்வந் தகைத்து.

6. ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து

7. யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.

8. ஒன்றானும் தீச்சொல் பொருட்பயன் உண்டாயின்
நன்றாகா தாகி விடும்.

9. தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு.

10. கதங்காத்துக் கற்றடங்கல் ஆற்றுவான் செவ்வி
அறம்பார்க்கும் ஆற்றின் நுழைந்து.

## 13. அடக்கமுடைமை

1. அடக்கம் உடையவன் ஞானி. அது இல்லாதவன் பேய்.
2. அடக்கந்தான் உயர்ந்த செல்வம்.
3. அடக்கம் உடையவனை எல்லோரும் மதிப்பார்கள்.
4. பொறுமையும் அடக்கமும் உடையவன் பதற மாட்டான். மலையை விட உறுதியாக நிற்பான்.
5. மரியாதைதான் செல்வம். செல்வத்துள் செல்வம் என்றால் அதுதான்.
6. ஆமை போல் அடக்கமுடையவனுக்கு எப்பொழுதும் கவலை இல்லை.
7. பணம் போனாலும் பரவாயில்லை. சொல்லைச் சிதறவிடக் கூடாது.
8. பொறுப்பற்ற சொல் பல கொடுமைகளை உண்டாக்கிவிடும்.
9. தீப்புண்ணைவிட சொல்லால் வரும் புண் கொடியது.
10. அடக்கமுடையன் வீட்டு விலாசத்தை விசாரித்து லட்சுமி தேவி தேடி வருவாள்.

# 14. ஒழுக்கமுடைமை

1. ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.

2. பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்தோம்பித்
தேரினும் அஃதே துணை.

3. ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்.

4. மறப்பினும் ஒத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்.

5. அழுக்கா றுடையான்கண் ஆக்கம்போன்று இல்லை
ஒழுக்க மிலான்கண் உயர்வு.

6. ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின்
ஏதம் படுபாக் கறிந்து.

7. ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி.

8. நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்.

9. ஒழுக்க முடையவர்க்கு ஒல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல்.

10. உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்.

## 14. ஒழுக்கமுடைமை

1. நம் உயிரைக் காட்டிலும் நமக்கு மேலானது நமது ஒழுக்கந்தான்.
2. ஒழுக்கத்தைப் பாதுகாத்துப் பேண வேண்டும். அதுதான் நமக்கு உற்றதுணை.
3. வாழ்க்கைக்குப் பொலிவு கொடுப்பது ஒழுக்கம் ஒன்றுதான்.
4. ஞான நூலை விட ஒழுக்கமே முக்கியம்.
5. பொறுமை இல்லாதவன் தரித்திரன். ஒழுங்கில்லாதவன் அற்பன்.
6. நல்லவர்கள் எதை இழந்தாலும் ஒழுக்கத்தை இழக்கமாட்டார்கள்.
7. ஒழுக்கம் உயர்வு தரும். ஒழுங்கீனம் பழியைத் தரும்.
8. ஒழுக்கத்திலிருந்து நன்மை வரும். ஒழுங்கீனத்தி லிருந்து தீமை வரும்.
9. ஒழுக்கமுடையவர்களின் பேச்சில் நேர்மை இருக்கும். பித்தலாட்டம் இருக்காது.
10. சமுதாயத்தோடு ஒத்துப் போக முடியாதவன் படிப்பு என்ன படிப்பு?

# 15. பிறனில் விழையாமை

1. பிறன்பொருளாள் பெட்டொழுகும் பேதமை ஞாலத்து
அறம்பொருள் கண்டார்கண் இல்.

2. அறன்கடை நின்றாருள் எல்லாம் பிறன்கடை
நின்றாரின் பேதையார் இல்.

3. விளிந்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தாரில்
தீமை புரிந்துஒழுகு வார்.

4. எனைத்துணையர் ஆயினும் என்னாம்
தினைத்துணையும்
தேரான் பிறனில் புகல்.

5. எளிதென இல்லிறப்பான் எய்துமெஞ் ஞான்றும்
விளியாது நிற்கும் பழி.

6. பகைபாவம் அச்சம் பழியென நான்கும்
இகவாவாம் இல்லிறப்பான் கண்.

7. அறனியலான் இல்வாழ்வான் என்பான் பிறனியலாள்
பெண்மை நயவா தவன்.

8. பிறன்மனை நோக்காத பேராண்மை, சான்றோர்க்கு
அறனொன்றோ ஆன்ற ஒழுக்கு.

9. நலக்குரியார் யாரெனின் நாமநீத் வைப்பின்
பிறற்குரியாள் தோள்தோயா தார்.

10. அறன்வரையான் அல்ல செயினும் பிறன்வரையாள்
பெண்மை நயவாமை நன்று.

# 15. பிறனில் விழையாமை

1. ஒருவனுக்கு மனைவி. மற்றவர்களுக்குத் தெய்வம். தெய்வத்தின் மேல் கெட்ட நினைப்பு வரலாமா?
2. பெண்களின் மேல் கெட்ட நினைப்பு உடையவன் கயவன்.
3. பெண் விஷயத்தில் நம்பிக்கைத் துரோகம் செய்கிறவன் ஒழிந்தான்.
4. இன்னொரு பெண்ணிடம் பல்லைக் காட்டுகிறவன் மனிதனா?
5. வாய்ப்பு இருக்கிறது என்று வர முறை மீறினால் நாசந்தான்.
6. பெரும்பாலான தீமைகளுக்குக் காரணம் பெண் விஷயத்தில் மாறுவதுதான்.
7. அடுத்தவன் மனைவியைத் தாயாக மதிக்கிறவன்தான் மனிதன்.
8. ஒழுக்கம், பண்பாடு, பக்தி எல்லாம் அடுத்த பெண்ணிடம் நடந்து கொள்கிற கட்டுப் பாட்டில் இருக்கிறது.
9. மற்றவன் மனைவியை மதிக்கவேண்டும். வசப்படுத்த நினைக்கிறவன் பழிபாவத்துக்கு அஞ்சாத திருடன்.
10. மனைவியையும் மற்றவர்களையும் மதித்தால் போதும். கோயில் கட்ட வேண்டாம், குளம் வெட்ட வேண்டாம்.

# 16. பொறையுடைமை

1. அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை.

2. பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை
மறத்தல் அதனினும் நன்று.

3. இன்மையுள் இன்மை விருந்தொரால் வன்மையுள்
வன்மை மடவார்ப் பொறை.

4. நிறையுடைமை நீங்காமை வேண்டின் பொறையுடைமை
போற்றி ஒழுகப் படும்.

5. ஒறுத்தாரை ஒன்றாக வையாரே வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து.

6. ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்.

7. திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து
அறனல்ல செய்யாமை நன்று.

8. மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தம்
தகுதியான் வென்று விடல்.

9. துறந்தாரின் தூய்மை உடையர் இறந்தார்வாய்
இன்னாச்சொல் நோற்கிற் பவர்.

10. உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும்
இன்னாச்சொல் நோற்பாரின் பின்.

## 16. பொறையுடைமை

1. ஒருவன் நம்மைத் தரக்குறைவாகத் திட்டு கிறான். அதைப் பொறுத்துக் கொள்வதுதான் பெருமை.
2. பொறுத்துக்கொள்வது நல்லது. அதை விட நல்லது அதை மறந்துவிடுவது.
3. அல்பர்களின் அவமரியாதையைத் தாங்கிக் கொள்வதுதான் வீரம்.
4. பொறுமை இருக்கிறவரை மனதில் அன்பும் அருளும் நிறைந்திருக்கும்.
5. பொறுமைசாலிகளை உலகம் மறக்காது.
6. அடித்தவனை திருப்பி அடிப்பது மனுச காரியம். மன்னித்து விடுவதோ தெய்வ காரியம்.
7. கீழோர் கீழான காரியந்தான் செய்வார்கள். மேலோர் அதைத் தாங்க வேண்டியதுதான்.
8. ஆணவக் கொழுப்பில் அடாவடித்தனம் பண்ணுபவனை பெருந்தன்மையால் லகுவில் சமாளிக்க முடியும்.
9. சகிப்புத் தன்மை உடையவன் ஞானியை விட மேலானவன்.
10. உண்ணாவிரதம் இருக்கும் தியாக மூர்த்தி களைவிட அவமரியாதையைத் தாங்கு கிறவன் உயர்ந்தவன்.

# 17. அழுக்காறாமை

1. ஒழுக்காறாக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்து
அழுக்காறு இலாத இயல்பு.

2. விழுப்பேற்றின் அஃதொப்பது இல்லையார் மாட்டும்
அழுக்காற்றின் அன்மை பெறின்.

3. அறன்ஆக்கம் வேண்டாதான் என்பான் பிறனாக்கம்
பேணாது அழுக்கறுப் பான்.

4. அழுக்காற்றின் அல்லவை செய்யார் இழுக்காற்றின்
ஏதம் படுபாக்கு அறிந்து.

5. அழுக்காறு உடையார்க்கு அதுசாலும் ஒன்னார்
வழுக்கியும் கேடீன் பது.

6. கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூஉம் இன்றிக் கெடும்.

7. அவ்வித்து அழுக்காறு உடையானைச் செய்யவள்
தவ்வையைக் காட்டி விடும்.

8. அழுக்காறு எனஒரு பாவி திருச்செற்றுத்
தீயுழி உய்த்து விடும்.

9. அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமுஞ் செவ்வியான்
கேடும் நினைக்கப் படும்.

10. அழுக்கற்று அகன்றாரும் இல்லைஅஃது இல்லார்
பெருக்கத்தில் தீர்ந்தாரும் இல்.

# 17. அழுக்காறாமை

1. *பொறாமையை விட்டுவிட்டால் போதும். அதுதான் அறம்.*
2. *பொறாமை இல்லை என்றால் பிறகு தவம் எதற்கு யோகம் எதற்கு?*
3. *பொறாமை உள்ளவன் உருப்படவே மாட்டான்.*
4. *பொறாமைதான் பாவத்துக்கு வித்து. இது தெரிந்தால் போதும், அன்பு ஊறும்.*
5. *பொறாமைக்காரன் அந்தப் பொறாமையாலேயே அழிவான்.*
6. *உதவியைத் தடுக்கிறவன் குடும்பம் அநாதை யாகிவிடும்.*
7. *பொறாமை உள்ளவன் மனமும் வீடும் மூதேவிக்கு இருப்பிடம்.*
8. *பொறாமை என்பது ஒரு அரக்கன். சண்டாளன். அவன் குழியில் தள்ளி விடுவான்.*
9. *பொறாமைக்காரன் வசதியாக இருக்கிறான் என்றால் அது ஒரு விநோதந்தான்.*
10. *பொறாமை இல்லாதவன் கஷ்டப்பட மாட்டான். கஷ்டம் வந்தாலும் விலகிவிடும்.*

# 18. வெஃகாமை

1. நடுவின்றி நன்பொருள் வெஃகின் குடிபொன்றிக்
குற்றமும் ஆங்கே தரும்.

2. படுபயன் வெஃகிப் பழிப்படுவ செய்யார்
நடுவன்மை நாணு பவர்.

3. சிற்றின்பம் வெஃகி அறனல்ல செய்யாரே
மற்றின்பம் வேண்டு பவர்.

4. இலமென்று வெஃகுதல் செய்யார் புலம்வென்ற
புன்மையில் காட்சி யவர்.

5. அஃகி அகன்ற அறிவென்னாம் யார்மாட்டும்
வெஃகி வெறிய செயின்.

6. அருள்வெஃகி ஆற்றின்கண் நின்றான்
பொருள்வெஃகிப்
பொல்லாத சூழக் கெடும்.

7. வேண்டற்க வெஃகியாம் ஆக்கம் விளைவயின்
மாண்டற் கரிதாம் பயன்.

8. அஃகாமை செல்வத்திற்கு யாதெனின் வெஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள்.

9. அறனறிந்து வெஃகா அறிவுடையார்ச் சேரும்
திறன்அறிந் தாங்கே திரு.

10. இறல்ஈனும் எண்ணாது வெஃகின் விறல்ஈனும்
வேண்டாமை என்னுஞ் செருக்கு.

## 18. வெஃகாமை

1. அடுத்தவன் பொருளை அபகரித்தால் குடும்பத்துக்கு நாசந்தான்.
2. நல்லவர்கள் இன்னொருவன் பொருளை வஞ்சகம் பண்ணமாட்டார்கள்.
3. லாபம் என்று நினைத்து அடுத்தவனை ஏமாற்ற மாட்டார்கள் உத்தமர்கள்.
4. கஷ்டம் வந்தாலும் அடுத்தவன் பொருளுக்கு ஆசைப்படக்கூடாது.
5. பிறன் பொருளை வஞ்சிக்கிறவன் படித்து என்ன பலன்?
6. மற்றவன் செல்வத்தைக் கைப்பற்ற நினைக்கிறவன் ஒழிந்தே போவான்.
7. வஞ்சனையால் வந்த செல்வம் வஞ்சகம் செய்து விடும்.
8. வஞ்சகம் இல்லாதவனுக்கு யாதொரு குறையும் வராது.
9. வஞ்சனை இல்லாதவனைத் தேடி வருவாள் லட்சுமி.
10. ஞாயம் ஒன்றுதான் வெற்றி. அநியாயம் என்றைக்கும் வீழ்ச்சிதான்.

# 19. புறங்கூறாமை

1. அறங்கூறான் அல்ல செயினும் ஒருவன்
புறங்கூறான் என்றல் இனிது.

2. அறனழீஇ அல்லவை செய்தலின் தீதே
புறனழீஇப் பொய்த்து நகை.

3. புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலின் சாதல்
அறங்கூறும் ஆக்கம் தரும்.

4. கண்ணின்று கண்ணறச் சொல்லினும் சொல்லற்க
முன்னின்று பின்நோக்காச் சொல்.

5. அறஞ்சொல்லும் நெஞ்சத்தான் அன்மை புறஞ்சொல்லும்
புன்மையாற் காணப் படும்.

6. பிறன்பழி கூறுவான் தன்பழி யுள்ளும்
திறன்தெரிந்து கூறப் படும்.

7. பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி
நட்பாடல் தேற்றா தவர்.

8. துன்னியார் குற்றமும் தூற்றும் மரபினார்
என்னைகொல் ஏதிலார் மாட்டு.

9. அறன்நோக்கி ஆற்றுங்கொல் வையம் புறன்நோக்கிப்
புன்சொல் உரைப்பான் பொறை.

10. ஏதிலார் குற்றம்போல் தங்குற்றங் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு.

## 19. புறங்கூறாமை

1. கோள் சொல்லி உறவைக் கெடுப்பது பாவம். கோள் சொல்லாதவன் புண்ணியவான்.
2. கோள் சொல்வது போலக் கொடுமை ஒன்றுமே இல்லை.
3. கோள் சொல்லிப் பிழைப்பை நடத்துவதை விடச் செத்து மடிவது நல்லது.
4. நேருக்கு நேராக என்ன வேண்டுமானாலும் சொல்லலாம். ஆனால்....
5. கோள் சொல்கிறவனா, அவன் ஒரு சண்டாளன்தான்.
6. தன்னுடைய காரியம் இன்னதென்று தெரிந் தால், மற்றவனைப் பற்றிப் புறம் பேசுவானா?
7. ஆனந்தம் இன்னதென்று தெரியாதவன்தான் கோள் மூட்டிப்பகை உண்டாக்குவான்.
8. பழகுகிறவனையே கோள் சொல்கிறவன். மற்றவர்களை விடுவானா?
9. கோள் சொல்கிறவனை இந்த உலகம் எப்படித்தான் தாங்குகிறதோ?
10. தன்னுடைய குணம் இன்னதென்று தெரிய வேண்டும். தெரிந்தால் மனுசனாகிவிடுவான்.

## 20. பயனில சொல்லாமை

1. பல்லார் முனியப் பயனில சொல்லுவான்
எல்லாரும் எள்ளப் படும்.

2. பயனில பல்லார்முன் சொல்லல் நயனில
நட்டார்கண் செய்தலின் தீது.

3. நயனிலன் என்பது சொல்லும் பயனில
பாரித் துரைக்கும் உரை.

4. நயன்சாரா நன்மையின் நீக்கும் பயன்சாராப்
பண்பில்சொல் பல்லா ரகத்து.

5. சீர்மை சிறப்பொடு நீங்கும் பயனில
நீர்மை யுடையார் சொலின்.

6. பயனில்சொல் பாராட்டு வானை மகன்எனல்
மக்கட் பதடி யெனல்.

7. நயனில சொல்லினுஞ் சொல்லுக சான்றோர்
பயனில சொல்லாமை நன்று.

8. அரும்பயன் ஆயும் அறிவினார் சொல்லார்
பெரும்பயன் இல்லாத சொல்.

9. பொருள்தீர்ந்த பொச்சாந்துஞ் சொல்லார் மருள்தீர்ந்த
மாசறு காட்சி யவர்.

10. சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்.

# 20. பயனில சொல்லாமை

1. கேட்பவர்கள் வெறுக்கும் படி பேசுகிறவன் மநுசனா?
2. வெற்றுரையாளன்தான் நயவஞ்சகன்.
3. இவன் ஒரு மோசடிக்காரன் என்று காட்டிக் கொடுக்கும் அவன் வெற்றுரை.
4. வெற்றுரையில் சிக்கிவிட்டால் பிறகு பித்தலாட்டத்திலிருந்து மீள முடியாது.
5. நல்லவர்களையும் கெடுத்து விடும் வெற்றுரை.
6. வெற்றுரை பேசுகிறவன் பயிரில் முளைத்த களை.
7. கொடுஞ்சொல்லை விட மோசமானது வெற்றுரை.
8. அறிஞர்கள் வெற்றுரைக்கு இடம் கொடுக்க மாட்டார்கள்.
9. நல்லவர்கள் மறந்தும வெற்றுரை சொல்ல மாட்டார்கள்.
10. பேசினால் பொருளோடு பேச வேண்டும். இல்லை என்றால் பேசாமல் இருக்க வேண்டும்.

# 21. தீவினையச்சம்

1. தீவினையார் அஞ்சார் விழுமியார் அஞ்சுவர்
தீவினை என்னுஞ் செருக்கு.

2. தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும்.

3. அறிவினுள் எல்லாந் தலையென்ப தீய
செறுவார்க்கும் செய்யா விடல்.

4. மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறஞ்சூழும் சூழ்ந்தவன் கேடு.

5. இலன்என்று தீயவை செய்பற்க செய்யின்
இலனாகும் மற்றும் பெயர்த்து.

6. தீப்பால தான்பிறர்கண் செய்யற்க நோய்ப்பால
தன்னை அடல்வேண்டா தான்.

7. எனைப்பகை யுற்றாரும் உய்வர் வினைப்பகை
வீயாது பின்சென்று அடும்.

8. தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை
வீயாது அடிஉறைந் தற்று.

9. தன்னைத்தான் காதல னாயின் எனைத்தொன்றும்
துன்னற்க தீவினைப் பால்.

10. அருங்கேடன் என்பது அறிக மருங்கோடித்
தீவினை செய்யான் எனின்.

## 21. தீவினையச்சம்

1. கொடியவனுக்கு கொடுமை செய்வதுதான் தொழில்.
2. வெறுப்பிலிருந்து வெறுப்புத்தான் விளையும். கொடுமையும் அப்படித்தான்.
3. ஒருவன் செய்வது கொடுமை என்று தெரிந்தும் அவனை மன்னிப்பதுதான் ஞானம்.
4. கெட்ட நினைப்பு வரவே கூடாது. வந்தால் தொலைந்தது வாழ்க்கை.
5. அவசியத்துக்காக கேடு செய்தேன் என்கிற சமாதானம் எடுபடாது.
6. மற்றவர்களைக் கெடுத்தவன் கெட்டே போவான்.
7. எமனிடமிருந்து தப்பினாலும் தப்பலாம். செய்த கொடுமையிலிருந்து தப்ப முடியாது.
8. காலடி நிழல் போல் செய்த கொடுமை சுற்றிச் சுற்றி வரும்.
9. தானும் தன் குடும்பமும் வாழ வேண்டும் என்றால் மற்றவனை வாழ விட வேண்டும்.
10. மற்றவர்களுக்கு மனத்தாலும் கேடு நினைக்காதவன் சந்தோஷமாக இருப்பான்.

# 22. ஒப்புரவறிதல்

1. கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு
என்ஆற்றுங் கொல்லோ உலகு.

2. தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு.

3. புத்தே ளுலகத்தும் ஈண்டும் பெறலரிதே
ஒப்புரவின் நல்ல பிற.

4. ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்.

5. ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு.

6. பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கண் படின்.

7. மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின்.

8. இடனில் பருவத்தும் ஒப்புரவிற்கு ஒல்கார்
கடனறி காட்சி யவர்.

9. நயனுடையான் நல்கூர்ந்தா னாதல் செயும்நீர
செய்யாது அமைகலா வாறு.

10. ஒப்புரவி னால்வரும் கேடெனின் அஃதொருவன்
விற்றுக்கோள் தக்க துடைத்து.

## 22. ஒப்புரவறிதல்

1. கடமை உணர்வு உள்ளவன் பருவ மழை மாதிரி.
2. சம்பாதிப்பது எதற்கு? நல்லவர்களுக்குக் கொடுக்கத்தானே?
3. பிறரையும் தன்னைப் போல் நினைக்கிற வனுக்கு இணையாக எதுவும் இல்லை.
4. பேதம் இல்லாமல் நடந்து கொள்கிறவன் தான் மனிதன். மற்றவன் நடை பிணம்.
5. நல்லவன் கையில் உள்ள பணம் ஊருணி நீர் போலப் பயன்படும்.
6. உத்தமனுடைய செல்வம் பழுத்துச் சொரிகிற பொது மரம் மாதிரி.
7. உயிர் காக்கும் மரம் பொதுவாக இருப்பது மாதிரித்தான் பண்பாடுடையவன் செல்வம்.
8. கஷ்டம் வந்தாலும் கடமையை நிறைவேற்று வார்கள் சான்றோர்கள்.
9. உத்தமன் வறுமையில் வாடுவது இயற்கைக்கு விரோதம்.
10. பிறர்க்கு உதவுவதால் நஷ்டம் வரும் என்றால் வரட்டுமே என்பான் உத்தமன்.

# 23. ஈகை

1. வறியார்க்கொன்று ஈவதே ஈகைமற் றெல்லாம்
குறியெதிர்ப்பை நீர துடைத்து.

2. நல்லாறு எனினும் கொளல்தீது மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று.

3. இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலனுடையான் கண்ணே உள.

4. இன்னாது இரக்கப் படுதல் இரந்தவர்
இன்முகங் காணும் அளவு.

5. ஆற்றுவார் ஆற்றல் பசிஆற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின்.

6. அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி.

7. பாத்தூண் மரீஇ யவனைப் பசிஎன்னும்
தீப்பிணி தீண்டல் அரிது.

8. ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர்.

9. இரத்தலின் இன்னாது மன்ற நிரப்பிய
தாமே தமியர் உணல்.

10. சாதலின் இன்னாத தில்லை இனிததூஉம்
ஈதல் இயையாக் கடை.

# 23. ஈகை

1. வசதி இல்லாதவர்களுக்குக் கொடுப்பதுதான் தருமம். மற்றையவை வியாபாரம்.
2. இல்லாதவர்களுக்குக் கொடுப்பதுதான் இன்பம். வசதி இருந்தும் வாங்கிச் சேர்ப்பது கேவலம்.
3. முடிந்த அளவு கொடுத்தால் போதும். இல்லை என்று கையை விரிக்கக் கூடாது.
4. ஒன்றை எதிர் பார்க்கிறவர் அதைப் பெற்று மகிழ்வதைப் பார்ப்பதே ஆனந்தம்.
5. உண்ணாவிரதம் இருக்கும் முனிவரைவிட உணவு கொடுத்து பசி ஆற்றுகிறவன் மேல்.
6. மற்றவர் பசியை நீக்க நீக்க கணக்கில் புண்ணியம் ஏறும்.
7. பிறர் பசி ஆற்றுகிறவனிடம் தரித்திரபுத்தி இருக்காது.
8. கொடுத்துக் கொடுத்து ஆனந்தம் அடைவதை விட்டு விட்டு, சேர்த்துச் சேர்த்துப் பறி கொடுக்கிறானே பாவி.
9. அவ்வளவும் எனக்குத்தான் என்று நினைக்கிறவன் பெரிய பிச்சைக்காரன்.
10. மரணம் கொடியது. அதைவிடக் கொடியது மனம் இருந்தும் செய்ய வழி இல்லாத நிலை.

# 24. புகழ்

1. ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு.

2. உரைப்பார் உரைப்பவை எல்லாம் இரப்பார்க்கொன்று
ஈவார்மேல் நிற்கும் புகழ்.

3. ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பதொன்று இல்.

4. நிலவரை நீள்புகழ் ஆற்றின் புலவரைப்
போற்றாது புத்தேள் உலகு.

5. நத்தம்போல் கேடும் உளதாகும் சாக்காடும்
வித்தகர்க் கல்லால் அரிது.

6. தோன்றின் புகழோடு தோன்றுக அஃதில்லார்
தோன்றலின் தோன்றாமை நன்று.

7. புகழ்பட வாழாதார் தந்நோவார் தம்மை
இகழ்வாரை நோவது எவன்.

8. வசையென்ப வையத்தார்க் கெல்லாம் இசையென்னும்
எச்சம் பெறாஅ விடின்.

9. வசையிலா வண்பயன் குன்றும் இசையிலா
யாக்கை பொறுத்த நிலம்.

10. வசைஒழிய வாழ்வாரே வாழ்வார் இசையொழிய
வாழ்வாரே வாழா தவர்.

## 24. புகழ்

1. கொடுப்பதும், பாராட்டப்படுவதுமே வாழ்க்கை.
2. கொடையாளிகள் இல்லை என்றால் பாட்டேது? பாராட்டேது? கலை ஏது?
3. மனிதன் போய் விடுவான். ஆனால் புகழ் நிலைத்து நிற்கும்.
4. நல்லதையே ஒருவன் தொடர்ந்து செய்தால் தெய்வ வழிபாடு அவனுக்குத்தானே!
5. உடம்பு சுருங்கலாம். ஆனால் அருளாளர் களின் உள்ளம் சுருங்காது. புகழும் சுருங்காது.
6. பெயரை நிலைநாட்ட வேண்டும். இல்லை என்றால் ஒதுங்கி விட வேண்டும்.
7. புகழ் பெற்றவர்கள் மேல் பொறாமைப் படுவதில் புண்ணியம் இல்லை.
8. கடமையை நிறைவேற்றிப் புகழடையாதவன் பூமிக்குப் பாரம்.
9. புகழ் இல்லாத வெற்றுக் கூட்டம் பெருகப் பெருக பருவ மழை தவறும். விளைச்சலும் போய்விடும்.
10. வாழ்க்கைக்கு மணம் புகழ். மணமில்லாத வாழ்க்கை பிணம்.

# 3. துறவறவியல் – விரதம்

## 25. அருளுடைமை

1. அருட்செல்வம் செல்வத்துள் செல்வம்
பொருட்செல்வம்
பூரியார் கண்ணும் உள.
2. நல்லாற்றால் நாடி அருளாள்க பல்லாற்றால்
தேரினும் அஃதே துணை.
3. அருள்சேர்ந்த நெஞ்சினார்க் கில்லை இருள்சேர்ந்த
இன்னா உலகம் புகல்.
4. மன்னுயிர் ஓம்பி அருளாள்வாற்கு இல்லென்ப
தன்னுயிர் அஞ்சும் வினை.
5. அல்லல் அருளாள்வார்க்கு இல்லை வளிவழங்கும்
மல்லல்மா ஞாலம் கரி.
6. பொருள் நீங்கிப் பொச்சாந்தார் என்பர் அருள்நீங்கி
அல்லவை செய்தொழுகு வார்
7. அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை
பொருளில்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு.
8. பொருளற்றார் பூப்பர் ஒருகால் அருளற்றார்
அற்றார்மற் றாதல் அரிது.
9. தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றால் தேரின்
அருளாதான் செய்யும் அறம்.
10. வலியார்முன் தன்னை நினைக்கத்தான் தன்னின்
மெலியார்மேல் செல்லும் இடத்து.

# 3. துறவறவியல் – விரதம்

## 25. அருளுடைமை

1. அருள்தான் உண்மையான செல்வம்.
2. நன்மை செய்து செய்து அருளை வளர்க்க வேண்டும்.
3. துன்பம் துயரம் ஒன்றும் அருளாளர் கிட்டே வராது.
4. அருளில்லாதவன் பயப்படுவான். அருளாளன் தைர்யமாக இருப்பான்.
5. அருளாளர்கள் ஆனந்தமாகவே இருப்பார்கள் என்பதற்கு அருளில்லாதவர்கள் படும் தொல்லையே சாட்சி
6. அருளை விட்டவன் லட்சியம் என்னும் உறுதிப் பொருளை இழந்தவனாவான்.
7. பணம் இல்லை என்றால் வாழ்வு இல்லை. அருள் இல்லை என்றால் வாழ்க்கை இல்லை.
8. பணம் போனால் சம்பாதித்து விடலாம். அருள் போனால் அவ்வளவுதான்.
9. அருள் இல்லாதவன் செய்கிற தருமம் வெறும் ஏமாற்று.
10. எளியவர்களிடம் பரிவு காட்டவேண்டும்.

## 26. புலால் மறுத்தல்

1. தன்னூன் பெருக்கற்குத் தான்பிறிது ஊனுண்பான்
எங்ஙனம் ஆளும் அருள்.

2. பொருளாட்சி போற்றாதார்க்கு இல்லை அருளாட்சி
ஆங்கில்லை ஊன்தின் பவர்க்கு.

3. படைகொண்டார் நெஞ்சம்போல் நன்றூக்காது ஒன்றன்
உடல்சுவை உண்டார் மனம்.

4. அருளல்லது யாதெனில் கொல்லாமை கோறல்
பொருளல்லது அவ்வூன் தினல்.

5. உண்ணாமை உள்ளது உயிர்நிலை ஊனுண்ண
அண்ணாத்தல் செய்யாது அளறு.

6. தினற்பொருட்டால் கொல்லாது உலகெனின் யாரும்
விலைப்பொருட்டால் ஊன்தருவார் இல்.

7. உண்ணாமை வேண்டும் புலாஅல் பிறிதொன்றன்
புண்ணது உணர்வார்ப் பெறின்.

8. செயிரின் தலைப்பிரிந்த காட்சியார் உண்ணார்
உயிரின் தலைப்பிரிந்த ஊன்.

9. அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று.

10. கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்.

# 26. புலால் மறுத்தல்

1. உயிரைக் கொன்று உடம்பைத் தின்று கொழுப்பை வளர்க்கிறவனிடம் அருள் எப்படி இருக்கும்.
2. மாமிசம் சாப்பிடுகிறவனிடம் அருள் இருக்காது.
3. மாமிசத்தில் ருசிகண்டவனிம் ரத்தவெறிதான் இருக்கும்.
4. கொடுமையில் கொடுமை கொலை. அதைவிடக் கொடுமை அதை உண்ணல்.
5. கொன்று கொன்று தின்றவனுக்கு நரகந்தான் கதி.
6. மாமிசம் சாப்பிடுவது நின்றுவிட்டால் கசாப்புக் கடை யார் வைப்பார்கள்.
7. மாமிசம் சாப்பிடுகிறவனுக்கு அதனிடம் ஏன் அருவருப்பு ஏற்படவில்லை.
8. புத்தியில் தெளிவிருந்தால் மாமிசம் சாப்பிடுவார்களா?
9. ஒரு உயிரைக் கொல்லாமலிருந்தால் போதும். யாகமும் வேண்டாம் வேள்வியும் வேண்டாம்.
10. எறும்பு முதல் யானை வரை எல்லா உயிர் களும் மாமிசம் உண்ணாதவனை வாழ்த்தும்.

# 27. தவம்

1. உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு.

2. தவமும் தவமுடையார்க்கு ஆகும் அவம்அதனை
அஃதிலார் மேற்கொள் வது.

3. துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல்
மற்றை யவர்கள் தவம்.

4. ஒன்னார்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும்
எண்ணின் தவத்தான் வரும்.

5. வேண்டிய வேண்டியாங் கெய்தலால் செய்தவம்
ஈண்டு முயலப் படும்.

6. தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார்மற் றல்லார்
அவஞ்செய்வார் ஆசையுட் பட்டு.

7. சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பஞ்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு.

8. தன்னுயிர் தான்அறப் பெற்றானை ஏனைய
மன்னுயி ரெல்லாம் தொழும்.

9. கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட் டவர்க்கு.

10. இலர்பல ராகிய காரணம் நோற்பார்
சிலர்பலர் நோலா தவர்.

## 27. தவம்

1. சகிப்புத் தன்மை, தீமை செய்யாமை இவைதாம் தவம்.
2. புண்ணியம் செய்தவர்களுக்குத்தான் சத்தியமும் அஹிம்சையும் விளங்கும்.
3. தியாக மூர்த்திகளின் பெருமையை விளக்கவே பலர் தியாகம் செய்யாமல் இருக்கிறார்கள்.
4. தவவலிமை உடையவர்களால் ஆக்கவும் முடியும் அழிக்கவும் முடியும்.
5. தவம் செய்கிறவர்களால் நினைத்ததை நினைத்தபடி பெற முடியும்.
6. தமக்குரிய கடமையை முறைப்படி செய்வது தான் தவம்.
7. புடம் போட்ட தங்கம் போல தவமும் ஜொலிக்கும்.
8. தன் கடமையை உணர்ந்து செயல்படுகிற வனை உலகமே மதிக்கும்.
9. தவம் உடையவர்களிடம் எமனே பயப்படுவான்.
10. பணக்காரர் பலர் இருக்கலாம். ஆனால் அருளாளர் சிலர்தான் இருப்பார்கள்.

# 28. கூடா ஒழுக்கம்

1. வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும்.

2. வானுயர் தோற்றம் எவன்செய்யும் தன்நெஞ்சம்
தான்அறி குற்றம் படின்.

3. வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று.

4. தவமறைந்து அல்லவை செய்தல் புதல்மறைந்து
வேட்டுவன் புள்சிமிழ்த் தற்று.

5. பற்றற்றேம் என்பார் படிற்றொழுக்கம் எற்றெற்றென்று
ஏதம் பலவுந் தரும்.

6. நெஞ்சில் துறவார் துறந்தார்போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணார் இல்.

7. பறங்குன்றி கண்டனைய ரேனும் அகங்குன்றி
மூக்கிற் கரியார் உடைத்து.

8. மனத்தது மாசாக மாண்டார்நீ ராடி
மறைந்தொழுகு மாந்தர் பலர்.

9. கணைகொடிது யாழ்கோடு செவ்விதுஆங் கன்ன
வினைபடு பாலால் கொளல்.

10. மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்து விடின்.

# 28. கூடா ஒழுக்கம்

1. வஞ்சகன் தந்திரக்காரன்தான். ஆனாலும் அவன் தன் மனத்தை ஏமாற்ற முடியாது.
2. மனசில் வஞ்சகம் உடையவன் எவ்வளவு பெரிய வேஷம் போட்டாலும் புண்ணியம் இல்லை.
3. புலித்தோல் போர்த்திய பசுதான் வஞ்சகன்.
4. வேஷம் போட்டுப் பித்தலாட்டம் பண்ணு கிறவனைவிட கொலைகாரன் நல்லவன்.
5. காம வெறி பிடித்தவன் நான்தான் ஞானி என்று பசப்பினால் அதை நம்ப முடியுமா?
6. உதட்டளவில் மட்டும் ஞானம் பேசுகிறவன் கொடியவன்.
7. வஞ்சகனுடைய வேஷம் பளபள என்றாலும் எண்ணம் இருட்டாகவே இருக்கும்.
8. வேஷம் போட்டு ஒளிகிற வஞ்சகர்கள் அதிகம். ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் மக்கள்.
9. வாட்ட சாட்டமாக இருக்கும் அம்பு. அதை நம் பலாமா? வேஷத்தையும் நம்பக் கூடாது.
10. மனம் சுத்தமாக இருந்தால் கறுப்பு சிவப்பு கலர் என்னத்துக்கு? தாடி ஜடை ஒன்றும் வேண்டாம்.

# 29. கள்ளாமை

1. எள்ளாமை வேண்டுவான் என்பான் எனைத்தொன்றும்
கள்ளாமை காக்கதன் நெஞ்சு.

2. உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தால் கள்வேம் எனல்.

3. களவினால் ஆகிய ஆக்கம் அளவிறந்து
ஆவது போலக் கெடும்.

4. களவின்கண் கன்றிய காதல் விளைவின்கண்
வீயா விழுமம் தரும்.

5. அருள்கருதி அன்புடைய ராதல் பொருள்கருதிப்
பொச்சாப்புப் பார்ப்பார்கண் இல்.

6. அளவின்கண் நின்றொழுகல் ஆற்றார் களவின்கண்
கன்றிய காத லவர்.

7. களவென்னும் காரறி வாண்மை அளவென்னும்
ஆற்றல் புரிந்தார்கண் இல்.

8. அளவறிந்தார் நெஞ்சத் தறம்போல நிற்கும்
களவறிந்தார் நெஞ்சில் கரவு.

9. அளவல்ல செய்தாங்கே வீவர் களவல்ல
மற்றைய தேற்றா தவர்.

10. கள்வார்க்குத் தள்ளும் உயிர்நிலை கள்ளார்க்குத்
தள்ளாது புத்தே ளுலகு.

# 29. கள்ளாமை

1. திருட்டுப் புத்தி உடையவனை ஒருவரும் மதிக்க மாட்டார்கள்.
2. திருட வேண்டாம். திருட நினைத்தாலே பாவந்தான்.
3. லாபம் மாதிரி தெரியும். திருட்டுத்தனத்தில் நஷ்டந்தான் மிஞ்சும்.
4. திருட்டுத்தனத்தில் மனம் வைத்தவன் துன்பப் பட்டுக் கொண்டே இருப்பான்.
5. கேவலம் பொருளைத் திருட நினைக்கிறவன் அருளை எப்படி மதிப்பான்.
6. திருட்டுத் தனத்தில் மனம் வைத்து விட்டால் நெறிமுறை சிதறிவிடும்.
7. தன்னுணர்வு உடையவர்களிடம் திருட்டுப் புத்தி தலைகாட்டாது.
8. ஞானிகளிடம் நீதி இருக்கும். திருடனிடம் வஞ்சகம் இருக்கும்.
9. திருட்டுத்தனத்தையே தொழிலாக உடைய வனுக்கு திருட்டுத் தனந்தான் எமன்.
10. பயந்து பயந்து சாவான் திருடன். ஆனந்தத்தில் மிதப்பான் ஞானி.

# 30. வாய்மை

1. வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல்.

2. பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின்.

3. தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும்.

4. உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்து ளெல்லாம் உளன்.

5. மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு
தானஞ்செய் வாரின் தலை.

6. பொய்யாமை அன்ன புகழில்லை எய்யாமை
எல்லா அறமும் தரும்.

7. பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று.

8. புறத்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையால் காணப் படும்.

9. எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு.

10. யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற.

## 30. வாய்மை

1. உலக நன்மைக்கு உரிய ஒவ்வொரு சொல்லும் சத்திய வாக்குத்தான்.
2. உலக நன்மை என்றால் பொய் போலத் தோன்றி னாலும் அது உண்மைதான்.
3. எது உண்மை என்பது மனச்சாட்சிக்குத் தெரியும்.
4. மனச்சாட்சிப்படி நடக்கிறவனை அகில உலகமும் மதிக்கும்.
5. உணர்ச்சி மயமான உண்மைதான் தவம். தரும தேவதையும் அதுதான்.
6. சத்தியத்தைப் போல உயர்ந்தது ஒன்றும் இல்லை. அது தான் ஒழுக்கம்.
7. சத்திய வாழ்க்கை நடத்துகிறவன் வேறு என்ன தருமம் செய்ய வேண்டும்.
8. உடம்பு சுத்தம் அடைவது நீரால். உள்ளம் புனிதம் அடைவது சத்தியத்தால்.
9. ஒளிமயமானது உண்மை. அந்த ஒளிக்கு நிகரான ஒளி வேறு இல்லை.
10. உண்மையைப் போல அழகானது நல்லது வேறு ஒன்றுமே இல்லை.

# 31. வெகுளாமை

1. செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான் அல்லிடத்துக்
காக்கின்என் காவாக்கால் என்.

2. செல்லா இடத்துச் சினந்தீது செல்லிடத்து
இல்அதனில் தீய பிற.

3. மறத்தல் வெகுளியை யார்மாட்டும் தீய
பிறத்தல் அதனான் வரும்.

4. நகையும் உவகையும் கொல்லும் சினத்தின்
பகையும் உளவோ பிற.

5. தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்.

6. சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்
ஏமப் புணையைச் சுடும்.

7. சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு
நிலத்தறைந்தான் கைபிழையா தற்று.

8. இணர்எரி தோய்வன்ன இன்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று.

9. உள்ளிய தெல்லாம் உடனெய்தும் உள்ளத்தால்
உள்ளான் வெகுளி எனின்.

10. இறந்தார் இறந்தார் அனையர் சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை.

## 31. வெகுளாமை

1. எளியவர்களிடம் பொறுமை வேண்டும். அதுதான் அடக்கம்.
2. வலியவர்களிடம் கோபப் பட்டால் தண்டனை. எளியவர்களிடம் கோபப் பட்டால் பாவம்.
3. அத்தனை தொல்லைக்கும் மூலகாரணம் அடங்காத கோபந்தான்.
4. கோபக்காரன் முகத்தில் அருள் இருக்காது. அதுதான் அவனுக்கு எமன்.
5. நமக்கு எதிரி நம்முடைய அடங்காத சினம் ஒன்றுதான்.
6. நட்பை அழிக்கும். உறவையும் கெடுக்கும். எது? ஆறாத ஆத்திரம்.
7. பாறையில் அடித்தால் கைவலிக்கும். கோபமும் பாறை மாதிரி அடிக்கும்.
8. கெடுதல் செய்தவனையும் மன்னித்து விடுவதே நல்லது.
9. கோபத்தை விட்டவனுக்கு நினைத்தது நினைத்தபடி நடக்கும்.
10. சின வெறி உள்ளவன் செத்த பிணம். சினத்தை விட்டவன் தெய்வப் பிறவி.

## 32. இன்னா செய்யாமை

1. சிறப்புஈனும் செல்வம் பெறினும் பிறர்க்குஇன்னா
செய்யாமை மாசற்றார் கோள்.

2. கறுத்துஇன்னா செய்தவக் கண்ணும் மறுத்துஇன்னா
செய்யாமை மாசற்றார் கோள்.

3. செய்யாமல் செற்றார்க்கும் இன்னாத செய்தபின்
உய்யா விழுமம் தரும்.

4. இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்.

5. அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்
தந்நோய்போல் போற்றாக் கடை.

6. இன்னா எனத்தான் உணர்ந்தவை துன்னாமை
வேண்டும் பிறன்கண் செயல்.

7. எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானாம்
மாணாசெய் யாமை தலை.

8. தன்னுயிர்க்கு இன்னாமை தானறிவான் என்கொலோ
மன்னுயிர்க்கு இன்னா செயல்.

9. பிறர்க்குஇன்னா முற்பகல் செய்யின் தமக்குஇன்னா
பிற்பகல் தாமே வரும்.

10. நோய்எல்லாம் நோய்செய்தார் மேலவாம்
நோய்செய்யார்
நோயின்மை வேண்டு பவர்.

# 32. இன்னா செய்யாமை

1. கெடுதல் செய்தவனுக்கு கெடுதல் செய்ய மனம் துடிக்கும். அதை அடக்குகிறவனே தருமமூர்த்தி.
2. திட்டம் போட்டு இடையூறு செய்கிறவனையும் மன்னித்து விடவேண்டும்.
3. கெடுதலிலிருந்து கெடுதல்தான் உண்டாகும்.
4. கெடுதல் செய்தவனுக்கும் நன்மை செய்து விட வேண்டும்.
5. பிறர் துன்பத்துக்கு இரக்கப் படுவதுதான் அறிவு.
6. கொடுமையை நினைக்கவே கூடாது. நினைத்தாலே பாவம்.
7. தருமம் என்றால் என்ன? நல்லது செய்வது தான்.
8. தனக்கு ஒரு கேடு வந்தால் எப்படி இருக்கும் என்பதை மறக்கக் கூடாது.
9. இன்று கெடுதல் செய்தால் நாளை அதன் பலன் செய்தவனுக்கே.
10. துன்பம் செய்கிறவனுக்குத்தான் துன்பம் வரும்.

# 33. கொல்லாமை

1. அறவினை யாதெனில் கொல்லாமை கோறல்
பிறவினை எல்லாந் தரும்.

2. பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாந் தலை.

3. ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றுஅதன்
பின்சாரப் பொய்யாமை நன்று.

4. நல்லாறு எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
கொல்லாமை சூழும் நெறி.

5. நிலைஅஞ்சி நீத்தாருள் எல்லாம் கொலைஅஞ்சிக்
கொல்லாமை சூழ்வான் தலை.

6. கொல்லாமை மேற்கொண் டொழுகுவான் வாழ்நாள்மேல்
சொல்லாது உயிருண்ணுங் கூற்று.

7. தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறிது
இன்னுயிர் நீக்கும் வினை.

8. நன்றாகும் ஆக்கம் பெரிதெனினும் சான்றோர்க்குக்
கொன்றாகும் ஆக்கம் கடை.

9. கொலைவினைய ராகிய மாக்கள் புலைவினையர்
புன்மை தெரிவா ரகத்து.

10. உயிர்உடம்பின் நீக்கியார் என்ப செயிர்உடம்பின்
செல்லாத்தீ வாழ்க்கை யவர்.

# 33. கொல்லாமை

1. பாவம் என்றால் அது உயிர்க் கொலைதான்.

2. தருமத்தில் எல்லாம் மேலான தருமம் உணவளித்து பிற உயிரைக் காத்தல்.

3. கொலை செய்யாமலிருந்தால் போதும். அதுவே புண்ணியம்.

4. ஒழுக்கம் என்பதும் கொலை செய்யாமை தான்.

5. கொலை செய்யாதவன் புண்ணியவான்.

6. நாம் ஒன்றைக் கொல்லவில்லை என்றால், நம்மைக் கொல்ல எமனும் பயப்படுவான்.

7. உயிருக்கு ஆபத்து வருகிறபோதும் கொலை செய்யக் கூடாது.

8. எவ்வளவு கிடைத்தாலும் சரி, கொலைத் தொழில் கூடாது.

9. கொலை வெறி உள்ளவன் யாராக இருந்தால் என்ன? அவன் ஒரு சண்டாளன்.

10. கொலைகாரனை குஷ்டம் முதலியன பற்றி சித்திரவதை செய்யும்.

## 34. நிலையாமை

1. நில்லாத வற்றை நிலையின என்றுணரும்
புல்லறி வாண்மை கடை.

2. கூத்தாட்டு அவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அதுவிளிந் தற்று.

3. அற்கா இயல்பிற்றுச் செல்வம் அதுபெற்றால்
அற்குப ஆங்கே செயல்.

4. நாளென ஒன்றுபோல் காட்டி உயிர்ஈரும்
வாளது உணர்வார்ப் பெறின்.

5. நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை
மேற்சென்று செய்யப் படும்.

6. நெருநல் உளன்ஒருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு.

7. ஒருபொழுதும் வாழ்வது அறியார் கருதுப
கோடியும் அல்ல பல.

8. குடம்பை தனித்துஒழியப் புள்பறந் தற்றே
உடம்போடு உயிரிடை நட்பு.

9. உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு.

10. புக்கில் அமைந்தின்று கொல்லோ உடம்பினுள்
துச்சில் இருந்த உயிர்க்கு.

## 34. நிலையாமை

1. அவ்வளவும் நிலையற்றவை. இது தெரியாதவன் மூடன்.
2. பணம் நிலைக்காது. வரும், போகும். நாடகக் கொட்டகை மாதிரித்தான்.
3. நிலையாத செல்வம் வந்ததும் நிலைத்த காரியம் செய்து விடவேண்டும்.
4. ஒவ்வொரு நாளும் நம் வாழ்நாளை அறுக்கும் ரம்பந்தான்.
5. மரணம் நிச்சயம். அதற்குள் நல்லன செய்து விட வேண்டும்.
6. நேற்றைக்கு இருந்தான். இன்றைக்கு இல்லை. இதுதான் உலகம்.
7. சாவின் விளிம்பில் நிற்கிறவன் கொஞ்சமா கற்பனை பண்ணுகிறான்?
8. கூட்டை விட்டுப் பறவை போகிறது போல உயிர் போய் விடும்.
9. தூக்கம் போலச் சாதாரண காரியந்தான் மரணம்.
10. உயிருக்கு உடம்பு வாடகை வீடுதான். சொந்த வீடு இல்லை.

# 35. துறவு

1. யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்.

2. வேண்டின்உண் டாகத் துறக்க துறந்தபின்
ஈண்டுஇயற் பால பல.

3. அடல்வேண்டும் ஐந்தன் புலத்தை விடல்வேண்டும்
வேண்டிய எல்லாம் ஒருங்கு.

4. இயல்பாகும் நோன்பிற்கொன்று இன்மை உடைமை
மயலாகும் மற்றும் பெயர்த்து.

5. மற்றும் தொடர்பாடு எவன்கொல் பிறப்பறுக்கல்
உற்றார்க்கு உடம்பும் மிகை.

6. யான்எனது என்னும் செருக்குஅறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும்.

7. பற்றி விடாஅ இடும்பைகள் பற்றினைப்
பற்றி விடாஅ தவர்க்கு.

8. தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர்.

9. பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும் மற்று
நிலையாமை காணப் படும்.

10. பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.

## 35. துறவு

1. எதை எதை மனிதன் ஒதுக்குகிறானோ அது அது விலகிவிடும். தொல்லையும் விலகிவிடும்.
2. விட்டுத் தொலைப்பதுதான் விடுதலை. கட்டி அழுவது தொல்லை.
3. உடம்புக்கோ உணர்ச்சிக்கோ அடிமை ஆகிவிடக் கூடாது. அதுதான் சுதந்திரம்.
4. ஆசை வெறி செயற்கை. தியாகந்தான் இயற்கை.
5. வயலே வேண்டாம் என்று ஒதுக்கியவன் வைக்கோலை நினைப்பானா?
6. 'நான், எனது' என்பவை கழன்றால் போதும். ஆனந்தமயந்தான்.
7. ஆசையும் வெறியும் இருக்கும் வரை வேதனையும் இருக்கும்.
8. ஆசையில் சிக்கினவன் வசமாய் மாட்டிக் கொண்டவன்தான்.
9. ஆசை ஒழிந்தால் போதும் சுதந்திரம் வந்து விடும். உண்மை தெரிந்துவிடும்.
10. ஆசையைவிட்டு விலக இறைவன் அருள் வேண்டும்.

## 36. மெய்யுணர்தல்

1. பொருளல்ல வற்றைப் பொருளென்று உணரும்
மருளானாம் மாணாப் பிறப்பு.

2. இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி
மாசறு காட்சி யவர்க்கு.

3. ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வானம் நணிய துடைத்து.

4. ஐயுணர்வு எய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர்வு இல்லா தவர்க்கு.

5. எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு.

6. கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி.

7. ஓர்த்துள்ளம் உள்ளது உணரின் ஒருதலையாப்
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு.

8. பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்பது அறிவு.

9. சார்புணர்ந்து சார்பு கெடஒழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய்.

10. காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்
நாமம் கெடக்கெடும் நோய்.

# 36. மெய்யுணர்தல்

1. மெய்ப்பொருள் பொய்ப்பொருள் என இரண்டு உண்டு. இது தெரியாதவன் மடையன்.
2. மெய்ப்பொருள் ஒன்று உண்டு என்று தெரிவதுதான் ஒளி. அதுதான் ஆனந்தம்.
3. உண்மையைத் தெரிந்தவர்களுக்கு உண்மை தெரியும். வேஷம் மறையும்.
4. உண்மை தெரியாமல் வெறும் வெளி வேஷத்தைப் பார்ப்பதில் பலன் இல்லை.
5. மரமானாலும் சரி, மட்டையானாலும் சரி, அவற்றுக்குப் பின் ஒரு உண்மை இருக்கிறது.
6. உண்மையைக் கண்டவர்களே சுதந்திர புருஷர்கள்.
7. உண்மையில் ஈடுபட ஈடுபட கட்டுகள் அவிழும். பூரண விடுதலைதான்.
8. மெய்ப்பொருளே ஆனந்தம். ஆனந்தம் வந்தபின் பிறப்பாவது? பிணியாவது.
9. அத்தனையும் வேஷம். ஒன்றை ஒன்று ஏமாற்று கின்றன. இது தெரிந்தால் போதும்.
10. பேராசை, ஆத்திரம், போதை இவைதாம் தீராத வியாதிகள்.

## 37. அவா அறுத்தல்

1. அவாஎன்ப எல்லா உயிர்க்கும் எஞ்ஞான்றும்
தவாஅப் பிறப்பீனும் வித்து.

2. வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும்.

3. வேண்டாமை அன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை
யாண்டும் அஃதொப்பது இல்.

4. தூஉய்மை என்பது அவாவின்மை மற்றது
வாஅய்மை வேண்ட வரும்.

5. அற்றவர் என்பார் அவாஅற்றார் மற்றையார்
அற்றாக அற்றது இலர்.

6. அஞ்சுவ தோரும் அறனே ஒருவனை
வஞ்சிப்ப தோரும் அவா.

7. அவாவினை ஆற்ற அறுப்பின் தவாவினை
தான்வேண்டும் ஆற்றான் வரும்.

8. அவாஇல்லார்க் கில்லாகுந் துன்பம்அஃ துண்டேல்
தவாஅது மேன்மேல் வரும்.

9. இன்பம் இடையறா தீண்டும் அவாவென்னும்
துன்பத்துள் துன்பங்கெடின்.

10. ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே
பேரா இயற்கை தரும்.

## 37. அவா அறுத்தல்

1. பேராசைதான் (பிறவித்) தொல்லைக்கு வித்து.
2. பேராசையை வெட்டி வீழ்த்த வேண்டும். இதற்குத் தொடர்ந்து பாடுபடவேண்டும்.
3. தேவை இல்லை என்பதைப் போல மேன்மை வேறு ஏதாவது உண்டா.
4. போதும் என்கிற திருப்திதான் உணர்ச்சிக்கு ஒளி. அதற்கு ஆதாரம் உண்மை.
5. ஆசையை விட்டவன் தப்பித்தவன். விடாதவன் சிக்கினவன்.
6. நயவஞ்சகமானது ஆசை. அதனால் ஞானிகள் பயப்படுவது ஆசை ஒன்றுக்குத் தான்.
7. ஆசையை ஒடுக்கிவிட்டால் போதும். உடம்பு, மனம், எல்லாமே சொன்னபடி கேட்கும்.
8. ஆசை வளர வளரத் துன்பமும் வளர்ந்து கொண்டே போகும்.
9. ஆசை ஒழிந்தால் ஆனந்தம் ஊறிக் கொண்டே இருக்கும்.
10. வெறி மயமானது ஆசை, அது ஒழிந்தால் தான் நிம்மதி.

# 4. ஊழியல்

## 38. ஊழ்

1. ஆகூழால் தோன்றும் அசைவின்மை கைப்பொருள்
போகூழால் தோன்றும் மடி.

2. பேதைப் படுக்கும் இழவூழ் அறிவகற்றும்
ஆகலூழ் உற்றக் கடை.

3. நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
உண்மை அறிவே மிகும்.

4. இருவேறு உலகத்து இயற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு.

5. நல்லவை எல்லாஅந் தீயவாம் தீயவும்
நல்லவாம் செல்வம் செயற்கு.

6. பரியினும் ஆகாவாம் பாலல்ல உய்த்துச்
சொரியினும் போகா தம.

7. வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது.

8. துறப்பார்மன் துப்புர வில்லார் உறற்பால
ஊட்டா கழியும் எனின்.

9. நன்றாங்கால் நல்லவாக் காண்பவர் அன்றாங்கால்
அல்லற் படுவ தெவன்.

10. ஊழில் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்.

# 4. ஊழியல்

## 38. ஊழ்

1. நல்ல காலம் கெட்ட காலம் என்று இருக்கின்றன. சுறுசுறுப்பும் சோம்பலும் அப்படியே.
2. கெட்டகாலம் என்ன செய்யும்? அறிவின் கண்ணில் மண்ணைத் தூவி விடும்.
3. உணர்ச்சிமயமான அறிவுதான் உண்மை அறிவு.
4. அனுபவம் வேறு, படிப்பு வேறு, இரண்டையும் போட்டுக் குழப்பக் கூடாது.
5. காலம் கை கொடுத்தால் போதும், கூத்தாடி வேஷம் போட்டே கோடீஸ்வரன் ஆகிவிடுவான்.
6. யோகம் இருந்தால் செல்வமும் செல்வாக்கும் தேடிவரும், இல்லை என்றால் ஓடிவிடும்.
7. தேடிச் சேர்த்தால் போதுமா? அனுபவிக்க யோகம் வேண்டாமா?
8. யோகம் இல்லாதவன் முண்டிப் பார்ப்பான், கடைசியில் சாமியார் வேஷம் போடுவான்.
9. லாபமும் நியதிதான், நஷ்டமும் நியதிதான்.
10. எதை ஏமாற்றினாலும் ஏமாற்றலாம். நியதியை ஏமாற்ற முடியாது.

# 2. பொருட்பால்

## 5. அரசியல்

### 39. இறைமாட்சி

1. படைகுடி கூழ்அமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு.
2. அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தர்க் கியல்பு.
3. தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவர்க்கு.
4. அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா
மானம் உடைய தரசு.
5. இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு.
6. காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம்.
7. இன்சொலால் ஈத்தளிக்க வல்லார்க்குத் தன்சொலால்
தான்கண் டனைத்திவ் வுலகு.
8. முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்.
9. செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கும் உலகு.
10. கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க் கொளி.

# 2. பொருட்பால்

## 5. அரசியல்

### 39. இறைமாட்சி

1. அரசாட்சி என்றால் ராணுவம், மக்கள், தொழில், நிர்வாகம் முதலியன இருக்கும்.
2. தைர்யமும் தேவை, வாரி வழங்கும் ஈகையும் தேவை. யாருக்கு? அரசனுக்கு.
3. எப்பொழுதும் உஷாராய் விழிப்போடு இருக்க வேண்டும் வேந்தன்.
4. நீதி, நேர்மை இரண்டுந்தான் அரசுக்குத் துணை
5. மக்கள் நன்மைக்காகவே மக்களிடமிருந்து வரி வசூல் செய்யவேண்டும்.
6. தடபுடல் இல்லாமல் பரிவுகாட்டினால், எங்கள் தலைவன் என்று உலகம் வாழ்த்தும்.
7. மக்களை மதித்து வேண்டுகோள் விட்டால் போதும். பயப்படவே வேண்டாம்
8. நெறிமுறை தவறாத நாட்டுத் தலைவன்தான் கண்கண்ட தெய்வம்.
9. எதிரிகளின் விமர்சனத்தில் ஆத்திரப்படக் கூடாது.
10. வள்ளன்மை, நீதி, பாதுகாப்பு மூன்றும் இருந்தால் போதும்.

# 40. கல்வி

1. கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

2. எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு.

3. கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.

4. உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்.

5. உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றுங் கற்றார்
கடையரே கல்லா தவர்.

6. தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு.

7. யாதானும் நாடாமல் ஊராமல் என்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு.

8. ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து.

9. தாமின் புறுவது உலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்.

10. கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை.

# 40. கல்வி

1. படிக்க வேண்டியவற்றைப் பழுதில்லாமல் படிக்க வேண்டும். அதுதான் படிப்பு.
2. விஞ்ஞானம் மெய்ஞ்ஞானம் இரண்டும் படிக்க வேண்டிய படிப்பு.
3. படியாதவன் மனிதனா? அவன் முகம் ஒரு முகமா?
4. கற்றறிந்த மேதைகளை மக்கள் சுற்றிச் சுற்றி வருவார்கள். மறக்க மாட்டார்கள்.
5. மாட்சிமை என்றால் படித்தவனிடந்தான். படியாதவன் பாவம்!
6. உணர்ச்சியிலிருந்து அநுபவம் மேலும் மேலும் ஊற வேண்டும். அதுதான் கல்வி.
7. கற்றறிந்த மேதைகளை எல்லா இனத்தாரும் மதிப்பார்கள்.
8. உணர்ச்சியோடு ஒரு தடவை படித்தாலும் போதும். மறக்கவே மறக்காது.
9. உணர உணர ஆனந்தம். அந்த ஆனந்தத்தில் திளைத்தால் பேரானந்தந்தானே.
10. கல்வியும் ஞானமும்தான் நிரந்தரமான செல்வம்.

## 41. கல்லாமை

1. அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய
நூலின்றிக் கோட்டிக் கொளல்.

2. கல்லாதான் சொற்கா முறுதல் முலையிரண்டும்
இல்லாதாள் பெண்காமுற் றற்று.

3. கல்லா தவரும் நனிநல்லர் கற்றார்முன்
சொல்லா திருக்கப் பெறின்.

4. கல்லாதான் ஒட்பம் கழியநன் றாயினும்
கொள்ளார் அறிவுடை யார்.

5. கல்லா ஒருவன் தகைமை தலைப்பெய்து
சொல்லாடச் சோர்வு படும்.

6. உளரென்னும் மாத்திரையர் அல்லால் பயவாக்
களரனையர் கல்லா தவர்.

7. நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில்நலம்
மண்மாண் புனைபாவை யற்று.

8. நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னாதே
கல்லார்கண் பட்ட திரு.

9. மேற்பிறந்தா ராயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்
கற்றார் அனைத்திலர் பாடு.

10. விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர்.

## 41. கல்லாமை

1. உண்மை நிறைந்த நூல் பயிற்சி வேண்டும். இல்லை என்றால் தெருக்கூத்துத்தான்.
2. அறிவில்லாதவன் வார்த்தையைத்தான் மென்று குதப்புவான்.
3. அறிவில்லாதவன் சும்மா இருக்கமாட்டான். ஏதாவது உளறுவான்.
4. முட்டாளைக் கட்டி அழுவது கொடுமை.
5. பயிற்சி இல்லாதவனுடைய அலங்காரப் பேச்சு எடுபடாது.
6. உழைத்துப் படிக்காதவன் வெறும் களர் நிலந்தான்.
7. அறிவோ நுட்பமோ இல்லாதவன் வெறும் மண் பொம்மை மாதிரி.
8. படியாதவன் கொடியவன்.
9. கற்றறிந்த மேதைதான் மேலோன். கல்லாதவன் கீழோன். இதுதான் குலம்.
10. அறிவில்லாதவன் மிருகம். அறிவுள்ளவனே மனிதன்.

## 42. கேள்வி

1. செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்து ளெல்லாந் தலை.

2. செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப் படும்.

3. செவியுணவிற் கேள்வி யுடையார் அவியுணவின்
ஆன்றாரோ டொப்பர் நிலத்து.

4. கற்றில னாயினும் கேட்க அஃதொருவற்கு
ஒற்கத்தின் ஊற்றாந் துணை.

5. இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே
ஒழுக்க முடையார்வாய்ச் சொல்.

6. எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்.

7. பிழைத்துணர்ந்தும் பேதைமை சொல்லார் இழைத்துணர்ந்
தீண்டிய கேள்வி யவர்.

8. கேட்பினுங் கேளாத் தகையவே கேள்வியால்
தோட்கப் படாத செவி.

9. நுணங்கிய கேள்விய ரல்லார் வணங்கிய
வாயின ராதல் அரிது.

10. செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என்.

# 42. கேள்வி

1. கேள்வி ஞானம் ஒன்றுதான் அழியாத செல்வம்.
2. நல்ல கருத்தைக் கேட்கக் கேட்க பசி ஓடிவிடும்.
3. உண்மையைக் கேட்டு அனுபவிக்கிறவர்கள் ஞானிகள்.
4. கேள்வி ஞானம் உடையவனுக்கு பாடம் படிக்க வேண்டிய அவசியம் இல்லை.
5. வழுக்குப் பாதைக்கு ஊன்றுகோல் போல கேள்விப் பட்ட கருத்து உதவும்.
6. மட்டமானவற்றைக் கேட்கக் கூடாது. நல்லதையே கேட்க வேண்டும்.
7. உயர்ந்த கருத்துக்களைக் கேட்டு அனுபவித்தவர்கள் தாறுமாறாகப் பேச மாட்டார்கள்.
8. நல்ல விஷயங்களைக் கேட்காதவன் செவி தூர்ந்து போன செவிதான்.
9. கேட்டுக் கேட்டு பக்குவம் அடையாதவன், கொழுத்துப் போய் அலைவான்.
10. கேட்டு ரசிக்காதவன் இருந்தாலும் ஒன்றுதான். செத்தாலும் ஒன்றுதான்.

# 43. அறிவுடைமை

1. அறிவற்றங் காக்குங் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்க லாகா அரண்.

2. சென்ற இடத்தால் செலவிடா தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்பதறிவு.

3. எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

4. எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்ப தறிவு.

5. உலகம் தழீஇய தொட்பம் மலர்தலும்
கூம்பலும் இல்ல தறிவு.

6. எவ்வ துறைவது உலகம் உலகத்தோடு
அவ்வ துறைவது அறிவு.

7. அறிவுடையார் ஆவ தறிவார் அறிவிலார்
அஃதறி கல்லா தவர்.

8. அஞ்சுவ தஞ்சாமை பேதைமை அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில்.

9. எதிரதாக் காக்கும் அறிவினார்க் கில்லை
அதிர வருவதோர் நோய்.

10. அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்.

# 43. அறிவுடைமை

1. அறிவு ஒன்றுதான் எதிரிகளால் அழிக்க முடியாத கோட்டை.
2. புத்தியைச் சிதற விடாமல் உண்மையை உற்று நோக்குவதுதான் அறிவு.
3. யார் சொன்னால் என்ன? எது சொன்னால் என்ன? உண்மைதான் தேவை.
4. நுட்பமான கருத்துக்களை அறிந்து உணர்ந்து எளிமையாகச் சொல்வதே அறிவு.
5. உண்மையை அறிவதிலும் அனுபவிப்பதிலும் வெறுப்பு விருப்புக் காட்டக்கூடாது.
6. உண்மையான எப்படிக் கிடக்கிறதோ அதை அப்படி உணர்வதுதான் அறிவு.
7. முன் விளைவு என்ன? பின் விளைவு என்ன என்பது புத்திசாலிக்குத் தெரியும்.
8. தீமைக்குப் பயப்பட மாட்டான் முட்டாள்.
9. இதனால் இது ஏற்படும் என்கிற விபரம் தெரியாதவன் திண்டாடுவான்.
10. புத்தி இருந்தால் ஒரு குறைவும் இல்லை. அது இல்லை என்றால் ஒன்றுமே இல்லை.

## 44. குற்றங்கடிதல்

1. செருக்குஞ் சினமும் சிறுமையும் இல்லார்
பெருக்கம் பெருமித நீர்த்து.

2. இவறலும் மாண்பிறந்த மானமும் மாணா
உவகையும் ஏதம் இறைக்கு.

3. தினைத்துணையாங் குற்றம் வரினும்
பனைத்துணையாக்
கொள்வர் பழிநாணு வார்.

4. குற்றமே காக்க பொருளாகக் குற்றமே
அற்றம் தரூஉம் பகை.

5. வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்.

6. தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்
என்குற்ற மாகும் இறைக்கு.

7. செயற்பால செய்யா திவறியான் செல்வம்
உயற்பால தன்றிக் கெடும்.

8. பற்றுள்ளம் என்னும் இவறன்மை எற்றுள்ளும்
எண்ணப் படுவதொன் றன்று.

9. வியவற்க எஞ்ஞான்றும் தன்னை நயவற்க
நன்றி பயவா வினை.

10. காதல காதல் அறியாமை உய்க்கிற்பின்
ஏதில ஏதிலார் நூல்.

## 44. குற்றங்கடிதல்

1. ஆணவம், ஆங்காரம், அல்பத்தனம் மூன்றும் மனிதனை விட்டு ஒழிய வேண்டும்.
2. கருமித்தனம், நான் என்கிற திமிர், கீழ்த்தரமான கேளிக்கை, மூன்றும் எமன்.
3. கடுகளவுதான் தவறுதல், ஆனாலும் நல்லவர்கள் தாங்க மாட்டார்கள்.
4. தவறு வளர வளர அழிவும் கூட வளரும்.
5. நெருப்பில் விழுந்த வைக்கோல் தப்புமா? திமிர் பிடித்த குற்றவாளியும் தப்பமாட்டான்.
6. நம்மிடம் உள்ள தவறையும் நாம் பார்க்க வேண்டும்.
7. கடமையை உடனுக்குடன் நிறைவேற்ற வேண்டும்.
8. எதன் மேலும் வெறி கூடாது. வெறி கொள்வது ஆபத்து.
9. தற்புகழ்ச்சியும் தவறான செயலும் மோசமானவை.
10. வெறியும் ஆங்காரமும் அடங்கவேண்டும். அடங்க அடங்கப் பலம் பெருகும்.

## 45. பெரியாரைத் துணைக்கோடல்

1. அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
திறனறிந்து தேர்ந்து கொளல்.

2. உற்றநோய் நீக்கி உறாஅமை முற்காக்கும்
பெற்றியார்ப் பேணிக் கொளல்.

3. அரியவற்று ளெல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்.

4. தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல்
வன்மையு ளெல்லாந் தலை.

5. சூழ்வார்கண் ணாக ஒழுகலான் மன்னவன்
சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்.

6. தக்கா ரினத்தனாய்த் தானொழுக வல்லானைச்
செற்றார் செயக்கிடந்த தில்.

7. இடிக்குந் துணையாரை ஆள்வாரை யாரே
கெடுக்குந் தகைமை யவர்.

8. இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும்.

9. முதலிலார்க்கு ஊதியம் இல்லை மதலையாஞ்
சார்பிலார்க்கு இல்லை நிலை.

10. பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல்.

# 45. பெரியாரைத் துணைக்கோடல்

1. கடமையை உணர்ந்த அறிஞர்களின் உறவுதான் பாதுகாப்பு.
2. பெரியவர்கள் நம் கஷ்டத்தை நீக்குவார்கள். தொல்லையை வரவிடாமல் தடுப்பார்கள்.
3. பெரியவர்களின் உறவுதான் பாக்கியத்தில் எல்லாம் சிறந்த பாக்கியம்.
4. நம்மை விட உயர்ந்தவர்களின் உறவுதான் நமக்குப் பாதுகாப்பு.
5. நல்லவர்களின் ஆலோசனை முக்கியம்.
6. பெரியவர்களின் ஆதரவு பெற்றவனை யாரும் வெல்ல முடியாது.
7. பெரியவர்களின் சொற்படி நடக்கிறவர்களை ஒருவராலும் கெடுக்க முடியாது.
8. பெரியவர்களின் புத்திமதியை மதிக்காதவனுக்கு அழிவு நிச்சயம்.
9. உயர்ந்தோர் துணை இல்லை என்றால் வாழ்வில் மேன்மை இல்லை.
10. உயர்ந்தோர் வெறுப்புக்கு ஆளாகிவிட்டால் உலகமே எதிரி ஆகிவிடும்.

# 46. சிற்றினம் சேராமை

1. சிற்றினம் அஞ்சும் பெருமை சிறுமைதான்
சுற்றமாச் சூழ்ந்து விடும்.

2. நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்கு
இனத்தியல்ப தாகும் அறிவு.

3. மனத்தானாம் மாந்தர்க் குணர்ச்சி இனத்தானாம்
இன்னான் எனப்படுஞ் சொல்.

4. மனத்து ளதுபோலக் காட்டி ஒருவற்கு
இனத்துள தாகும் அறிவு.

5. மனந்தூய்மை செய்வினை தூய்மை இரண்டும்
இனந்தூய்மை தூவா வரும்.

6. மனந்தூயார்க் கெச்சம்நன் றாகும் இனந்தூயார்க்கு
இல்லைநன் றாகா வினை.

7. மனநலம் மன்னுயிர்க் காக்கம் இனநலம்
எல்லாப் புகழும் தரும்.

8. மனநலம் நன்குடைய ராயினும் சான்றோர்க்கு
இனநலம் ஏமாப் புடைத்து.

9. மனநலத்தின் ஆகும் மறுமைமற் றஃதும்
இனநலத்தின் ஏமாப் புடைத்து.

10. நல்லினத்தி னூங்குந் துணையில்லை தீயினத்தின்
அல்லற் படுப்பதூஉம் இல்.

## 46. சிற்றினம் சேராமை

1. தரம் கெட்டவர்களின் உறவு தொல்லை தரும்.
2. அற்பர்களுடன் உறவாட உறவாட நல்லவர்களும் அற்பர்கள் ஆகிவிடுவார்கள்.
3. பழகுகிற நண்பர்களை வைத்துத் தான் ஒருவனைத் தீர்மானிப்பார்கள்.
4. சுற்றி உறவாடுகிறவர்களின் புத்திதான் செயல்படும்.
5. நல்லவர்களின் உறவு மனத்தைத் திருத்தும் செயலையும் திருத்தும்.
6. நல்லவர்களின் உறவு இருந்தால் எல்லாம் நல்ல படியாக நடக்கும்.
7. நல்லவர்களின் உறவுதான் வெற்றி தரும். புகழ் தரும்.
8. நல்ல யோசனை உடையவர்களுக்கு நல்லவர்களின் உறவு முக்கியம்.
9. நல்ல எண்ணம் நல்லதுதான். ஆனால் நல்லவர் உறவு இல்லை என்றால் பலன் இல்லை.
10. கெட்டவர்கள் சகவாசம் போல கேடு தருவது வேறு எதுவும் இல்லை.

# 47. தெரிந்து செயல்வகை

1. அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி வழிபயக்கும்
ஊதியமும் சூழ்ந்து செயல்.

2. தெரிந்த இனத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்கு
அரும்பொருள் யாதொன்றும் இல்.

3. ஆக்கம் கருதி முதலிழக்கும் செய்வினை
ஊக்கார் அறிவுடை யார்.

4. தெளிவி லதனைத் தொடங்கார் இளிவென்னும்
ஏதப்பாடு அஞ்சு பவர்.

5. வகையறச் சூழா தெழுதல் பகைவரைப்
பாத்திப் படுப்பதோ ராறு.

6. செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும்.

7. எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு.

8. ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று
போற்றினும் பொத்துப் படும்.

9. நன்றாற்ற லுள்ளுந் தவறுண்டு அவரவர்
பண்பறிந் தாற்றாக் கடை.

10. எள்ளாத எண்ணிச் செயல்வேண்டும் தம்மொடு
கொள்ளாத கொள்ளாது உலகு.

# 47. தெரிந்து செயல்வகை

1. நாம் செய்வது நல்லதுதானா என்று ஆராய்ந்து தான் எதையும் செய்யவேண்டும்.
2. நல்லோர் ஆதரவுடன் நல்லது செய்வார்க்கு எல்லாம் நன்மையாகவே முடியும்.
3. மூலதனத்தையே ஏப்பம் போடக்கூடிய காரியங்களில் நல்லவர்கள் இறங்க மாட்டார்கள்.
4. சிக்கலான - சந்தேகத்துக்கு உரிய காரியங் களில் நல்லவர்கள் ஈடுபடமாட்டார்கள்.
5. யோசிக்காமல் செயல்படுவது எதிரிகளுக்கு வாய்ப்பளித்துவிடும்.
6. நல்லதை உடனே செய்ய வேண்டும். கெட்டதை நினைக்கவே கூடாது.
7. யோசித்துத்தான் செயலில் இறங்க வேண்டும். பிறகு பின்வாங்கக் கூடாது.
8. குறுக்கு வழியில் வந்தது நிலைத்து நிற்காது.
9. தரம் அறிந்து உதவ வேண்டும்.
10. சமுதாயம் வெறுக்கிற காரியம் எதுவானாலும் அதில் ஈடுபடக்கூடாது.

# 48. வலியறிதல்

1. வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல்.

2. ஒல்வ தறிவது அறிந்ததன் கண்தங்கிச்
செல்வார்க்குச் செல்லாதது இல்.

3. உடைத்தும் வலியறியார் ஊக்கத்தின் ஊக்கி
இடைக்கண் முரிந்தார் பலர்.

4. அமைந்தாங் கொழுகான் அளவறியான் தன்னை
வியந்தான் விரைந்து கெடும்.

5. பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டஞ்
சால மிகுத்துப் பெயின்.

6. நுனிக்கொம்பர் ஏறினார் அஃதிறந் தூக்கின்
உயிர்க்கிறுதி யாகி விடும்.

7. ஆற்றின் அளவறிந்து ஈக அதுபொருள்
போற்றி வழங்கும் நெறி.

8. ஆகாறு அளவிட்ட தாயினுங் கேடில்லை
போகாறு அகலாக் கடை.

9. அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும்.

10. உளவரை தூக்காத ஒப்புர வாண்மை
வளவரை வல்லைக் கெடும்.

# 48. வலியறிதல்

1. தன் பலமும் தெரிய வேண்டும். எதிரியின் பலமும் தெரியவேண்டும்.
2. தகுதிக்குத் தக்கபடி செயல் பட்டால் வெற்றி நிச்சயம்.
3. தம்முடைய பலம் இன்னதென்று தெரியாதவர் செயலில் தோல்விதான் வரும்.
4. அளவுக்கு மீறிய தன்னம்பிக்கை தோல்வியைத் தான் கொடுக்கும்.
5. மயில் தோகையை மேலும் மேலும் ஏற்றினாலும் வண்டிக்குப் பாரந்தான்.
6. உச்சிக்கு மேலே ஏறினால் விழுவான். எந்தக் காரியத்திலும் அளவு வேண்டும்.
7. தருமம் செய்வதில்கூட ஒரு கணக்கு நிதானம் வேண்டும்.
8. எக்காரணத்தைக் கொண்டும் வரவை மிஞ்சக் கூடாது செலவு.
9. வரவுக்கு மீறிச் செலவழித்தால் நாசந்தான்.
10. வசதிக்கு மீறி நல்லது செய்தாலும் கேடுதான்.

# 49. காலம் அறிதல்

1. பகல்வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது.

2. பருவத்தோடு ஒட்ட ஒழுகல் திருவினைத்
தீராமை ஆர்க்கும் கயிறு.

3. அருவினை என்ப உளவோ கருவியான்
காலம் அறிந்து செயின்.

4. ஞாலம் கருதினுங் கைகூடும் காலம்
கருதி இடத்தாற் செயின்.

5. காலம் கருதி இருப்பர் கலங்காது
ஞாலம் கருது பவர்.

6. ஊக்க முடையான் ஒடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேருந் தகைத்து.

7. பொள்ளென ஆங்கே புறம்வேரார் காலம்பார்த்து
உள்வேர்ப்பர் ஒள்ளி யவர்.

8. செறுநரைக் காணின் சுமக்க இறுவரை
காணின் கிழக்காம் தலை.

9. எய்தற் கரியது இயைந்தக்கால் அந்நிலையே
செய்தற் கரிய செயல்.

10. கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த இடத்து.

# 49. காலம் அறிதல்

1. நேரம் என்று ஒன்று இருக்கிறது. அதை அனுசரித்துச் செயல்படவேண்டும்.
2. தக்க நேரத்தில் செயல்பட்டால் வெற்றி நிச்சயம்.
3. நேரம் பார்த்து இறங்கினால் எந்தச் சிக்கலும் அவிழ்ந்து விடும்.
4. பொறுத்தமான வேளையை எதிர்பார்த்து செயல் பட்டால் உலக வீரன்தான்.
5. ஒரு நாட்டையே வென்று வசப்படுத்தலாம் நேரம் வாய்த்தால்.
6. போர்க்கடாவும் பிறகு பாயும். காரிய வாதியும் நேரம் வரும் வரை பம்ம வேண்டும்.
7. தக்க நேரத்தை எதிர்பார்த்துத் தவம் இருக்கிறவர்கள் படபடக்க மாட்டார்கள்.
8. நேரம் வாய்க்கும் வரை ஒதுங்கவேண்டும். பிறகு பாய வேண்டும்.
9. நேரம் வந்து கைகூடிவிட்டால் எதையும் சாதித்து விடலாம்.
10. நேரம் வரும்வரை கொக்கைப் போல மௌனம் சாதிக்க வேண்டும்.

# 50. இடன் அறிதல்

1. தொடங்கற்க எவ்வினையும் எள்ளற்க முற்றும்
இடங்கண்ட பின்அல் லது.

2. முரண்சேர்ந்த மொய்ம்பி னவர்க்கும் அரண்சேர்ந்தாம்
ஆக்கம் பலவுந் தரும்.

3. ஆற்றாரும் ஆற்றி அடுப இடனறிந்து
போற்றார்கண் போற்றிச் செயின்.

4. எண்ணியார் எண்ணம் இழப்பர் இடனறிந்து
துன்னியார் துன்னிச் செயின்.

5. நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்
நீங்கின் அதனைப் பிற.

6. கடலோடா கால்வல் நெடுந்தேர் கடலோடும்
நாவாயும் ஓடா நிலத்து.

7. அஞ்சாமை அல்லால் துணைவேண்டா எஞ்சாமை
எண்ணி இடத்தாற் செயின்.

8. சிறுபடையான் செல்லிடம் சேரின் உறுபடையான்
ஊக்கம் அழிந்து விடும்.

9. சிறைநலனும் சீரும் இலரெனினும் மாந்தர்
உறைநிலத்தோடு ஒட்டல் அரிது.

10. காலாழ் களரில் நரியடும் கண்ணஞ்சா
வேலாள் முகத்த களிறு.

# 50. இடன் அறிதல்

1. எந்தக் காரியத்துக்கு எந்த இடம் பொருத்தம் என்பது முக்கியம்.
2. சொந்த இடத்தில் உள்ள வசதி அந்நிய இடத்தில் வராது.
3. சொந்த இடத்தில் சாதாரணமானவனுக்கும் பலம் அதிகம்.
4. இடம் வாய்ப்பாய் அமைந்தால் எதிரிகளால் ஒன்றும் செய்ய முடியாது.
5. தண்ணீரில் முதலைக்கு அதிக பலம். யாருக்கும் அவர்களுடைய இடந்தான் பலம்.
6. கடலில் தேரைவிட்டால் ஓடாது. அன்னிய இடத்தில் நம் செயல் எடுபடாது.
7. இடம் வாய்த்துவிட்டால் பிறகு துணிவுதான் தேவை.
8. வசதி குறைந்தாலும் வாய்ப்பான இடம் கிடைத்தால் போதும்.
9. கோட்டை கொத்தளம் இல்லை என்றாலும் பழகிய இடத்துக்கு ஒருபலம் உண்டு.
10. சேற்றில் சிக்கினால் யானையும் திணறும். வேற்றிடத்தில் வீரன் திணறுவான்.

# 51. தெரிந்து தெளிதல்

1. அறம்பொருள் இன்பம் உயிரச்சம் நான்கின்
திறந்தெரிந்து தேறப் படும்.

2. குடிப்பிறந்து குற்றத்தின் நீங்கி வடுப்பரியும்
நாணுடையான் கட்டே தெளிவு.

3. அரியகற்று ஆசற்றார் கண்ணும் தெரியுங்கால்
இன்மை அரிதே வெளிறு.

4. குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்.

5. பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்.

6. அற்றாரைத் தேறுதல் ஓம்புக மற்றவர்
பற்றிலர் நாணார் பழி.

7. காதன்மை கந்தா அறிவறியார்த் தேறுதல்
பேதைமை யெல்லாம் தரும்.

8. தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை
தீரா இடும்பை தரும்.

9. தேறற்க யாரையும் தேராது தேர்ந்தபின்
தேறுக தேறும் பொருள்.

10. தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்
தீரா இடும்பை தரும்.

# 51. தெரிந்து தெளிதல்

1. ஒழுக்கம் நிறைந்த உத்தமனிடந்தான் யோசனை கேட்க வேண்டும்.
2. பழி பாவத்துக்குப் பயப்படுகிற யோக்கியன் தான் துணைக்கு ஏற்றவன்.
3. படித்தால் மட்டும் போதாது. பண்புள்ள வனே உத்தமன்.
4. ஒரு சில தவறுகள் இருக்கலாம். ஆனால் ஒழுக்கம் நிறைந்தவன் என்றால் நல்லவன் தான்.
5. காரியத்தை வைத்துத்தான் தரத்தைப் பார்க்க வேண்டும்.
6. குலம், கோத்திரம், உற்றார் உறவினர், நண்பர் யாரும் இல்லாதவனை நம்பக் கூடாது.
7. பிரியத்தின் காரணமாக அளவுக்கு மீறி நம்புதல் ஆபத்து.
8. சோதிக்காமல் நம்பினால் நாசந்தான்.
9. பளிச்சென்று நம்பிவிடக்கூடாது. நம்பினபின் சஞ்சலம் கூடாது.
10. தெரியாதவனை நம்புவதும் தெரிந்தவனைச் சந்தேகிப்பதும் தவறு.

# 52. தெரிந்து வினையாடல்

1. நன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த
தன்மையான் ஆளப் படும்.

2. வாரி பெருக்கி வளம்படுத்து உற்றவை
ஆராய்வான் செய்க வினை.

3. அன்பறிவு தேற்றம் அவாவின்மை இந்நான்கும்
நன்குடையான் கட்டே தெளிவு.

4. எனைவகையான் தேறியக் கண்ணும் வினைவகையான்
வேறாகும் மாந்தர் பலர்.

5. அறிந்தாற்றிச் செய்கிற்பாற்கு அல்லால் வினைதான்
சிறந்தானென்று ஏவற்பாற் றன்று.

6. செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோடு
எய்த உணர்ந்து செயல்

7. இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்.

8. வினைக்குரிமை நாடிய பின்றை அவனை
அதற்குரிய னாகச் செயல்.

9. வினைக்கண் வினையுடையான் கேண்மைவே றாக
நினைப்பானை நீங்கும் திரு.

10. நாடோறும் நாடுக மன்னன் வினைசெய்வான்
கோடாமை கோடா துலகு.

# 52. தெரிந்து விளையாடல்

1. நல்லது கெட்டது தெரிந்து செயல்பட வேண்டும்.
2. வரவைப் பெருக்க வேண்டும். செலவை நல்ல காரியங்களுக்கு உபயோகப்படுத்த வேண்டும்.
3. பேராசை இல்லாத இரக்க குணம் உடையவனே நல்லவன்.
4. நல்லவனாக இருந்தவன்கூட காலப் போக்கில் மாறலாம்.
5. பொறுப்போடு செயல்படுகிறவன்தான் உற்ற துணை.
6. நல்ல நேரத்தில் நல்ல காரியத்தை நல்லவன் துணையில் நடத்துவதுதான் நல்லது.
7. எது செய்ய எவனுக்குத் தகுதி உள்ளது என்று தெரிதல் முக்கியம்.
8. தகுதி உடையவனிடம் பொறுப்பை முழுதும் ஒப்படைத்துவிடவேண்டும்.
9. வஞ்சகம் இல்லாமல் செயல்படுகிறவனை அவமதிக்கக் கூடாது.
10. எப்பொழுதும் கவனமாய் இருக்க வேண்டும். அயர்ந்தால் சிக்கல்தான்.

## 53. சுற்றுந் தழால்

1. பற்றற்ற கண்ணும் பழைமைபா ராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே யுள.

2. விருப்பறாச் சுற்றம் இயையின் அருப்பறா
ஆக்கம் பலவுந் தரும்.

3. அளவளா வில்லாதான் வாழ்க்கை குளவளாக்
கோடின்றி நீர்நிறைந் தற்று.

4. சுற்றத்தார் சுற்றப் படஒழுகல் செல்வந்தான்
பெற்றத்தால் பெற்ற பயன்.

5. கொடுத்தலும் இன்சொலும் ஆற்றின் அடுக்கிய
சுற்றத்தால் சுற்றப் படும்.

6. பெருங்கொடையான் பேணான் வெகுளி அவனின்
மருங்குடையார் மாநிலத்து இல்.

7. காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்
அன்னநீ ரார்க்கே உள.

8. பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின்
அதுநோக்கி வாழ்வார் பலர்.

9. தமராகித் தற்றுறந்தார் சுற்றம் அமராமைக்
காரணம் இன்றி வரும்.

10. உழைப்பிரிந்து காரணத்தின் வந்தானை வேந்தன்
இழைத்திருந்து எண்ணிக் கொளல்.

## 53. சுற்றந் தழால்

1. தொடர்பு விட்டுப் போனாலும் உறவு விடாது.
2. உள்ளன்போடு கூடிய சுற்றம் ஒரு பெரிய சாதனம்.
3. சுற்றத்தாரை மதிக்காதவன் உருப்பட மாட்டான்.
4. செல்வத்தைச் சேர்ப்பதே சுற்றத்தை ஆதரிக்கத் தான்.
5. தாராளமும் இன்சொல்லும் இருந்தால் போதும் சுற்றிச்சுற்றி வளரும் உறவு.
6. சுற்றத்தாரை மதிக்காதவன் அநாதை ஆகிவிடுவான்.
7. காகம் நமக்கு ஒரு படிப்பினை. அதுபோல சேர்ந்து வாழவேண்டும்.
8. சுற்றத்தாரை முறை வைத்து உபசரிக்க வேண்டும்.
9. விலகிப் போனவர்கள் மறுபடி சேர்வது அதிசயந்தான்.
10. விலகிப் போனவர்கள் மறுபடி வந்தால் அவர்களை வரவேற்று உபசரிக்க வேண்டும்.

# 54. பொச்சாவாமை

1. இறந்த வெகுளியின் தீதே சிறந்த
உவகை மகிழ்ச்சியிற் சோர்வு.

2. பொச்சாப்புக் கொல்லும் புகழை அறிவினை
நிச்ச நிரப்புக்கொன் றாங்கு.

3. பொச்சாப்பார்க்கு இல்லை புகழ்மை அதுவுலகத்து
எப்பால்நூ லோர்க்கும் துணிவு.

4. அச்ச முடையார்க்கு அரணில்லை ஆங்கில்லை
பொச்சாப் புடையார்க்கு நன்கு.

5. முன்னுறக் காவாது இழுக்கியான் தன்பிழை
பின்னூறு இரங்கி விடும்.

6. இழுக்காமை யார்மாட்டும் என்றும் வழுக்காமை
வாயின் அதுவொப்பது இல்.

7. அரியஎன்று ஆகாத இல்லைபொச் சாவாக்
கருவியால் போற்றிச் செயின்.

8. புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டும் செய்யாது
இகழ்ந்தார்க்கு எழுமையும் இல்.

9. இகழ்ச்சியின் கெட்டாரை உள்ளுக தாந்தம்
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து.

10. உள்ளியது எய்தல் எளிதுமன் மற்றுந்தான்
உள்ளியது உள்ளப் பெறின்.

## 54. பொச்சாவாமை

1. கடுங்கோபத்தைவிட பொய்ப்புகழ் மயக்கம் கொடியது.
2. பொய்ப்புகழ் மயக்கம் ஏமாளியாக்கிவிடும்.
3. பொய்ப்புகழுக்கு இரையானவன் உருப்பட மாட்டான்.
4. புகழ்ச்சியில் மயங்குகிறவன் அயோக்கியன்.
5. புகழ்ச்சியில் மயங்குகிறவனுக்கு ஆபத்து வருவது தெரியாது.
6. புகழுக்கு ஆளானவன் தன்னையே மறந்து விடுவான்.
7. புகழ்ச்சியை நம்பாதவன் எதையும் சாதித்து விடுவான்.
8. புகழ்ச்சிக்கு உரிய செயலில் ஈடுபட வேண்டும். புகழ்ச்சியில் மயங்கக் கூடாது.
9. புகழ்ச்சியில் மயங்கிக் கெட்டவர்களின் கதையை மறக்கக் கூடாது.
10. கடமையையே குறிவைத்து முனைந்தால் காரியம் நிறைவேறும்.

# 55. செங்கோன்மை

1. ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்
தேர்ந்துசெய் வஃதே முறை.

2. வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
கோல்நோக்கி வாழும் குடி.

3. அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்
நின்றது மன்னவன் கோல்.

4. குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு.

5. இயல்புளிக் கோலோச்சும் மன்னவன் நாட்ட
பெயலும் விளையுளும் தொக்கு.

6. வேலன்று வென்றி தருவது மன்னவன்
கோலதூஉம் கோடா தெனின்.

7. இறைகாக்கும் வையக மெல்லாம் அவனை
முறைகாக்கும் முட்டாச் செயின்.

8. எண்பதத்தான் ஓரா முறைசெய்யா மன்னவன்
தண்பதத்தான் தானே கெடும்.

9. குடிபுறங் காத்தோம்பிக் குற்றம் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில்.

10. கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர்.

# 55. செங்கோன்மை

1. நெறிமுறை தவறாமல் நிர்வாகம் பண்ணுவது தான் சிறப்பு.
2. நீதி ஒன்றைத்தான் மக்கள் எதிர்பார்க் கிறார்கள்.
3. தருமமும் சட்டமுந்தான் அரசுக்கு ஆதாரம்.
4. அரசின் கடமை மக்களைக் கவனிப்பதுதான்.
5. நீதி இருந்தால் பருவமழை தவறாது.
6. நீதி தவறிய நாட்டை ராணுவத்தால் காப்பாற்ற முடியாது.
7. மக்களை மன்னன் பாதுகாக்கிறான். மன்னனை நீதி பாதுகாக்கிறது.
8. அருளும் அறமும் இல்லை என்றால் அழிவு நிச்சயம்.
9. மக்கள் நலனுக்காக கடுமையாக நடந்து கொள்வது நல்லதுதான்.
10. பயிருக்குக் களை மாதிரி சமுதாயத்துக்கு போக்கிரிகள்.

# 56. கொடுங்கோன்மை

1. கொலைமேற்கொண்டா டாரிற் கொடிதே
அலைமேற்கொண்டு
அல்லவை செய்தொழுகும் வேந்து.

2. வேலோடு நின்றான் இடுஎன் றதுபோலும்
கோலொடு நின்றான் இரவு.

3. நாடொறும் நாடி முறைசெய்யா மன்னவன்
நாடொறும் நாடு கெடும்.

4. கூழும் குடியும் ஒருங்கிழக்கும் கோல்கோடிச்
சூழாது செய்யும் அரசு.

5. அல்லற்பட்டு ஆற்றாது அழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை.

6. மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை அஃதின்றேல்
மன்னாவாம் மன்னர்க் கொளி.

7. துளியின்மை ஞாலத்திற்கு எற்றற்றே வேந்தன்
அளியின்மை வாழும் உயிர்க்கு.

8. இன்மையின் இன்னாது உடைமை முறைசெய்யா
மன்னவன் கோற்கீழ்ப் படின்.

9. முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி
ஒல்லாது வானம் பெயல்.

10. ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூல்மறப்பர்
காவலன் காவான் எனின்.

## 56. கொடுங்கோன்மை

1. கொள்ளையரின் அரசாட்சி கொலைகாரர் செய்கிற அரசாட்சிதான்.
2. அரசாங்கம் கொள்ளையடிக்கக் கூடாது.
3. நேர்மையில் கவனம் இல்லாத அரசு சீரழியும்.
4. அரசு முறை தவறினால் அதன் அதிகாரம் போய்விடும்.
5. ஏழை அழுத கண்ணீர் கூரிய வாள்தான்.
6. நீதியில்தான் அரசாங்கத்தின் பெருமை இருக்கிறது.
7. அரசு மக்களிடம் காட்டும் பரிவு பருவ மழை போன்றது.
8. மோசமான அரசில் நல்லவன்தான் சிரமப்படுவான்.
9. நேர்மை தவறிய நாட்டில் மழை பெய்யாது.
10. பால் வற்றிவிடும் சட்டம் செல்லுபடியாகாது பொறுப்பற்ற அரசாட்சியில்.

# 57. வெருவந்த செய்யாமை

1. தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தால்
ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து.

2. கடிதோச்சி மெல்ல எறிக நெடிதாக்கம்
நீங்காமை வேண்டு பவர்.

3. வெருவந்த செய்தொழுகும் வெங்கோல னாயின்
ஒருவந்தம் ஒல்லைக் கெடும்.

4. இறைகடியன் என்றுரைக்கும் இன்னாச்சொல் வேந்தன்
உறைகடுகி ஒல்லைக் கெடும்.

5. அருஞ்செவ்வி இன்னா முகத்தான் பெருஞ்செல்வம்
பேஎய்கண் டன்னது உடைத்து.

6. கடுஞ்சொல்லன் கண்ணில னாயின் நெடுஞ்செல்வம்
நீடின்றி ஆங்கே கெடும்.

7. கடுமொழியும் கையிகந்த தண்டமும் வேந்தன்
அடுமுரண் தேய்க்கும் அரம்.

8. இனத்தாற்றி எண்ணாத வேந்தன் சினத்தாற்றிச்
சீறிடி சீறும் திரு.

9. செருவந்த போழ்திற் சிறைசெய்யா வேந்தன்
வெருவந்து வெய்து கெடும்.

10. கல்லார்ப் பிணிக்கும் கடுங்கோல் அதுவல்லது
இல்லை நிலக்குப் பொறை.

## 57. வெருவந்த செய்யாமை

1. குற்றத்துக்குத் தக்கபடி தண்டனை வழங்க வேண்டும்.
2. பலமாக ஓங்க வேண்டும் மெதுவாக அடிக்க வேண்டும்.
3. கொடுமை செய்யும் அரசன் அழிவான்.
4. மோசமானவன் என்று பெயர் எடுக்கும் அரசன் அழிவான்.
5. மக்களை மதிக்காமல் வெறுக்கும் அரசன் ஒரு சுடு காட்டுப் பேய்தான்.
6. வெறுப்பும் ஆரவாரமும் உடைய மன்னன் அதிகாரத்தை இழப்பான்.
7. அலட்சியமும், அடாவடித்தனமும் அரசனின் கோட்டை கொத்தளங்களை இடித்து விடும்.
8. தாறுமாறாக அலையும் அரசனிடம் மாட்சிமை தங்காது.
9. தற்காப்பு உணர்ச்சி இல்லை என்றால் நாசந்தான்.
10. அயோக்கியர்களின் ஆலோசனைப்படி நடக்கும் அரசன் மக்களுக்கு ஒரு சனியன்.

# 58. கண்ணோட்டம்

1. கண்ணோட்டம் என்னும் கழிபெருங் காரிகை
உண்மையான் உண்டிவ் வுலகு.

2. கண்ணோட்டத் துள்ளது உலகியல் அஃதிலார்
உண்மை நிலக்குப் பொறை.

3. பண்என்னாம் பாடற்கு இயைபின்றேல் கண்என்னாம்
கண்ணோட்டம் இல்லாத கண்.

4. உளபோல் முகத்தவன் செய்யும் அளவினால்
கண்ணோட்டம் இல்லாத கண்.

5. கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம் அஃதின்றேல்
புண்ணென்று உணரப் படும்.

6. மண்ணோ டியைந்த மரத்தனையர் கண்ணோ
டியைந்துகண் ணோடா தவர்.

7. கண்ணோட்டம் இல்லவர் கண்ணிலர் கண்ணுடையார்
கண்ணோட்டம் இன்மையும் இல்.

8. கருமஞ் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு
உரிமை உடைத்திவ் வுலகு.

9. ஒறுத்தாற்றும் பண்பினார் கண்ணும்கண் ணோடிப்
பொறுத்தாற்றும் பண்பே தலை.

10. பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்.

# 58. கண்ணோட்டம்

1. அரசனிடம் தாட்சண்யம் இருக்க வேண்டும். அதுதான் பொலிவு.
2. தாட்சண்யம் இல்லாத அரசு மக்களுக்குப் பாரம்.
3. பண்ணுக்கு முக்கியம் பாட்டு. கண்ணுக்கு முக்கியம் அருள்.
4. நீதியோடு கூடிய பரிவு இல்லை என்றால் ஒன்றுமே இல்லை.
5. இரக்கம் இல்லாத பார்வை அருவருப்பாக இருக்கும்.
6. பரிவு இல்லாதவர் பட்ட மரந்தான்.
7. பரிவு இல்லை என்றால் கண்ணில் பார்வை இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.
8. நீதியும் கருணையும் உள்ளவர்கள் அரசாள உரிமை பெற்றவர்கள்.
9. அழிக்க வேண்டியதைக்கூட சில சமயம் ஆசீர்வதித்து விட்டுவிடவேண்டும்.
10. தாட்சண்யத்தில் இருக்கிறது தியாகம்.

## 59. ஒற்றாடல்

1. ஒற்றும் உரைசான்ற நூலும் இவையிரண்டும்
தெற்றென்க மன்னவன் கண்.

2. எல்லார்க்கும் எல்லாம் நிகழ்பவை எஞ்ஞான்றும்
வல்லறிதல் வேந்தன் தொழில்.

3. ஒற்றினான் ஒற்றிப் பொருள்தெரியா மன்னவன்
கொற்றங் கொளக்கிடந்தது இல்.

4. வினைசெய்வார் தம்சுற்றம் வேண்டாதார் என்றாங்கு
அனைவரையும் ஆராய்வது ஒற்று.

5. கடாஅ உருவொடு கண்ணஞ்சாது யாண்டும்
உகாஅமை வல்லதே ஒற்று.

6. துறந்தார் படிவத்த ராகிசேர்த்துஇறந் தாராய்ந்து
என்செயினும் சோர்விலது ஒற்று.

7. மறைந்தவை கேட்கவற் றாகி அறிந்தவை
ஐயப்பாடு இல்லதே ஒற்று.

8. ஒற்றொற்றித் தந்த பொருளையும் மற்றுமோர்
ஒற்றினால் ஒற்றிக் கொளல்.

9. ஒற்றொற் றுணராமை ஆள்க உடன்மூவர்
சொல்தொக்க தேறப் படும்.

10. சிறப்பறிய ஒற்றின்கண் செய்யற்க செய்யின்
புறப்படுத்தா னாகும் மறை.

# 59. ஒற்றாடல்

1. சட்டம் எப்படி முக்கியமோ அப்படித்தான் புலனாய்வும்.
2. புலனாய்வின் மூலம் உடனுக்குடன் விபரம் தெரிய வேண்டும்.
3. புலனாய்வில் கவனம் இல்லை என்றால் அரசு பிழைக்காது.
4. எதிரிகளை மட்டுமல்ல நல்லவர்களையும் கண்காணிக்க வேண்டும்.
5. யார் கண்ணிலும் படக்கூடாது ஒற்றர்கள்.
6. ஒற்றர்கள் எதற்கும் பயப்படக்கூடாது.
7. அந்தரங்கத்தைக் காப்பதுதான் ஒற்றரின் கடமை.
8. ஒற்றர்களைக் கண்காணிக்க வேறொரு ஒற்றர் குழுவை வைத்திருக்க வேண்டும்.
9. பலதிறப்பட்ட ஒற்றர்களின் கூற்றை ரகஸ்யமாக ஆராய வேண்டும்.
10. ஒற்றர்களை அரசன் இனம் காட்டக் கூடாது.

## 60. ஊக்கம் உடைமை

1. உடைய ரெனப்படுவது ஊக்கம்அஃ தில்லார்
உடையது உடையரோ மற்று.

2. உள்ளம் உடைமை உடைமை பொருளுடைமை
நில்லாது நீங்கி விடும்.

3. ஆக்கம் இழந்தேமென்று அல்லாவார் ஊக்கம்
ஒருவந்தம் கைத்துடை யார்.

4. ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்க முடையா னுழை.

5. வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு.

6. உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து.

7. சிதைவிடத்து ஒல்கார் உரவோர் புதையம்பிற்
பட்டுப்பா டூன்றும் களிறு.

8. உள்ளம் இலாதவர் எய்தார் உலகத்து
வள்ளியம் என்னும் செருக்கு.

9. பரியது கூர்ங்கோட்டது ஆயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின்.

10. உரமொருவற்கு உள்ள வெறுக்கைஅஃ தில்லார்
மரம்மக்க ளாதலே வேறு.

## 60. ஊக்கம் உடைமை

1. ஊக்கம் உடையவன் ஆள்வதற்கு உரிமை உடையவன்.
2. ஊக்கந்தான் செல்வம். பணம் வெறும் பகட்டுத்தான்.
3. ஊக்கமுடையவன் தோல்வியில் துவள மாட்டான்.
4. ஊக்கமுடையவனின் முகவரியை விசாரிக்கும் அதிர்ஷ்டம்.
5. ஊக்கம் எவ்வளவோ அவ்வளவுக்கு உயர்வு.
6. உயர்ந்த லட்சியமே சிந்தனையாக வேண்டும்.
7. அம்பு தைத்த யானை போல முன்னேறுவார்கள் ஊக்கம் உடையவர்கள்.
8. ஊக்கம் இல்லாதவனுக்கு ஆக்கம் இல்லை.
9. புலிக்கு ஊக்கம் அதிகம். அப்படி ஊக்கம் நிறைந்தவனாக இருக்க வேண்டும்.
10. ஊக்கம் இல்லாதவன் வற்றிப் போன சுள்ளி.

# 61. மடி இன்மை

1. குடியென்னும் குன்றா விளக்கம் மடியென்னும்
மாசூர மாய்ந்து கெடும்.

2. மடியை மடியா ஒழுகல் குடியைக்
குடியாக வேண்டு பவர்.

3. மடிமடிக் கொண்டொழுகும் பேதை பிறந்த
குடிமடியும் தன்னிலும் முந்து.

4. குடிமடிந்து குற்றம் பெருகும் மடிமடிந்து
மாண்ட உஞற்றி லவர்க்கு.

5. நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
கெடுநீரார் காமக் கலன்.

6. படியுடையார் பற்றமைந்தக் கண்ணும் மடியுடையார்
மாண்பயன் எய்தல் அரிது.

7. இடிபுரிந்து எள்ளுஞ்சொல் கேட்பர் மடிபுரிந்து
மாண்ட உஞற்றி லவர்.

8. மடிமை குடிமைக்கண் தங்கின்தன் ஒன்னார்க்கு
அடிமை புகுத்தி விடும்.

9. குடியாண்மை யுள்வந்த குற்றம் ஒருவன்
மடியாண்மை மாற்றக் கெடும்.

10. மடியிலா மன்னவன் எய்தும் அடியளந்தான்
தாஅய தெல்லாம் ஒருங்கு.

# 61. மடி இன்மை

1. சோம்பல் வந்துவிட்டால் குடிகெட்டுவிடும்.
2. சோம்பலை விரட்டி விரட்டி அடிக்க வேண்டும்.
3. சோம்பலுக்கு ஆளானவன் குடும்பமே சங்கடப்படும்.
4. முயற்சியும் சுறுசுறுப்பும் இல்லாதவன் கெடுவான்.
5. சோம்பலும் மறதியும் முன்னேற்றத்துக்குப் பகை.
6. சுறுசுறுப்பு இல்லை என்றால் அரசாங்கமே அழிந்துவிடும்.
7. சோம்பேறி கேவலப்படுவான்.
8. சோம்பல் வந்துவிட்டால் முன்னேற்றம் இல்லை. தோல்விதான்.
9. குடும்பப் பெருமையையே சோம்பல் கெடுத்துவிடும்.
10. சுறுசுறுப்புடையவன் நினைத்ததைச் சாதிப்பான்.

## 62. ஆள்வினை உடைமை

1. அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்.

2. வினைக்கண் வினைகெடல் ஓம்பல் வினைக்குறை
தீர்ந்தாரின் தீர்ந்தன்று உலகு.

3. தாளாண்மை என்னுந் தகைமைக்கண் தங்கிற்றே
வேளாண்மை என்னுஞ் செருக்கு.

4. தாளாண்மை இல்லாதான் வேளாண்மை பேடிகை
வாளாண்மை போலக் கெடும்.

5. இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்
துன்பம் துடைத்தூன்றும் தூண்.

6. முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்.

7. மடியுளாள் மாமுகடி என்ப மடியிலான்
தாளுளாள் தாமரையி னாள்.

8. பொறியின்மை யார்க்கும் பழியன்று அறிவறிந்து
ஆள்வினை இன்மை பழி.

9. தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்.

10. ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழாது உஞற்று பவர்.

# 62. ஆள்வினை உடைமை

1. ஆளுமை வேண்டும் மனிதனிடம். அது இருந்தால் நினைத்த காரியம் முடியும்.
2. எடுத்த காரியத்தை நிறைவேற்றாதவனை மக்கள் நம்ப மாட்டார்கள்.
3. விடாமுயற்சிதான் வாழ்க்கைக்கு ஒளி.
4. முயற்சி இல்லாதவன் காரியம் வெறும் பாவலாத்தான்.
5. முயற்சியே பலன் என்று செயல்படுகிறவன் தான் மனிதன்.
6. முயற்சிதான் செல்வம். கையாலாகாதவன் தரித்திரம்.
7. முயற்சியில் வேகம் உள்ளவன் காலடியில் லட்சுமி குடி இருக்கிறாள்.
8. தோல்வி பற்றிக் கவலை இல்லை. முயற்சி தான் முக்கியம்.
9. விதி சதி செய்தாலும் முயற்சி வீண் போகாது.
10. விடா முயற்சி இருந்தால் விதியையும் வெற்றி காண முடியும்.

# 63. இடுக்கண் அழியாமை

1. இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்தூர்வது அஃதொப்பது இல்.

2. வெள்ளத் தனைய இடும்பை அறிவுடையான்
உள்ளத்தின் உள்ளக் கெடும்.

3. இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பைக்கு
இடும்பை படாஅ தவர்.

4. மடுத்தவா யெல்லாம் பகடன்னான் உற்ற
இடுக்கண் இடர்ப்பாடு உடைத்து.

5. அடுக்கி வரினும் அழிவிலான் உற்ற
இடுக்கண் இடுக்கட் படும்.

6. அற்றேமென்று அல்லற் படுபவோ பெற்றேமென்று
ஓம்புதல் தேற்றா தவர்.

7. இலக்கம் உடம்பிடும்பைக் கென்று கலக்கத்தைக்
கையாறாக் கொள்ளாதாம் மேல்.

8. இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்
துன்பம் உறுதல் இலன்.

9. இன்பத்துள் இன்பம் விழையாதான் துன்பத்துள்
துன்பம் உறுதல் இலன்.

10. இன்னாமை இன்பம் எனக்கொளின் ஆகுந்தன்
ஒன்னார் விழையுஞ் சிறப்பு.

# 63. இடுக்கண் அழியாமை

1. முயற்சியில் தடங்கல் ஏற்படலாம். இடையூறு வரலாம். வந்தால் வருந்தக்கூடாது.
2. மலைமலையாகத் தடங்கல் வந்தாலும் முயற்சியில் பின் வாங்கக் கூடாது.
3. சோர்வடையாதவன் தடங்கலைத் தகர்த்து விடுவான்.
4. இடையூறுக்கு மலைக்கக் கூடாது. முனைந்து செயல் படவேண்டும்.
5. இடையூறு தொடர்ந்து வந்தாலும் தளரா முயற்சி அவற்றைத் தவிடு பொடி ஆக்கி விடும்.
6. வாய்ப்பிருந்தும் முயலாதவர்கள் "ஐயோ போய் விட்டதே" என்று புலம்புவார்கள்.
7. நோயால் வரும் தடங்கலைக் கூடச் சமாளித்து விடுவார்கள் நல்லவர்கள்.
8. இடையூறு வருவது இயற்கைதான் என்பதை மறக்கக்கூடாது.
9. நஷ்டமும் இயல்புதான் என்று நினைக்கிறவன் பயப்படமாட்டான்.
10. ஆடம்பரமும் கேளிக்கையும் பொல்லாதவை என்று தெரியவேண்டும்.

# 6. அங்க இயல்

## 64. அமைச்சு

1. கருவியும் காலுமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்டது அமைச்சு.

2. வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோடு
ஐந்துடன் மாண்டது அமைச்சு.

3. பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப்
பொருத்தலும் வல்லது அமைச்சு.

4. தெரிதலும் சேர்ந்து செயலும் ஒருதலையாச்
சொல்லலும் வல்லது அமைச்சு.

5. அறனறிந்து ஆன்றமைந்த சொல்லான்எஞ் ஞான்றுந்
திறனறிந்தான் தேர்ச்சித் துணை.

6. மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு அதிநுட்பம்
யாஉள முன்நிற் பவை.

7. செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து
இயற்கை அறிந்து செயல்.

8. அறிகொன்று அறியான் எனினும் உறுதி
உழையிருந்தான் கூறல் கடன்.

9. பழுதெண்ணும் மந்திரியின் பக்கத்துள் தெவ்வோர்
எழுபது கோடி உறும்.

10. முறைப்படச் சூழ்ந்தும் முடிவிலவே செய்வர்
திறப்பாடு இலாஅ தவர்.

# 6. அங்க இயல்

## 64. அமைச்சு

1. சகலகலாவல்லவனாக இருக்க வேண்டும் அமைச்சன்.
2. உறுதி, மக்கள் நலம், தெளிவு மூன்றும் அமைச்சனிடம் தேவை.
3. ஒதுக்க வேண்டியவர்களை ஒதுக்குவதும் சேர்க்க வேண்டியவர்களை சேர்ப்பதும் செயல்பட நல்லது.
4. ஆராய்ச்சி, நுட்பம், உறுதி எல்லாம் வேண்டும் அமைச்சனிடம்.
5. நீதி நெறி வழுவாமல் இருக்க வேண்டும் அமைச்சன்.
6. கல்வி அறிவும் வேண்டும். அநுபவ ஞானமும் வேண்டும்.
7. கடமை உணர்வு முக்கியம். அதைவிட நாட்டு நடப்பு முக்கியம்.
8. அரசன் மூடனாக இருந்தாலும் அவனைத் திருத்துவது அமைச்சனின் பொறுப்பு.
9. வஞ்சமான மந்திரிதான் பெரிய எதிரி.
10. திறமை இல்லாத மந்திரி பிரச்சனையை வளர்த்துக் கொண்டே போவான்.

# 65. சொல்வன்மை

1. நாநலம் என்னும் நலனுடைமை அந்நலம்
யாநலத்து உள்ளதூஉம் அன்று.

2. ஆக்கமுங் கேடும் அதனால் வருதலால்
காத்தோம்பல் சொல்லின்கண் சோர்வு.

3. கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாஞ் சொல்.

4. திறனறிந்து சொல்லுக சொல்லை அறனும்
பொருளும் அதனினூஉங்கு இல்.

5. சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லுஞ்சொல் இன்மை அறிந்து.

6. வேட்பத்தாஞ் சொல்லிப் பிறர்சொல் பயன்கோடல்
மாட்சியின் மாசற்றார் கோள்.

7. சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது.

8. விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்.

9. பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற
சிலசொல்லல் தேற்றா தவர்.

10. இணரூழ்த்தும் நாறா மலரனையர் கற்றது
உணர விரித்துரையா தார்.

## 65. சொல்வன்மை

1. பேச்சால் வசப்படுத்துவது போல மற்றவற்றால் வசப்படுத்த முடியாது.
2. வெற்றிக்கும் தோல்விக்கும் பேச்சுத்தான் காரணம்.
3. கற்றவர் கல்லாதவர் எல்லோருக்கும் விளங்கும் படி பேசவேண்டும்.
4. பொருத்தமாகப் பேசுவது பெரிய புண்ணியம்.
5. ஒரு சொல்கூட அனாவசியம் என்று இருக்கக் கூடாது பேச்சில்.
6. எல்லோரும் விரும்பும்படி பேச வேண்டும்.
7. தெளிவாகவும் உறுதியாகவும் பேசுகிறவனை ஒருவராலும் வெல்ல முடியாது.
8. நயமாகவும் தெளிவாகவும் சொன்னால் மக்கள் பின்னால் வருவார்கள்.
9. சுருங்கச் சொல்லி விளங்க வைப்பதுதான் ஞானம்.
10. விபரமாகப் பேசத் தெரியாதவன் மணம் இல்லாத மலர் மாதிரி.

# 66. வினைத்தூய்மை

1. துணைநலம் ஆக்கம் தரூஉம் வினைநலம்
வேண்டிய எல்லாம் தரும்.

2. என்றும் ஒருவுதல் வேண்டும் புகழொடு
நன்றி பயவா வினை.

3. ஓஒதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை
ஆஅதும் என்னு மவர்.

4. இடுக்கட் படினும் இளிவந்த செய்யார்
நடுக்கற்ற காட்சி யவர்.

5. எற்றென்று இரங்குவ செய்யற்க செய்வானேல்
மற்றன்ன செய்யாமை நன்று.

6. ஈன்றாள் பசிகாண்பான் ஆயினுஞ் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை.

7. பழிமலைந்து எய்திய ஆக்கத்தின் சான்றோர்
கழிநல் குரவே தலை.

8. கடிந்த கடிந்தொரார் செய்தார்க்கு அவைதாம்
முடிந்தாலும் பீழை தரும்.

9. அழக்கொண்ட எல்லாம் அழப்போம் இழப்பினும்
பிற்பயக்கும் நற்பா லவை.

10. சலத்தால் பொருள்செய்தே மார்த்தல் பசுமட்
கலத்துள்நீர் பெய்திரீஇ யற்று

## 66. வினைத்தூய்மை

1. நல்ல நண்பனைப் போல நல்ல செயல் பலன் கொடுக்கும்.
2. கெட்ட காரியங்களை விட்டுவிட வேண்டும்.
3. தரங்கெட்ட காரியங்களை நினைக்கவே கூடாது.
4. நஷ்டம் வந்தாலும் நல்லதையே செய்ய வேண்டும்.
5. பிறர் தூற்றும் செயல் செய்தால் அழிவு நிச்சயம்.
6. பெற்றதாய் பட்டினி கிடந்தாலும் தவறு செய்யக் கூடாது.
7. கெட்ட தொழிலில் வருகிற செல்வம் கொடிய நோய்.
8. தீய செயலில் வென்றாலும் அது தோல்வி தான்.
9. பிறரை ஏமாற்றிய செல்வம் நம்மை ஏமாற்றி விடும்.
10. வஞ்சகம் நிலைக்காது. ஓட்டைக் குடம்போல பயன்படாது.

# 67. வினைத்திட்பம்

1. வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்
மற்றைய எல்லாம் பிற.

2. ஊறொரால் உற்றபின் ஒல்காமை இவ்விரண்டின்
ஆறென்பர் ஆய்ந்தவர் கோள்.

3. கடைக்கொட்கச் செய்தக்க தாண்மை
இடைக்கொட்கின்
எற்றா விழுமந் தரும்.

4. சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்.

5. வீறெய்தி மாண்டார் வினைத்திட்பம் வேந்தன்கண்
ஊறெய்தி உள்ளப் படும்.

6. எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்.

7. உருவுகண்டு எள்ளாமை வேண்டும்
உருள்பெருந்தேர்க்கு
அச்சாணி அன்னார் உடைத்து.

8. கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது
தூக்கங் கடிந்து செயல்.

9. துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை.

10. எனைத்திட்டம் எய்தியக் கண்ணும் வினைத்திட்பம்
வேண்டாரை வேண்டாது உலகு.

# 67. வினைத்திட்பம்

1. மனதில் உறுதி இருந்தால் செயலிலும் உறுதி உண்டாகும்.
2. தீமை செய்யாமை, நன்மையில் பின்வாங்காமை இரண்டும் முக்கியம்.
3. செயலை மத்தியில் விட்டுவிடுவது பேடித்தனம்.
4. சொன்னபடி செய்வதுதான் சாதனை.
5. அஞ்சாமையும் ஊக்கமுமே நல்ல செயலுக்கு மூலம்.
6. உறுதி இருந்தால் திட்டமிட்டபடி நடக்கும்.
7. தேராணி போல இருக்கும் சிறியவர்களும் பெரிய காரியம் செய்வார்கள்.
8. நல்ல செயலில் சோர்வு கூடாது.
9. நஷ்டம் வந்தாலும் நல்ல செயலை விட்டுவிடக் கூடாது.
10. செயலில் உறுதி இல்லாதவனை மக்கள் நம்ப மாட்டார்கள்.

## 68. வினைசெயல்வகை

1. சூழ்ச்சி முடிவு துணிவெய்தல் அத்துணிவு
தாழ்ச்சியுள் தங்குதல் தீது.

2. தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க
தூங்காது செய்யும் வினை.

3. ஒல்லும்வா யெல்லாம் வினைநன்றே ஒல்லாக்கால்
செல்லும்வாய் நோக்கிச் செயல்.

4. வினைபகை என்றிரண்டின் எச்சம் நினையுங்கால்
தீயெச்சம் போலத் தெறும்.

5. பொருள்கருவி காலம் வினையிடனொடு ஐந்தும்
இருள்தீர எண்ணிச் செயல்.

6. முடிவும் இடையூறும் முற்றியாங்கு எய்தும்
படுபயனும் பார்த்துச் செயல்.

7. செய்வினை செய்வான் செயல்முறை அவ்வினை
உள்ளறிவான் உள்ளம் கொளல்.

8. வினையால் வினையாக்கிக் கோடல் நனைகவுள்
யானையால் யானையாத் தற்று.

9. நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே
ஒட்டாரை ஒட்டிக் கொளல்.

10. உறைசிறியார் உள்நடுங்கல் அஞ்சிக் குறைபெறின்
கொள்வர் பெரியார்ப் பணிந்து.

# 68. வினைசெயல்வகை

1. அரைகுறையாக ஒன்றை விடுவது கேவலம்.

2. நின்று நின்று செயல்படுவது தவறு.

3. முடியாததை விட்டுவிட்டு முடிந்ததைச் செய்ய வேண்டும்.

4. எடுத்த காரியத்தை முடிக்காமல் விடுவது கேவலம்.

5. தீர ஆலோசனை இல்லாமல் செயல்படக் கூடாது.

6. விளைவு எப்படி இருக்கும் என்பதை யோசித்துச் செயல்பட வேண்டும்.

7. செயல் வீரர்களின் அநுபவங்களை மதிக்க வேண்டும்.

8. யானையைப் பிடிப்பதுபோல காரியத்தைச் சாதிக்க வேண்டும்.

9. காரியம் என்றால் எதிரியையும் சேர்த்துக் கொள்ளலாம்.

10. பலம் குறையும் போது பலம் நிறைந்தவனைச் சேர்த்துக் கொள்ளலாம்.

# 69. தூது

1. அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் வேந்தவாம்
பண்புடைமை தூதுரைப்பான் பண்பு.

2. அன்பறிவு ஆராய்ந்த சொல்வன்மை தூதுரைப்பார்க்கு
இன்றி யமையாத மூன்று.

3. நூலாருள் நூல்வல்லன் ஆகுதல் வேலாருள்
வென்றி வினையுரைப்பான் பண்பு.

4. அறிவுரு ஆராய்ந்த கல்விஇம் மூன்றன்
செறிவுடையான் செல்க வினைக்கு.

5. தொகச்சொல்லித் தூவாத நீக்கி நகச்சொல்லி
நன்றி பயப்பதாம் தூது.

6. கற்றுக்கண் அஞ்சான் செலச்சொல்லிக் காலத்தால்
தக்கது அறிவதாம் தூது.

7. கடனறிந்து காலம் கருதி இடனறிந்து
எண்ணி உரைப்பான் தலை.

8. தூய்மை துணைமை துணிவுடைமை இம்மூன்றின்
வாய்மை வழியுரைப்பான் பண்பு.

9. விடுமாற்றம் வேந்தர்க்கு உரைப்பான் வடுமாற்றம்
வாய்சோரா வன்க ணவன்.

10. இறுதி பயப்பினும் எஞ்சாது இறைவற்கு
உறுதி பயப்பதாம் தூது.

## 69. தூது

1. உயர்ந்த மனிதர்களைத்தான் அரசாங்க தூதர்களாக நியமிக்க வேண்டும்.
2. சொல்லில் நளினமும் உறுதியும் தூதர்களுக்கு முக்கியம்.
3. பரந்து விரிந்த கல்வி அறிவு தூதர்களுக்கு முக்கியம்.
4. கல்வி அறிவு போல தோற்றப் பொலிவும் முக்கியம்.
5. சுருங்கச் சொல்லி விளங்க வைக்க வேண்டும்.
6. எதிரியிடம் போய் பயப்படாமல் உறுதி காட்ட வேண்டும்.
7. நேரம் சந்தர்ப்பம் பார்த்துப் பேசுவது நல்லது.
8. சந்தேகத்துக்கு இடம் இருக்கக் கூடாது தூதனிடம்.
9. ஆபத்துக்குப் பயப்படாமல் செயல்படுவான் தூதன்.
10. தூதனுக்கு உயிர் பெரிதன்று. கடமைதான் பெரிது.

# 70. மன்னரைச் சேர்ந்தொழுகல்

1. அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்.

2. மன்னர் விழைப விழையாமை மன்னரால்
மன்னிய ஆக்கந் தரும்.

3. போற்றின் அரியவை போற்றல் கடுத்தபின்
தேற்றுதல் யார்க்கும் அரிது.

4. செவிச்சொல்லும் சேர்ந்த நகையும் அவித்தொழுகல்
ஆன்ற பெரியா ரகத்து.

5. எப்பொருளும் ஓரார் தொடரார்மற் றப்பொருளை
விட்டக்கால் கேட்க மறை.

6. குறிப்பறிந்து காலம் கருதி வெறுப்பில
வேண்டுப வேட்பச் சொலல்.

7. வேட்பன சொல்லி வினையில எஞ்ஞான்றும்
கேட்பினும் சொல்லா விடல்.

8. இளையர் இனமுறையர் என்றிகழார் நின்ற
ஒளியோடு ஒழுகப் படும்.

9. கொளப்பட்டேம் என்றெண்ணிக் கொள்ளாத செய்யார்
துளக்கற்ற காட்சி யவர்.

10. பழையம் எனக்கருதிப் பண்பல்ல செய்யும்
கெழுதகைமை கேடு தரும்.

# 70. மன்னரைச் சேர்ந்தொழுகல்

1. உயர்ந்தவர்களுடன் பழகுகிறவர்கள் நெருங்குவது தவறு, விலகுவதும் தவறு.
2. உயர்ந்தவர்கள் ஒன்றின் மேல் ஆசை வைத்தால் இவர்கள் விலகிவிடவேண்டும்.
3. கூடுமானவரை தவறுகளில் மாட்டிக் கொள்ளக் கூடாது.
4. மற்றவருடன் காதோடு பேசல் சிரித்துப் பேசல் கூடாது.
5. பெரியவர்கள் பேச்சை ஒட்டுக் கேட்பது தவறு.
6. பெரியவர்கள் விரும்புவதை உடனே செய்ய வேண்டும்.
7. தேவையான விபரங்களையே சொல்ல வேண்டும்.
8. உயர்ந்தவர்களை அப்படி இப்படி என்று முறை சொல்லக்கூடாது.
9. நம்மைச் சந்தேகப்படமாட்டார் என எண்ணி தவறு செய்யக் கூடாது.
10. முன்பு பழகியவர்தானே என்று அலட்சியம் காட்டக் கூடாது.

# 71. குறிப்பறிதல்

1. கூறாமை நோக்கிக் குறிப்பறிவான் எஞ்ஞான்றும்
மாறாநீர் வையக்கு அணி.

2. ஐயப் படாஅது அகத்தது உணர்வானைத்
தெய்வத்தோ டொப்பக் கொளல்.

3. குறிப்பிற் குறிப்புணர் வாரை உறுப்பினுள்
யாது கொடுத்தும் கொளல்.

4. குறித்தது கூறாமைக் கொள்வாரோ டேனை
உறுப்போ ரனையரால் வேறு.

5. குறிப்பிற் குறிப்புணரா வாயின் உறுப்பினுள்
என்ன பயத்தவோ கண்.

6. அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்.

7. முகத்தின் முதுக்குறைந்தது உண்டோ உவப்பினும்
காயினும் தான்முந் துறும்.

8. முகம்நோக்கி நிற்க அமையும் அகம்நோக்கி
உற்ற துணர்வார்ப் பெறின்.

9. பகைமையும் கேண்மையும் கண்ணுரைக்கும் கண்ணின்
வகைமை உணர்வார்ப் பெறின்.

10. நுண்ணியம் என்பார் அளக்குங்கோல் காணுங்கால்
கண்ணல்லது இல்லை பிற.

## 71. குறிப்பறிதல்

1. பார்க்கிற பார்வையிலேயே தெரிகிறவன் அறிஞன்.
2. மனதில் உள்ளதை அப்படியே பார்த்து விடுவான் ஞானி.
3. குறிப்பால் உணர்கிறவர் நட்பு உயர்ந்தது.
4. சொல்லாமலே அறிகிறவன்தான் மனிதன்.
5. மனதில் நடப்பதைப் பார்க்க முடியாத கண் குருட்டுக் கண்தான்.
6. மனதில் நிகழ்வதை முகம் அப்படியே காட்டி விடும்.
7. மகிழ்ச்சி, துன்பம் அத்தனையும் முகத்தில் வந்து நிற்கும்.
8. அறிஞர்கள் பார்த்த பார்வையிலேயே கண்டு கொள்வார்கள்.
9. விருப்பு வெறுப்பு எல்லாவற்றையும் காட்டிவிடும் முகம்.
10. உணர்ச்சியை அளந்து பார்க்கும் அளவுகோல் கண்தான்.

# 72. அவை அறிதல்

1. அவையறிந்து ஆராய்ந்து சொல்லுக சொல்லின்
தொகையறிந்த தூய்மை யவர்.

2. இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுக சொல்லின்
நடைதெரிந்த நன்மை யவர்.

3. அவையறியார் சொல்லல்மேற் கொள்பவர் சொல்லின்
வகையறியார் வல்லதூஉம் இல்.

4. ஒளியார்முன் ஒள்ளிய ராதல் வெளியார்முன்
வான்சுதை வண்ணம் கொளல்.

5. நன்றென்ற வற்றுள்ளும் நன்றே முதுவருள்
முந்து கிளவாச் செறிவு.

6. ஆற்றின் நிலைதளர்ந் தற்றே வியன்புலம்
ஏற்றுணர்வார் முன்னர் இழுக்கு.

7. கற்றறிந்தார் கல்வி விளங்கும் கசடறச்
சொல்தெரிதல் வல்லா ரகத்து.

8. உணர்வ துடையார்முன் சொல்லல் வளர்வதன்
பாத்தியுள் நீர்சொரிந் தற்று.

9. புல்லவையுள் பொச்சாந்தும் சொல்லற்க நல்லவையுள்
நன்கு செலச்சொல்லு வார்.

10. அங்கணத்துள் உக்க அமிழ்தற்றால் தங்கணத்தர்
அல்லார்முன் கோட்டி கொளல்.

## 72. அவை அறிதல்

1. அறிஞர்கள் கூடிய இடத்தில்தான் பேச வேண்டும்.
2. நல்ல கருத்துக்களை நல்ல இடத்தில் சொல்ல வேண்டும்.
3. புத்தி இல்லாதவர்களிடம் உரையாற்றுவது தவறு.
4. அறிஞர்களிடம் அனுபவத்தை வெளியிட வேண்டும்.
5. அறிஞர்களிடம் அடக்கமாக நடக்க வேண்டும்.
6. அறிஞர்களிடம் சிக்கித்தவிக்கக்கூடாது.
7. அறிஞர் குழாம் பாராட்டுகிற அறிவே அறிவு.
8. அறிஞர்கள் பாராட்டும் வண்ணம் பேசுவதே பேச்சு.
9. கீழோர் கூட்டத்தில் கலந்து கொள்வதே தவறு.
10. அறிவில்லாத புல்லவை சாக்கடைக்குச் சமம்.

## 73. அவை அஞ்சாமை

1. வகையறிந்து வல்லவை வாய்சோரார் சொல்லின்
தொகையறிந்த தூய்மை யவர்.

2. கற்றாருள் கற்றார் எனப்படுவர் கற்றார்முன்
கற்ற செலச்சொல்லு வார்.

3. பகையகத்துச் சாவார் எளியர் அரியர்
அவையகத்து அஞ்சா தவர்.

4. கற்றார்முன் கற்ற செலச்சொல்லித் தாம்கற்ற
மிக்காருள் மிக்க கொளல்.

5. ஆற்றின் அளவறிந்து கற்க அவையஞ்சா
மாற்றம் கொடுத்தற் பொருட்டு.

6. வாளொடென் வன்கண்ணர் அல்லார்க்கு நூலொடென்
நுண்ணவை அஞ்சு பவர்க்கு.

7. பகையகத்துப் பேடிகை ஒள்வாள் அவையகத்து
அஞ்சு மவன்கற்ற நூல்.

8. பல்லவை கற்றும் பயமிலரே நல்லவையுள்
நன்கு செலச்சொல்லா தார்.

9. கல்லா தவரின் கடையென்ப கற்றறிந்தும்
நல்லார் அவையஞ்சு வார்.

10. உளரெனினும் இல்லாரொடு ஒப்பர் களன்அஞ்சிக்
கற்ற செலச்சொல்லா தார்.

# 73. அவை அஞ்சாமை

1. நுட்பமும் ஆராய்ச்சியும் உள்ளவர்களிடம் சபைக் கூச்சம் இருக்காது.
2. அறிஞர் பாராட்டச் சொல்வதுதான் உயர்ந்த ஞானம்.
3. போர் வீரனைவிட தைர்யசாலி சபைக்கு அஞ்சாதவன்.
4. அறிஞர்களிடம் கேட்டு அறிஞர் மெச்ச விளக்க வேண்டும்.
5. முறைப்படி கற்க வேண்டும். முறைப்படி பேச வேண்டும்.
6. சபைக்குப் பயப்படுகிறவன் பேடிதான்.
7. பேசக் கூசுகிறவன் கல்வி பேடிகை வாள் தான்.
8. எடுத்துச் சொல்ல முடியாதவன் படிப்பு வீண்.
9. சபைக்குப் பயப்படும் படித்தவனைவிட படியாதவன் மேல்.
10. படித்தும் படியாதவன்தான் மேடை ஏறப் பயப்படுகிறவன்.

# 74. நாடு

1. தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு.

2. பெரும்பொருளால் பெட்டக்க தாகி அருங்கேட்டால்
ஆற்ற விளைவது நாடு.

3. பொறையொருங்கு மேல்வருங்கால் தாங்கி இறைவற்கு
இறையொருங்கு நேர்வது நாடு.

4. உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு.

5. பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும்
கொல்குறும்பும் இல்லது நாடு.

6. கேடறியாக் கெட்ட விடத்தும் வளங்குன்றா
நாடென்ப நாட்டின் தலை.

7. இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணும் நாட்டிற்கு உறுப்பு.

8. பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து.

9. நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரு நாடு.

10. ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே
வேந்தமை வில்லாத நாடு.

# 74. நாடு

1. நிலவளம், தொழில் வளம், கல்வி வளம் நிறைந்தது தான் நாடு.
2. வற்றாத சுரங்கங்களும் வற்றாத விளைச்சலும் நாட்டுக்குத் தேவை.
3. கொடிய வறட்சியிலும் துவளாத நாடுதான் நல்ல நாடு.
4. பசி, நோய், பகை இம்மூன்றும் இல்லாத நாடே பொன்னாடு.
5. புரட்டர்கள், துரோகிகள், போக்கிரிகள் இவர்கள் நாட்டுக்கு நோய்.
6. எந்த ஆபத்தையும் சமாளிக்கும் வளம் பொருந்திய நாடே நாடு.
7. மலை, ஆறு, காடு வளமாக இருக்க வேண்டும் நாட்டில்.
8. முயற்சியும் செல்வமும் நாட்டில் பூத்துக் குலுங்கவேண்டும்.
9. வளம் குறைந்த நாடு நல்ல நாடு ஆகாது.
10. வளம் நிறைந்தாலும் நல்ல அரசாட்சி முக்கியம்.

# 75. அரண்

1. ஆற்று பவர்க்கும் அரண்பொருள் அஞ்சித்தற்
போற்று பவர்க்கும் பொருள்.

2. மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்
காடும் உடையது அரண்.

3. உயர்வகலம் திண்மை அருமைஇந் நான்கின்
அமைவரண் என்றுரைக்கும் நூல்.

4. சிறுகாப்பிற் பேரிடத்த தாகி உறுபகை
ஊக்கம் அழிப்பது அரண்.

5. கொளற்கரிதாய்க் கொண்டகூழ்த் தாகி அகத்தார்
நிலைக்கெளிதாம் நீரது அரண்.

6. எல்லாப் பொருளும் உடைத்தாய் இடத்துதவும்
நல்லாள் உடையது அரண்.

7. முற்றியும் முற்றா தெறிந்தும் அறைப்படுத்தும்
பற்றற் கரியது அரண்.

8. முற்றாற்றி முற்றி யவரையும் பற்றாற்றிப்
பற்றியார் வெல்வது அரண்.

9. முனைமுகத்து மாற்றலர் சாய வினைமுகத்து
வீறெய்தி மாண்டது அரண்.

10. எனைமாட்சித் தாகியக் கண்ணும் வினைமாட்சி
இல்லார்கண் இல்லது அரண்.

# 75. அரண்

1. வலியவனாலும் மெலியவனாலும் (அரசனுக்கு) பாதுகாப்பு முக்கியம்.
2. அகழி, காடு, மதில் மூன்றும் வலுவாக இருக்க வேண்டும்.
3. கம்பீரகமாகவும் திண்மையாகவும் இருக்க வேண்டும் மதில்.
4. எதிரிகளை நிலைகுலையச் செய்யவேண்டும் கோட்டை.
5. உள்ளே இருப்பவர்களுக்கு எல்லா வசதியும் இருக்க வேண்டும்.
6. வளம் இருந்தால் மட்டும் போதாது. வீரர்களும் வேண்டும்.
7. எதிரிகளால் வெல்ல முடியாதது அரண்.
8. முற்றுகையிட்டவர் தோற்றோட வைக்கும் வலிய அரண்.
9. எதிரிகளுக்கு இடம் கொடுக்காத அரணே அரண்.
10. வீரர்களின் முனைப்பில்தான் கோட்டையின் பலம் இருக்கிறது.

# 76. பொருள் செயல்வகை

1. பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்லது இல்லை பொருள்.

2. இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்பு.

3. பொருளென்னும் பொய்யா விளக்கம் இருளறுக்கும்
எண்ணிய தேயத்துச் சென்று.

4. அறன்ஈனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்.

5. அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புரள விடல்.

6. உறுபொருளும் உல்கு பொருளும்தன் ஒன்னார்த்
தெறுபொருளும் வேந்தன் பொருள்.

7. அருளென்னும் அன்பீன் குழவி பொருளென்னும்
செல்வச் செவிலியால் உண்டு.

8. குன்றேறி யானைப்போர் கண்டற்றால்
தன்கைத்தொன்று
உண்டாகச் செய்வான் வினை.

9. செய்க பொருளைச் செருநர் செருக்கறுக்கும்
எஃதனிற் கூரியது இல்.

10. ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு எண்பொருள்
ஏனை இரண்டும் ஒருங்கு.

# 76. பொருள் செயல்வகை

1. அல்பனாக இருந்தாலும் பணம் இருந்தால் பெரிய மனிதன்தான்.
2. பணம் இருந்தால் போதும் புகழுக்கு மேல் புகழ் வரும்.
3. பணம் இருந்தால் காரியம் எங்கு வேண்டு மானாலும் நடக்கும்.
4. நல்ல பணக்காரன் தருமம் செய்வான். ஆனந்தமாகவும் இருப்பான்.
5. கொடுமையில் சம்பாதித்த பணம் நிலைக்காது.
6. வாரீசு இல்லாதது, சுங்கத்தில் வந்தது, போரில் வென்றது மூன்றும் அரசுக்குரிய பொருள்.
7. செல்வம் இல்லை என்றால் அருளும் இருக்காது அன்பும் இருக்காது.
8. கையில் பணம் இருந்தால் கவலை இல்லாது வாழலாம்.
9. எதிரிகளை அடக்குவதற்கு பணந்தான் தேவை.
10. பணம் தேடினால் போதும், பட்டம் புகழ் தானே வரும்.

# 77. படை மாட்சி

1. உறுப்பமைந்து ஊறஞ்சா வெல்படை வேந்தன்
வெறுக்கையு ளெல்லாம் தலை.

2. உலைவிடத்து ஊறஞ்சா வன்கண் தொலைவிடத்துத்
தொல்படைக் கல்லால் அரிது.

3. ஒலித்தக்கால் என்னாம் உவரி எலிப்பகை
நாகம் உயிர்ப்பக் கெடும்.

4. அழிவின்று அறைபோகா தாகி வழிவந்த
வன்க ணதுவே படை.

5. கூற்றுடன்று மேல்வரினும் கூடி எதிர்நிற்கும்
ஆற்ற லதுவே படை.

6. மறமானம் மாண்ட வழிச்செலவு தேற்றம்
எனநான்கே ஏமம் படைக்கு.

7. தார்தாங்கிச் செல்வது தானை தலைவந்த
போர்தாங்கும் தன்மை யறிந்து.

8. அடற்றகையும் ஆற்றலும் இல்லெனினும் தானை
படைத்தகையால் பாடு பெறும்.

9. சிறுமையும் செல்லாத் துனியும் வறுமையும்
இல்லாயின் வெல்லும் படை.

10. நிலைமக்கள் சால உடைத்தெனினும் தானை
தலைமக்கள் இல்வழி இல்.

## 77. படை மாட்சி

1. ஊக்கமும் முனைப்பும் உள்ள ராணுவமே பாதுகாப்பு.
2. தோற்றாலும் மனந்தளரா ராணுவமே ராணுவம்.
3. ஊக்கம் உடையவர் இருவர் போதும். இருநூறு பேரை வென்று விடலாம்.
4. தோல்வியில் துவளாத ஊக்கமே ராணுவ லட்சணம்.
5. எமனையும் எதிர்த்து வெல்லும் வீரப் படை.
6. அஞ்சாமையும் வெஞ்சினமும் ராணுவத்துக்கு மூச்சு.
7. மேலும் மேலும் முன்னேறும் வீரப்படை.
8. நல்ல தலைமையில் முன்னேறும் ராணுவம்.
9. ராணுவத்தை எப்பொழுதும் வாடாமல் வைத்திருக்கவேண்டும்.
10. சேனாதிபதிகளின் திறமை ராணுவத்துக்கு முக்கியம்.

# 78. படைச் செருக்கு

1. என்னைமுன் நில்லன்மின் தெவ்விர் பலர்என்னை
முன்நின்று கல்நின் றவர்.

2. கான முயலெய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது.

3. பேராண்மை என்ப தறுகண்ஒன் றுற்றக்கால்
ஊராண்மை மற்றதன் எஃகு.

4. கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்.

5. விழித்தகண் வேல்கொண் டெறிய அழித்திமைப்பின்
ஓட்டன்றோ வன்க ணவர்க்கு.

6. விழுப்புண் படாதநாள் எல்லாம் வழுக்கினுள்
வைக்கும்தன் நாளை எடுத்து.

7. சுழலும் இசைவேண்டி வேண்டா உயிரார்
கழல்யாப்புக் காரிகை நீர்த்து.

8. உறின்உயிர் அஞ்சா மறவர் இறைவன்
செறினும்சீர் குன்றல் இலர்.

9. இழைத்தது இகவாமைச் சாவாரை யாரே
பிழைத்தது ஒறுக்கிற் பவர்.

10. புரந்தார்கண் நீர்மல்கச் சாகிற்பின் சாக்காடு
இரந்துகோள் தக்கது உடைத்து.

# 78. படைச் செருக்கு

1. எதிரிகளே! ஜாக்கிரதை! என்று முழங்கும் வீரப்படை.
2. அற்ப காரியங்களில் ஈடுபடாது உயர்ந்த ராணுவம்.
3. வீரம் இருப்பதுபோல ராணுவத்திடம் இரக்கமும் இருக்கும்.
4. உடம்பில் தைத்த வேலை உருவுவான் வீரன்.
5. விழிக்கு நேரில்வேல் வந்தாலும் இமை மூட மாட்டான்.
6. போரும் காயமுந்தான் ராணுவத்துக்கு அழகு
7. வீரர்களுக்கு வீரந்தான் உயிர்.
8. நாட்டுக்காக உயிரைக் கொடுப்பவர்கள் போர் வீரர்கள்.
9. வீரத்துக்காக உயிரை விடுகிறவனை வாழ்த்து வார்கள் மக்கள்.
10. செஞ்சோற்றுக் கடன் கழிப்பான் சுத்த வீரன்.

# 79. நட்பு

1. செயற்கரிய யாவுள நட்பின் அதுபோல்
வினைக்கரிய யாவுள காப்பு.

2. நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்நீர பேதையார் நட்பு.

3. நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு.

4. நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தற் பொருட்டு.

5. புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாம் கிழமை தரும்.

6. முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு.

7. அழிவி னவைநீக்கி ஆறுய்த்து அழிவின்கண்
அல்லல் உழப்பதாம் நட்பு.

8. உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு.

9. நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனில் கொட்பின்றி
ஒல்லும்வாய் ஊன்றும் நிலை.

10. இனையர் இவரெமக்கு இன்னம்யாம் என்று
புனையினும் புல்லென்னும் நட்பு.

# 79. நட்பு

1. பாக்கியத்தில் எல்லாம் மேலான பாக்கியம் நல்ல நட்பு.
2. நல்லவர் நட்பு வளர்பிறை போல வளரும்.
3. இனியவர் உறவு கவி உறவு போன்றது.
4. நல்ல நண்பன் தவறைக் கண்டிப்பான்.
5. ஒத்த உணர்ச்சிதான் நட்புக்கு உயிர்
6. இனிக்க இனிக்கப் பேசினால் மட்டும் நட்பாகாது.
7. நல்வழி காட்டுவான் நல்ல நண்பன்.
8. அவிழ்ந்த வேட்டியை காக்கும் கைபோல் உதவுவான் நண்பன்.
9. ஆபத்துக்கு உதவுவதுதான் உயர்ந்த நட்பு.
10. நல்ல நட்புக்கு போலிப்பசப்பு எதிரி.

## 80. நட்பாராய்தல்

1. நாடாது நட்டலிற் கேடில்லை நட்டபின்
வீடில்லை நட்பாள் பவர்க்கு.

2. ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
தான்சாந் துயரம் தரும்.

3. குணனும் குடிமையும் குற்றமும் குன்றா
இனனும் அறிந்தியாக்க நட்பு.

4. குடிப்பிறந்து தன்கட் பழிநாணு வானைக்
கொடுத்தும் கொளல்வேண்டும் நட்பு.

5. அழச்சொல்லி அல்லது இடித்து வழக்கறிய
வல்லார்நட்பு ஆய்ந்து கொளல்.

6. கேட்டினும் உண்டோர் உறுதி கிளைஞரை
நீட்டி அளப்பதோர் கோல்.

7. ஊதியம் என்பது ஒருவற்குப் பேதையார்
கேண்மை ஒரீஇ விடல்.

8. உள்ளற்க உள்ளம் சிறுகுவ கொள்ளற்க
அல்லற்கண் ஆற்றறுப்பார் நட்பு.

9. கெடுங்காலைக் கைவிடுமார் கேண்மை அடுங்காலை
உள்ளினும் உள்ளம் சுடும்.

10. மருவுக மாசற்றார் கேண்மைஒன் றீத்தும்
ஒருவுக ஒப்பிலார் நட்பு.

## 80. நட்பாராய்தல்

1. கெட்டவன் உறவு கேடு உண்டாக்கும்.

2. நல்லவனா என்று சோதித்து உறவாட வேண்டும்.

3. குடும்ப நலனும் பண்பும் உடையவனே நல்ல நண்பன்.

4. தீமைக்கு அஞ்சுகிறவன் நட்பே நட்பு.

5. குற்றம் கடிந்து குணம் பெருக்குபவனே நல்ல நண்பன்.

6. ஆபத்து வந்த பின் தெரியும் நண்பனின் இயல்பு.

7. கெட்டவன் உறவை விடுவதே வாழ்க்கையில் வெற்றி.

8. கஷ்டத்தில் கைவிடுகிறவர் உறவு வேண்டவே வேண்டாம்.

9. ஆபத்தில் விலகுகிறவனை நினைத்தாலே மனம் வேகும்.

10. நல்லவர் உறவை உயிருக்கு உயிராக மதிக்க வேண்டும்.

## 81. பழைமை

1. பழைமை எனப்படுவது யாதெனின் யாதும்
கிழமையைக் கீழ்ந்திடா நட்பு.

2. நட்பிற் குறுப்புக் கெழுதகைமை மற்றதற்கு
உப்பாதல் சான்றோர் கடன்.

3. பழகிய நட்பெவன் செய்யும் கெழுதகைமை
செய்தாங்கு அமையாக் கடை.

4. விழைதகையான் வேண்டி யிருப்பர் கெழுதகையாற்
கேளாது நட்டார் செயின்.

5. பேதைமை ஒன்றோ பெருங்கிழமை என்றுணர்க
நோதக்க நட்டார் செயின்.

6. எல்லைக்கண் நின்றார் துறவார் தொலைவிடத்தும்
தொல்லைக்கண் நின்றார் தொடர்பு.

7. அழிவந்த செய்யினும் அன்பறார் அன்பின்
வழிவந்த கேண்மை யவர்.

8. கேளிழுக்கம் கேளாக் கெழுதகைமை வல்லார்க்கு
நாளிழுக்கம் நட்டார் செயின்.

9. கெடாஅ வழிவந்த கேண்மையார் கேண்மை
விடாஅர் விழையும் உலகு.

10. விழையார் விழையப் படுப பழையார்கண்
பண்பின் தலைப்பிரியா தார்.

# 81. பழைமை

1. உறவு காரணமாக உரிமை வரும். அதுதான் பழைமை.
2. உறவுக்கென்று ஒரு தனித்த மரியாதை உண்டு.
3. உறவை மதிக்காதவனுக்கு நண்பர்கள் இல்லை.
4. தவறுகளைத் தாங்குகிற பண்பு உறவுக்கு உண்டு.
5. உரிமை காரணமாக தவறுகள் நிகழும்.
6. தொல்லை கொடுத்தாலும் தாங்கிக் கொள்ளும் உறவு.
7. பெரியகேடு செய்யினும் பொறுத்துக் கொள்வர்.
8. கெட்டது செய்யினும் நல்லதாக்கி விடுவார்கள் நண்பர்கள்.
9. தொடர்ந்து வருகிற உறவுதான் உலகையே காக்கிறது.
10. தொடர்பை மதிக்கிறவர்களுக்கு பகையே இல்லை.

# 82. தீ நட்பு

1. பருகுவார் போலினும் பண்பிலார் கேண்மை
பெருகலிற் குன்றல் இனிது.

2. உறின்நட்டு அறின்ஒரூஉம் ஒப்பிலார் கேண்மை
பெறினும் இழப்பினும் என்.

3. உறுவது சீர்தூக்கும் நட்பும் பெறுவது
கொள்வாரும் கள்வரும் நேர்.

4. அமரகத்து ஆற்றறுக்கும் கல்லாமா அன்னார்
தமரின் தனிமை தலை.

5. செய்தேமஞ் சாராச் சிறியவர் புன்கேண்மை
எய்தலின் எய்தாமை நன்று.

6. பேதை பெருங்கெழீஇ நட்பின் அறிவுடையார்
ஏதின்மை கோடி உறும்.

7. நகைவகைய ராகிய நட்பின் பகைவரால்
பத்தடுத்த கோடி உறும்.

8. ஒல்லும் கருமம் உடற்று பவர்கேண்மை
சொல்லாடார் சோர விடல்.

9. கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு.

10. எனைத்தும் குறுகுதல் ஓம்பல் மனைக்கெழீஇ
மன்றில் பழிப்பார் தொடர்பு.

## 82. தீ நட்பு

1. வஞ்சகர்களின் நட்பைவிட பகையே நல்லது.

2. மோசக்காரர்களின் பழக்கம் நட்பாகாது.

3. என்ன பலன் என்று பழகுகிறவர்கள் திருடர்கள்.

4. காலை வாரி விடும் நண்பர்கள் மோசக் காரர்கள்.

5. நன்றி உணர்வில்லாதவர் நட்பு நஞ்சுக்குச் சமம்.

6. நல்லோர் பகையைவிட புல்லோர் உறவு கொடியது.

7. மாட்டிவிட்டு வேடிக்கை பார்க்கும் நண்பன் தான் துரோகி.

8. முன்னேற்றத்தைக் கெடுப்பவர் உறவை விட்டுவிட வேண்டும்.

9. மோசக்காரர் உறவை நினைத்தாலே குலைபதறும்.

10. காட்டிக் கொடுப்பவர் உறவைக் கைவிட வேண்டும்.

# 83. கூடா நட்பு

1. சீரிடம் காணின் எறிதற்குப் பட்டடை
நேரா நிரந்தவர் நட்பு.

2. இனம்போன்று இனமல்லார் கேண்மை மகளிர்
மனம்போல வேறு படும்.

3. பலநல்ல கற்றக் கடைத்தும் மனநல்லர்
ஆகுதல் மாணார்க்கு அரிது.

4. முகத்தின் இனிய நகாஅ அகத்தின்னா
வஞ்சரை அஞ்சப் படும்.

5. மனத்தின் அமையா தவரை எனைத்தொன்றும்
சொல்லினால் தேறற்பாற்று அன்று.

6. நட்டார்போல் நல்லவை சொல்லினும் ஒட்டார்சொல்
ஒல்லை உணரப் படும்.

7. சொல்வணக்கம் ஒன்னார்கண் கொள்ளற்க வில்வணக்கம்
தீங்கு குறித்தமை யான்.

8. தொழுதகை யுள்ளும் படையொடுங்கும் ஒன்னார்
அழுதகண் ணீரும் அனைத்து.

9. மிகச்செய்து தம்எள்ளு வாரை நகச்செய்து
நட்பினுள் சாப்புல்லற் பாற்று.

10. பகைநட்பாம் காலம் வருங்கால் முகநட்டு
அகநட்பு ஒரீஇ விடல்.

## 83. கூடா நட்பு

1. கொடியவர்களின் உறவு வெடி மருந்து போன்றது.
2. பித்தலாட்டக்காரர் உறவும் விபச்சாரிகளின் உறவும் ஒன்று.
3. அற்பர்களுக்கு நட்பின் மேன்மை தெரியாது.
4. பசப்பிப் பழகும் வஞ்சகர் கொடியவர்.
5. பொய்யர்களின் சொல்லை நம்பக் கூடாது.
6. வஞ்சகர்கள் புளுகுவார்கள். புளுகு நிலைக்காது.
7. வில் வளைந்து கொல்லும். வஞ்சகமும் அப்படியே.
8. கும்பிட்டுக் கும்பிட்டே குழிபறிப்பர் கொடியோர்.
9. கேடு செய்து பிறகு மழுப்புகிறவரை உதறிவிட வேண்டும்.
10. உள்ளன்பு இல்லாதாரை ஒதுக்கிவிட வேண்டும்.

# 84. பேதைமை

1. பேதைமை என்பதொன்று யாதெனின் ஏதங்கொண்டு
ஊதியம் போக விடல்.

2. பேதைமையு ளெல்லாம் பேதைமை காதன்மை
கையல்ல தன்கட் செயல்.

3. நாணாமை நாடாமை நாரின்மை யாதொன்றும்
பேணாமை பேதை தொழில்.

4. ஓதி உணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப்
பேதையின் பேதையார் இல்.

5. ஒருமைச் செயலாற்றும் பேதை எழுமையும்
தான்புக் கழுந்தும் அளறு.

6. பொய்படும் ஒன்றோ புனைபூணும் கையறியாப்
பேதை வினைமேற் கொளின்.

7. ஏதிலார் ஆரத் தமர்பசிப்பர் பேதை
பெருஞ்செல்வம் உற்றக் கடை.

8. மையல் ஒருவன் களித்தற்றால் பேதைதன்
கையொன்று உடைமை பெறின்.

9. பெரிதினிது பேதையார் கேண்மை பிரிவின்கண்
பீழை தருவதொன்று இல்.

10. கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றால் சான்றோர்
குழாஅத்துப் பேதை புகல்.

# 84. பேதைமை

1. நல்லதை விட்டுவிட்டு கெட்டதைத் தேடுவது பேதைமை.
2. தேவை இல்லாத சிக்கலில் மாட்டுவான் பைத்தியக்காரன்.
3. கேவலத்துக்குப் பயப்படமாட்டான் பேதை.
4. படிப்பான், பிரசங்கம் பண்ணுவான் ஆனால் தாறுமாறாய் நடப்பான் பேதை.
5. பேதையின் இழி செயலை மறக்கவே முடியாது.
6. பேதையின் செயலில் உண்மை இருக்காது. பகட்டிருக்கும்.
7. வேண்டியவர்களைப் பட்டினி போட்டு வேண்டாதார்க்கு விருந்து நடத்துவான்.
8. பேதைக்கு நாலு காசு கிடைத்தால் போதும். துள்ளுவான்.
9. பேதையின் உறவை விடுவதுதான் இன்பம்.
10. ஆயிரம் பேரில் ஒரு பேதை இருந்தாலே அசிங்கந்தான்.

# 85. புல்லறிவாண்மை

1. அறிவின்மை இன்மையுள் இன்மை பிறிதின்மை
இன்மையா வையாது உலகு.

2. அறிவிலான் நெஞ்சுவந்து ஈதல் பிறிதுயாதும்
இல்லை பெறுவான் தவம்.

3. அறிவிலார் தாம்தம்மைப் பீழிக்கும் பீழை
செறுவார்க்கும் செய்தல் அரிது.

4. வெண்மை எனப்படுவது யாதெனின் ஒண்மை
உடையம்யாம் என்னும் செருக்கு.

5. கல்லாத மேற்கொண்டு ஒழுகல் கசடற
வல்லதூஉம் ஐயம் தரும்.

6. அற்றம் மறைத்தலோ புல்லறிவு தம்வயின்
குற்றம் மறையா வழி.

7. அருமறை சோரும் அறிவிலான் செய்யும்
பெருமிறை தானே தனக்கு.

8. ஏவவும் செய்கலான் தான்தேறான் அவ்வுயிர்
போஒம் அளவுமோர் நோய்.

9. காணாதான் காட்டுவான் தான்காணான் காணாதான்
கண்டானாம் தான்கண்ட வாறு.

10. உலகத்தார் உண்டென்பது இல்லென்பான் வையத்து
அலகையா வைக்கப் படும்.

# 85. புல்லறிவாண்மை

1. போலி அறிவைப் போல மோசமானது வேறொன்றும் இல்லை.
2. அறிவில்லாதவனால் நல்லது செய்ய முடியாது.
3. தன்னைத்தானே அழித்துக் கொள்வான் மூடன்.
4. போலி அறிஞனுக்கு திமிர் அதிகம்.
5. படியாதவன் உளறல் படித்தவர்களைச் சஞ்சலப் படுத்தும்.
6. போலித்தனத்தை மறைக்கப் பார்ப்பான் மூடன்.
7. புல்லறிவாளன் செயலால் ஞானமே கேவலப் படும்.
8. சொன்னாலும் கேட்க மாட்டான் மூடன்.
9. இல்லாததை இருக்கிறது என்று சாதிப்பான் பகட்டுக்காரன்.
10. இருப்பதை இல்லை என்று சாதிப்பதும் மூடன் செயலே.

# 86. இகல்

1. இகலென்ப எல்லா உயிர்க்கும் பகலென்னும்
பண்பின்மை பாரிக்கும் நோய்.

2. பகல்கருதிப் பற்றா செயினும் இகல்கருதி
இன்னாசெய் யாமை தலை.

3. இகலென்னும் எவ்வநோய் நீக்கின் தவலில்லாத்
தாவில் விளக்கம் தரும்.

4. இன்பத்துள் இன்பம் பயக்கும் இகலென்னும்
துன்பத்துள் துன்பம் கெடின்.

5. இகலெதிர் சாய்ந்தொழுக வல்லாரை யாரே
மிகலூக்கும் தன்மை யவர்.

6. இகலின் மிகலினிது என்பவன் வாழ்க்கை
தவலும் கெடலும் நணித்து.

7. மிகல்மேவல் மெய்ப்பொருள் காணார் இகல்மேவல்
இன்னா அறிவி னவர்.

8. இகலிற்கு எதிர்சாய்தல் ஆக்கம் அதனை
மிகலூக்கின் ஊக்குமாம் கேடு.

9. இகல்காணான் ஆக்கம் வருங்கால் அதனை
மிகல்காணும் கேடு தரற்கு.

10. இகலானாம் இன்னாத எல்லாம் நகலானாம்
நன்னயம் என்னும் செருக்கு.

# 86. இகல்

1. முரண்பாடு என்பது உண்மை உறவுக்கு எதிரி.
2. உறவு இல்லை என்றாலும் முரண்பாடு கூடாது.
3. முரண்பாடு ஒழிந்தால்தான் முன்னேற்றம் ஏற்படும்.
4. முரண்பாடு இல்லை என்றால் வாழ்க்கை யில் இன்பந்தான்.
5. முரண்பாட்டை விட்டவனுக்கு வெற்றி உறுதி.
6. மனதுள் புழுங்குகிறவன் கெடுவது உறுதி.
7. முரண்பாட்டில் உழல்கிறவனுக்கு உண்மை விளங்காது.
8. கசப்பை மறப்பதில்தான் முன்னேற்றம் இருக்கிறது.
9. வெறுப்பு வளர வளர கேடும் வளரும்.
10. மூடி மறைத்தால் துன்பம், திறந்த வாழ்வோ இன்பம்.

# 87. பகை மாட்சி

1. வலியார்க்கு மாறேற்றல் ஓம்புக ஓம்பா
மெலியார்மேல் மேக பகை.

2. அன்பிலன் ஆன்ற துணையிலன் தான்துவ்வான்
என்பரியும் ஏதிலான் துப்பு.

3. அஞ்சும் அறியான் அமைவிலன் ஈகலான்
தஞ்சம் எளியன் பகைக்கு.

4. நீங்கான் வெகுளி நிறையிலன் எஞ்ஞான்றும்
யாங்கணும் யார்க்கும் எளிது.

5. வழிநோக்கான் வாய்ப்பன செய்யான் பழிநோக்கான்
பண்பிலன் பற்றார்க்கு இனிது.

6. காணாச் சினத்தான் கழிபெருங் காமத்தான்
பேணாமை பேணப் படும்.

7. கொடுத்தும் கொளல்வேண்டும் மன்ற அடுத்திருந்து
மாணாத செய்வான் பகை.

8. குணனிலனாய்க் குற்றம் பலவாயின் மாற்றார்க்கு
இனனிலனாம் ஏமாப்பு உடைத்து.

9. செறுவார்க்குச் சேணிகவா இன்பம் அறிவிலா
அஞ்சும் பகைவாப் பெறின்.

10. கல்லான் வெகுளும் சிறுபொருள் எஞ்ஞான்றும்
ஒல்லானை ஒல்லாது ஒளி.

# 87. பகை மாட்சி

1. வலியவர்களுடன் மோதுவது ஆபத்து.

2. உற்றதுணை இல்லாதவனுக்கு வாழ்வு இல்லை.

3. முரட்டுத் தைர்யம் அழிவைக் கொடுக்கும்.

4. நிதானம் இல்லாதவன் திண்டாடுவான்.

5. ஆழம் தெரியாமல் காலை விடுகிறவன் அழிவான்.

6. எரிச்சலும் வெறியும் ஆக்கக் கேடுகள்.

7. அடுத்துக் கெடுப்பவனை விட்டுவிட வேண்டும்.

8. உண்மை இல்லாமல் பழகுகிறவன் உறவு ஆபத்து.

9. நிதானம் தெரியாதவன் அழிவது உறுதி.

10. எதற்கெடுத்தாலும் சீறுவான் மூடன்.

# 88. பகைத்திறம் தெரிதல்

1. பகைஎன்னும் பண்பி லதனை ஒருவன்
நகையேயும் வேண்டற்பாற்று அன்று.

2. வில்லே ருழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லே ருழவர் பகை.

3. ஏமுற் றவரினும் ஏழை தமியனாய்ப்
பல்லார் பகைகொள் பவன்.

4. பகைநட்பாக் கொண்டொழுகும் பண்புடை யாளன்
தகைமைக்கண் தங்கிற்று உலகு.

5. தன்துணை இன்றால் பகைஇரண்டால் தான்ஒருவன்
இன்துணையாக் கொள்கவற்றின் ஒன்று.

6. தேறினும் தேறா விடினும் அழிவின்கண்
தேறான் பகாஅன் விடல்.

7. நோவற்க நொந்தது அறியார்க்கு மேவற்க
மென்மை பகைவ ரகத்து.

8. வகையறிந்து தற்செய்து தற்காப்ப மாயும்
பகைவர்கண் பட்ட செருக்கு.

9. இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த விடத்து.

10. உயிர்ப்ப உளரல்லர் மன்ற செயிர்ப்பவர்
செம்மல் சிதைக்கலா தார்.

## 88. பகைத்திறம் தெரிதல்

1. பகைமையை வளர்க்கக் கூடாது.

2. போர் வீரன் பகையைவிட அறிஞன் பகை கொடியது.

3. பகையை மேலும் மேலும் வளர்ப்பவன் கிறுக்கன்.

4. எதிரியை வசப்படுத்துவதுதான் உயர்ந்த வெற்றி.

5. ஆதரவு இல்லை. பகை வளர்கிறது என்றால் அழிவு உறுதி.

6. தொடர்ந்து பகைமை பாராட்டுவது ஆபத்து.

7. எதிரிகளுக்கு விட்டுக் கொடுப்பதும் ஆபத்து.

8. பொறுத்து ஆராய்ந்து செயல்பட்டால் வெற்றிதான்.

9. முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும் ஆபத்தை.

10. எதிரியின் கொட்டத்தை அடக்கி விட வேண்டும். இல்லை என்றால் வாழ்வு இல்லை.

## 89. உட்பகை

1. நிழல்நீரும் இன்னாத இன்னா தமர்நீரும்
இன்னாவாம் இன்னா செயின்.

2. வாள்போல் பகைவரை அஞ்சற்க அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு.

3. உட்பகை அஞ்சித்தற் காக்க உலைவிடத்து
மட்பகையின் மாணத் தெறும்.

4. மனமாணா உட்பகை தோன்றின் இனமாணா
ஏதம் பலவுந் தரும்.

5. உறல்முறையான் உட்பகை தோன்றின் இறல்முறையான்
ஏதம் பலவுந் தரும்.

6. ஒன்றாமை ஒன்றியார் கட்படின் எஞ்ஞான்றும்
பொன்றாமை ஒன்றல் அரிது.

7. செப்பின் புணர்ச்சிபோல் கூடினும் கூடாதே
உட்பகை உற்ற குடி.

8. அரம்பொருத பொன்போலத் தேயும் உரம்பொருது
உட்பகை உற்ற குடி.

9. எட்பக வன்ன சிறுமைத்தே ஆயினும்
உட்பகை உள்ளதாம் கேடு.

10. உடம்பாடு இலாதவர் வாழ்க்கை குடங்கருள்
பாம்போடு உடனுறைந் தற்று.

## 89. உட்பகை

1. உண்மை இல்லை என்றால் அந்த உறவு தொல்லை தரும்.
2. கொல்லும் வாளை விடக் கொடியது உட்பகை.
3. மண் குதிரை போல உட்பகை ஏமாற்றிவிடும்.
4. உடனிருந்து கெடுக்கிறவன் கொடிய நோய்.
5. உறவுக்காரன் ஆனாலும் பொய்யுறவு கூடாது.
6. உட்பகையை விடாதவரைக்கும் ஆபத்துத் தான்.
7. உட்பகை இருந்தால் ஒட்டவே ஒட்டாது.
8. உட்பகை இருந்தால் குடும்பம் சீரழியும்.
9. எள்ளுக்காய் பிளப்பது போல் உட்பகையால் குடும்பம் பிளவுபடும்.
10. கொடிய விஷப்பாம்பு போன்றது உட்பகை.

# 90. பெரியாரைப் பிழையாமை

1. ஆற்றுவார் ஆற்றல் இகழாமை போற்றுவார்
போற்றலு ளெல்லாம் தலை.

2. பெரியாரைப் பேணாது ஒழுகின் பெரியாரால்
பேரா இடும்பை தரும்.

3. கெடல்வேண்டின் கேளாது செய்க அடல்வேண்டின்
ஆற்று பவர்கண் இழுக்கு.

4. கூற்றத்தைக் கையால் விளித்தற்றால் ஆற்றுவார்க்கு
ஆற்றாதார் இன்னா செயல்.

5. யாண்டுச்சென்று யாண்டும் உளராகார் வெந்துப்பின்
வேந்து செறப்பட் டவர்.

6. எரியால் சுடப்படினும் உய்வுண்டாம் உய்யார்
பெரியார்ப் பிழைத்தொழுகு வார்.

7. வகைமாண்ட வாழ்க்கையும் வான்பொருளும் என்னாம்
தகைமாண்ட தக்கார் செறின்.

8. குன்றன்னார் குன்ற மதிப்பின் குடியொடு
நின்றன்னார் மாய்வர் நிலத்து.

9. ஏந்திய கொள்கையார் சீறின் இடைமுரிந்து
வேந்தனும் வேந்து கெடும்.

10. இறந்தமைந்த சார்புடைய ராயினும் உய்யார்
சிறந்தமைந்த சீரார் செறின்.

# 90. பெரியாரைப் பிழையாமை

1. உயர்ந்தவர்களை மதித்து உபசரிக்க வேண்டும்.
2. பெரியவர்களை அவமதிப்பது பெரிய ஆபத்து.
3. முன்னேற வேண்டுமா? பெரியவர்களின் ஆசி தேவை.
4. உயர்ந்தவர்களை அவமதித்தல் அழிவுக்கு அச்சாரம்.
5. உயர்ந்தோனை மதிக்காதவன் உருப்பட மாட்டான்.
6. தீயை விட அழிவை உண்டாக்கும் பெரியோர் பகை.
7. மேதைகள் வெறுத்தால் அரசாங்கமே ஆடிவிடும்.
8. மாமேதைகள் மனம் நொந்தால் குடும்பமே நாசந்தான்.
9. லட்சிய புருஷர்கள் வெறுத்தால் தொலைந்தது வாழ்க்கை.
10. பெரியோரின் விரோதம் பெரிய ஆபத்து.

# 91. பெண்வழிச் சேறல்

1. மனைவிழைவார் மாண்பயன் எய்தார்
 வினைவிழைவார்
வேண்டாப் பொருளும் அது.

2. பேணாது பெண்விழைவான் ஆக்கம் பெரியதோர்
நாணாக நாணுத் தரும்.

3. இல்லாள்கண் தாழ்ந்த இயல்பின்மை எஞ்ஞான்றும்
நல்லாருள் நாணுத் தரும்.

4. மனையாளை அஞ்சும் மறுமையி லாளன்
வினையாண்மை வீறெய்தல் இன்று.

5. இல்லாளை அஞ்சுவான் அஞ்சுமற் றெஞ்ஞான்றும்
நல்லார்க்கு நல்ல செயல்.

6. இமையாரின் வாழினும் பாடிலரே இல்லாள்
அமையார்தோள் அஞ்சு பவர்.

7. பெண்ணேவல் செய்தொழுகும் ஆண்மையின்
 நாணுடைப்
பெண்ணே பெருமை உடைத்து.

8. நட்டார் குறைமுடியார் நன்றாற்றார் நன்னுதலாள்
பெட்டாங்கு ஒழுகு பவர்.

9. அறவினையும் ஆன்ற பொருளும் பிறவினையும்
பெண்ஏவல் செய்வார்கண் இல்.

10. எண்சேர்ந்த நெஞ்சத் திடனுடையார்க்கு எஞ்சான்றும்
பெண்சேர்ந்தாம் பேதைமை இல்.

## 91. பெண்வழிச் சேறல்

1. கடமையில் கருத்துடையவன் காம வெறியில் சிக்க மாட்டான்.
2. காமவெறிக்கு அடிமையானவனிடம் மானம் இருக்காது.
3. அடிமைப் படுவது தவறு. மனைவியிடம் அடிமைப் படுவதும் அப்படியே.
4. மனைவியிடம் அன்பு செலுத்த வேண்டும். பயப்படக்கூடாது.
5. மனைவிக்குப் பயப்படுகிறவன் பேடி. மனைவிக்குப் பயப்படுகிறவன் கெட்டவன்.
6. அரசனே ஆனாலும் ஆசைக்கு அடிமை யானால் பேடிதான்.
7. பசுப்புக்காரியை விட மட்டமானவன் பசப்புக்கு மயங்குகிறவன்.
8. பெண்ணழகில் சிக்கினவன் நல்லது செய்ய மாட்டான்.
9. பெண்ணுக்கு அடிமையானவன் ஒழுக்கம் கெட்டவன்.
10. பண்புடையவர்கள் காமவலையில் சிக்க மாட்டார்கள்.

## 92. வரைவின் மகளிர்

1. அன்பின் விழையார் பொருள்விழையும் ஆய்தொடியார்
இன்சொல் இழுக்குத் தரும்.
2. பயன்தூக்கிப் பண்புரைக்கும் பண்பின் மகளிர்
நயன்தூக்கி நள்ளா விடல்.
3. பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம் இருட்டறையில்
ஏதில் பிணம்தழீஇ யற்று.
4. பொருட்பொருளார் புன்னலம் தோயார் அருட்பொருள்
ஆயும் அறிவி னவர்.
5. பொதுநலத்தார் புன்னலம் தோயார் மதிநலத்தின்
மாண்ட அறிவி னவர்.
6. தந்நலம் பாரிப்பார் தோயார் தகைசெருக்கிப்
புன்னலம் பாரிப்பார் தோள்.
7. நிறைநெஞ்சம் இல்லவர் தோய்வர் பிறநெஞ்சிற்
பேணிப் புணர்பவர் தோள்.
8. ஆயும் அறிவினர் அல்லார்க்கு அணங்கென்ப
மாய மகளிர் முயக்கு.
9. வரைவிலா மாணிழையார் மென்றோள் புரையிலாப்
பூரியர்கள் ஆழும் அளறு.
10. இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்
திருநீக்கப் பட்டார் தொடர்பு.

## 92. வரைவின் மகளிர்

1. பொய்ச் சிரிப்பால் மயக்குவார்கள் பரத்தையர்.
2. பரத்தையரை நல்லவர்கள் பார்க்க மாட்டார்கள்.
3. பரத்தையர் உறவு பிணத்தைக் கட்டி அழுவது போன்றது.
4. பரத்தையர் பசப்பு அருளாளரிடம் செல்லாது.
5. அறிஞர்கள் பரத்தையருடன் பழக மாட்டார்கள்.
6. வாழ்க்கையில் முன்னேறுகிறவன் பரத்தை யை விரும்பான்.
7. அற்பர்கள்தாம் பரத்தையருடன் பழகுவார் கள்.
8. மடையன் கண்ணுக்கு பரத்தை அரம்பை மாதிரித் தெரிவாள்.
9. பரத்தையருடன் உறவாடுவது நரக வேதனை.
10. குடி சூது பரத்தமை மூன்றும் ஆக்கத்துக்கு கேடு.

# 93. கள்ளுண்ணாமை

1. உட்கப் படாஅர் ஒளியிழப்பர் எஞ்ஞான்றும்
 கட்காதல் கொண்டொழுகு வார்.

2. உண்ணற்க கள்ளை உணில்உண்க சான்றோரான்
 எண்ணப் படவேண்டா தார்.

3. ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால் என்மற்றுச்
 சான்றோர் முகத்துக் களி.

4. நாண்என்னும் நல்லாள் புறங்கொடுக்கும் கள்ளென்னும்
 பேணாப் பெருங்குற்றத் தார்க்கு.

5. கையறியாமை யுடைத்தே பொருள் கொடுத்து
 மெய்யறி யாமை கொளல்.

6. துஞ்சினார் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும்
 நஞ்சுண்பார் கள்ளுண் பவர்.

7. உள்ளொற்றி உள்ளூர் நகப்படுவர் எஞ்ஞான்றும்
 கள்ளொற்றிக் கண்சாய் பவர்.

8. களித்தறியேன் என்பது கைவிடுக நெஞ்சத்து
 ஒளித்ததூஉம் ஆங்கே மிகும்.

9. களித்தானைக் காரணம் காட்டுதல் கீழ்நீர்க்
 குளித்தானைத் தீத்துரீஇ யற்று.

10. கள்ளுண்ணாப் போழ்தில் களித்தானைக் காணுங்கால்
 உள்ளான்கொல் உண்டதன் சோர்வு.

# 93. கள்ளுண்ணாமை

1. குடிகாரனிடம் மானம் இருக்காது. மரியாதையும் இருக்காது.
2. குடிகாரனைக் கண்டால் எல்லாரும் ஒதுங்கு வார்கள்.
3. பெற்றதாய்கூட குடிகாரனை வெறுப்பாள்.
4. வெட்கம் என்பது குடிகாரனிடம் இருக்காது.
5. பணத்தைக் கொடுத்து கேவலப்படுகிறான் குடிகாரன்.
6. குடிகாரன் குடிப்பது கள் அன்று, நஞ்சு.
7. வீடு, தெரு, ஊர் எல்லாம் வெறுக்கும் குடிகாரனை.
8. குடிகாரன் கண்டபடி உளறுவான்.
9. குடிகாரன் திருந்தவேமாட்டான்.
10. குடிகாரனுக்கு புத்தி வேலை செய்யாது.

## 94. சூது

1. வேண்டற்க வென்றிடினும் சூதினை வென்றதூஉம்
தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று.

2. ஒன்றெய்தி நூறிழக்கும் சூதர்க்கும் உண்டாங்கொல்
நன்றெய்தி வாழ்வதோர் ஆறு.

3. உருளாயம் ஓவாது கூறின் பொருளாயம்
போஒய்ப் புறமே படும்.

4. சிறுமை பலசெய்து சீரழிக்கும் சூதின்
வறுமை தருவதொன்று இல்.

5. கவறும் கழகமும் கையும் தருக்கி
இவறியார் இல்லாகி யார்.

6. அகடாரார் அல்லல் உழப்பர்சூ தென்னும்
முகடியால் மூடப்பட் டார்.

7. பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும்
கழகத்துக் காலை புகின்.

8. பொருள்கெடுத்துப் பொய்மேற் கொளீஇ அருள்கெடுத்து
அல்லல் உழப்பிக்கும் சூது.

9. உடைசெல்வம் ஊணொளி கல்விஎன்று ஐந்தும்
அடையாவாம் ஆயம் கொளின்.

10. இழத்தொறூஉம் காதலிக்கும் சூதேபோல் துன்பம்
உழத்தொறூஉம் காதற்று உயிர்.

## 94. சூது

1. வெற்றி கிடைத்தாலும் சூது விளையாடக் கூடாது.
2. ஒரு நாள் ஜெயிக்கும் நூறு நாள் தோற்கும்.
3. சூதாடியிடம் செல்வம் தங்காது.
4. சூது விளையாடுகிறவன் கேவலப் படுவான்.
5. சூது விளையாண்டு அரசர்களே அநாதை ஆனார்கள்.
6. சூதாட்டக்காரன் சோற்றுக்கே திண்டாடு வான்.
7. சூதில் சிக்கினால் பணமும் போகும் பண்பும் போய்விடும்.
8. சூதாட்டத்தில் பொருளும் போய்விடும். அருளும் போய்விடும்.
9. சூதாட்டம் விரட்டி விரட்டி அடிக்கும்.
10. தோற்கத் தோற்க சூதில் வெறி உண்டாகும்.

# 95. மருந்து

1. மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று.

2. மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்.

3. அற்றால் அளவறிந்து உண்க அஃதுடம்பு
பெற்றான் நெடிதுய்க்கு மாறு.

4. அற்றது அறிந்து கடைப்பிடித்து மாறல்ல
துய்க்க துவரப் பசித்து.

5. மாறுபாடு இல்லாத உண்டி மறுத்துண்ணின்
ஊறுபாடு இல்லை உயிர்க்கு.

6. இழிவறிந்து உண்பான்கண் இன்பம்போல் நிற்கும்
கழிபே ரிரையான்கண் நோய்.

7. தீயள வன்றித் தெரியான் பெரிதுண்ணின்
நோயள வின்றிப் படும்.

8. நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்.

9. உற்றான் அளவும் பிணியளவும் காலமும்
கற்றான் கருதிச் செயல்.

10. உற்றவன் தீர்ப்பான் மருந்துஉழைச் செல்வானென்று
அப்பால்நாற் கூற்றே மருந்து.

## 95. மருந்து

1. உண்ணும் உணவு அளவுக்கு அதிகமும் தவறு. குறைவும் தவறு.
2. ஜீரணம் ஆவதற்குத் தக்கபடி உண்பதே ஆரோக்கியம்.
3. ஜீரணித்தபின் அளவோடு உண்ண வேண்டும்.
4. ஜீரணித்தபின், பசி எடுத்தபின் அளவோடு உண்ண வேண்டும்.
5. சாப்பாட்டில் அது இது என்று பலவகை கூடாது.
6. குறைய உண்பவன் நன்றாக இருப்பான். நிறைய உண்பவன் தொல்லைப் படுவான்.
7. அளவுக்கு மீறிய உணவுதான் நோய்களுக்குக் காரணம்.
8. நோய் இன்னதென்று கண்டபின் மருத்துவம் செய்ய வேண்டும்.
9. நோயாளியின் நிலை, பருவநிலை, நோய் நிலை மூன்றும் முக்கியம்.
10. மருந்து மட்டும் போதாது, யோகமும் வேண்டும்.

# 7. ஒழிபியல்

## 96. குடிமை

1. இற்பிறந்தார் கண்அல்லது இல்லை இயல்பாகச்
செப்பமும் நாணும் ஒருங்கு.

2. ஒழுக்கமும் வாய்மையும் நாணும்இம் மூன்றும்
இழுக்கார் குடிப்பிறந் தார்.

3. நகைஈகை இன்சொல் இகழாமை நான்கும்
வகைஎன்ப வாய்மைக் குடிக்கு.

4. அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்தல் இலர்.

5. வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பில் தலைப்பிரிதல் இன்று.

6. சலம்பற்றிச் சால்பில செய்பார்மா சற்ற
குலம்பற்றி வாழ்தும்என் பார்.

7. குடிப்பிறந்தார் கண்விளங்கும் குற்றம் விசும்பின்
மதிக்கண் மறுப்போல் உயர்ந்து.

8. நலத்தின்கண் நாரின்மை தோன்றின் அவனைக்
குலத்தின்கண் ஐயப் படும்.

9. நிலத்தில் கிடந்தமை கால்காட்டும் காட்டும்
குலத்தில் பிறந்தார்வாய்ச் சொல்.

10. நலம்வேண்டின் நாணுடைமை வேண்டும் குலம்வேண்டின்
வேண்டுக யார்க்கும் பணிவு.

# 7. ஒழிபியல்

## 96. குடிமை

1. குடும்பப் பண்பாடு இருந்தால் செயலில் திருத்தம் இருக்கும்.
2. குடும்ப நலம் உடையவர்களிடம் ஒழுக்கமும் உண்மையும் இருக்கும்.
3. தாராளம், ஈகை, அன்பு மூன்றும் குடிப் பிறப்பின் பண்புகள்.
4. கோடிக்கணக்கில் பணம் வரினும், குற்றம் செய்ய மாட்டார்கள் பண்பாளர்கள்.
5. வறுமையிலும் செம்மையைக் காட்டும் உயர்ந்த குடும்பம்.
6. நற்குடிப் பிறந்தவரிடம் பொறாமை இருக்காது.
7. சான்றோரின் சிறிய தவறும் பெரிதாகத் தெரியும்.
8. செயல் மூலம் ஒருவன் குடும்பத்தைக் கண்டு பிடிக்கலாம்.
9. ஒருவன் பேசுகிற பேச்சே அவன் குடும்ப இயல்பைக் காட்டிவிடும்.
10. பண்பட்ட குடும்பம் மரியாதையாகப் பழகும்.

# 97. மானம்

1. இன்றி யமையாச் சிறப்பின ஆயினும்
குன்ற வருப விடல்.

2. சீரினும் சீரல்ல செய்யாரே சீரொடு
பேராண்மை வேண்டு பவர்.

3. பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய
சுருக்கத்து வேண்டும் உயர்வு.

4. தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையின் இழிந்தக் கடை.

5. குன்றின் அனையாரும் குன்றுவர் குன்றுவ
குன்றி அனைய செயின்.

6. புகழ்இன்றால் புத்தேள்நாட்டு உய்யாதால் என்மற்று
இகழ்வார்பின் சென்று நிலை.

7. ஒட்டார்பின் சென்றொருவன் வாழ்தலின் அந்நிலையே
கெட்டான் எனப்படுதல் நன்று.

8. மருந்தோமற்று ஊன்ஓம்பும் வாழ்க்கை பெருந்தகைமை
பீடழிய வந்த இடத்து.

9. மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்.

10. இளிவரின் வாழாத மானம் உடையார்
ஒளிதொழுது ஏத்தும் உலகு.

# 97. மானம்

1. வசதியை நாடி மானத்தை விடக் கூடாது.

2. சான்றோர் என்றும் புன்தொழிலில் ஈடுபட மாட்டார்கள்.

3. பணிவுதான் உயர்வு. திமிர் வந்தால் அழிவுதான்.

4. மானங் கெட்ட செயல் உதிர்ந்த தலைமயிர் போன்றது.

5. அற்பத் தனம் யாரையும் தலைகுனிய வைக்கும்.

6. அடிமை வாழ்வில் புகழும் இல்லை. ஆனந்தமும் இல்லை.

7. மட்டமானவனின் தயவில் வாழ்வதை விட மடிவது நல்லது.

8. மானங் கெட்ட பின் வாழ்க்கை என்ன வாழ்க்கை.

9. மானம் உள்ளவன் தலை குனிந்து வாழ மாட்டான்.

10. மானமே பெரிதென்று வாழ்பவரே உலகுக்கு வழிகாட்டி.

## 98. பெருமை

1. ஒளிஒருவற்கு உள்ள வெறுக்கை இளிஒருவற்கு
அஃதிறந்து வாழ்தும் எனல்.

2. பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்.

3. மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர் கீழிருந்தும்
கீழல்லார் கீழல் லவர்.

4. ஒருமை மகளிரே போலப் பெருமையும்
தன்னைத்தான் கொண்டொழுகின் உண்டு.

5. பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை உடைய செயல்.

6. சிறியார் உணர்ச்சியுள் இல்லை பெரியாரைப்
பேணிக்கொள் வேம்என்னும் நோக்கு.

7. இறப்பே புரிந்த தொழிற்றாம் சிறப்புந்தான்
சீரல் லவர்கட் படின்.

8. பணியுமாம் என்றும் பெருமை சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து.

9. பெருமை பெருமிதம் இன்மை சிறுமை
பெருமிதம் ஊர்ந்து விடல்.

10. அற்றம் மறைக்கும் பெருமை சிறுமைதான்
குற்றமே கூறி விடும்.

# 98. பெருமை

பெயரும் புகழுந்தான் வாழ்க்கைக்கு ஒளி.

2. செயல் மூலந்தான் மனிதன் உயர்கிறான். தாழ்கிறான்.
3. அதிகாரம் உள்ளவனிடம் தரம் இல்லை என்றால் மட்டந்தான்.
4. பெண்ணின் கற்புணர்ச்சி போல மான உணர்ச்சியும் வேண்டும்.
5. செயற்கரிய செயலை உத்தமர் செய்வர்.

6. சான்றோரை மதிக்கும் பண்பு அற்பரிடம் இல்லை.
7. அற்பரிடம் வாழ்வு வந்தால் தடபுடல்தான்.

8. ஆன்றோரிடம் பணிவு இருக்கும் அற்பரிடம் தற்புகழ்ச்சி இருக்கும்.
9. தற்புகழ்ச்சியில் மிதப்பான் அற்பன்.

10. பிறர் குற்றம் ஒன்றையே பேசுவான் அற்பன்.

## 99. சான்றாண்மை

1. கடன்என்ப நல்லவை எல்லாம் கடன்அறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு.

2. குணநலம் சான்றோர் நலனே பிறநலம்
எந்நலத்து உள்ளதூஉம் அன்று.

3. அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு
ஐந்துசால்பு ஊன்றிய தூண்.

4. கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு.

5. ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அதுசான்றோர்
மாற்றாரை மாற்றும் படை.

6. சால்பிற்குக் கட்டளை யாதெனில் தோல்வி
துலையல்லார் கண்ணும் கொளல்.

7. இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு.

8. இன்மை ஒருவற்கு இளிவன்று சால்பென்னும்
திண்மைஉண் டாகப் பெறின்.

9. ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்கு
ஆழி எனப்படு வார்.

10. சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலந்தான்
தாங்காது மன்னோ பொறை

# 99. சான்றாண்மை

1. கடமையை நிறைவேற்றுவதுதான் கண்ணியம்.
2. சீலமும் ஒழுக்கமுந்தான் சான்றோர் குணம்.
3. அன்பும், உண்மையும், அருளுமே பண்பாட்டுக்கு உயிர்.
4. கொலை கொடியது. பழிச்சொல்லும் கொடியது தான்.
5. எதிரியையும் வசப்படுத்தும் எளிமை.
6. மட்டமானவர்களிடம் பொறுமை காட்டுவது தான் சால்பு.
7. பிறர் செய்யும் இடையூறைப் பொருட்படுத்தக் கூடாது.
8. பெருந்தன்மை உள்ளவனை வறுமையால் ஒன்றும் செய்ய முடியாது.
9. உயிரைக் கொடுத்து உண்மைக்குப் பாடுப்படுவர் உத்தமர்.
10. உத்தமர் இல்லை என்றால் உலகில் ஒன்றுமே இல்லை.

# 100. பண்புடைமை

1. எண்பதத்தால் எய்தல் எளிதென்ப யார்மாட்டும்
பண்புடைமை என்னும் வழக்கு.

2. அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்
பண்புடைமை என்னும் வழக்கு.

3. உறுப்பொத்தல் மக்களொப்பு அன்றால் வெறுத்தக்க
பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு.

4. நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டும் உலகு.

5. நகையுள்ளும் இன்னாது இகழ்ச்சி பகையுள்ளும்
பண்புள பாடறிவார் மாட்டு.

6. பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அதுஇன்றேல்
மண்புக்கு மாய்வது மன்.

7. அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண்பு இல்லா தவர்.

8. நண்பாற்றா ராகி நயமில செய்வார்க்கும்
பண்பாற்றா ராதல் கடை.

9. நகல்வல்லர் அல்லார்க்கு மாயிரு ஞாலம்
பகலும்பாற் பட்டன்று இருள்.

10. பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்
கலந்தீமை யால்திரிந் தற்று.

# 100. பண்புடைமை

1. பண்போடு நடந்து கொண்டால் வெற்றிதான்.
2. குடும்ப நலமும் இரக்க குணமுமே பண்புடைமை யாகும்.
3. கண்ணும் காதும் இருந்தால் மட்டும் மனிதன் இல்லை. பண்பும் வேண்டும்.
4. அன்பும் அருளும் உடைய பண்பாளரை உலகம் வாழ்த்தும்.
5. கிண்டல் கேலியிலுங்கூட மரியாதை இருக்க வேண்டும்.
6. பண்புடையவர்களை வைத்துத்தான் உலகம் இருக்கிறது.
7. பண்பில்லை என்றால் அறிவால் பயனில்லை.
8. எதிரிகளிடமும் இனிமையாக நடந்து கொள்ள வேண்டும். அதுதான் பண்பாடு.
9. சிரித்து மகிழத் தெரியாதவன் ஒரே இருட்டு.
10. பண்பில்லாதவனிடம் செல்வம் தங்காது.

## 101. நன்றியில் செல்வம்

1. வைத்தான்வாய் சான்ற பெரும்பொருள்
அஃதுண்ணான்
செத்தான் செயக்கிடந்தது இல்.

2. பொருளானாம் எல்லாமென்று ஈயாது இவறும்
மருளானாம் மாணாப் பிறப்பு.

3. ஈட்டம் இவறி இசைவேண்டா ஆடவர்
தோற்றம் நிலக்குப் பொறை.

4. எச்சமென்று என்எண்ணுங் கொல்லோ ஒருவரால்
நச்சப் படாஅ தவன்.

5. கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு அடுக்கிய
கோடிஉண் டாயினும் இல்.

6. ஏதம் பெருஞ்செல்வம் தான்றுவ்வான்
தக்கார்க்கொன்று
ஈதல் இயல்பிலா தான்.

7. அற்றார்க்கொன்று ஆற்றாதான் செல்வம் மிகநலம்
பெற்றாள் தமியள்மூத் தற்று.

8. நச்சப் படாதவன் செல்வம் நடுவூருள்
நச்சு மரம்பழுத் தற்று.

9. அன்பொரீஇத் தற்செற்று அறநோக்காது ஈட்டிய
ஒண்பொருள் கொள்வார் பிறர்.

10. சீருடைச் செல்வர் சிறுதுனி மாரி
வறங்கூர்ந் தனையது உடைத்து.

## 101. நன்றியில் செல்வம்

1. செல்வம் என்றால் அது நல்லதுக்குப் பயன்பட வேண்டும்.
2. காசே தெய்வம் என்று சேர்த்து வைப்பவன் கயவன்.
3. பயனின்றிச் சேர்ப்பவன் பூமிக்குப் பாரம்.
4. செல்வத்தைப் பயன் படுத்தாதவன் பேய்.
5. அனுபவிக்காதவன் செல்வம் ஒரு பாலைவனம்.
6. உண்ணாமல் உதவாமல் சேர்ந்தது நோய்.
7. ஏழைகளுக்கு உதவாத செல்வம் திருமணம் ஆகாத பெண் மாதிரி. ஒரு பலனும் இல்லை.
8. பிறர் விரும்பாத செல்வம் நஞ்சு மரம்.
9. கொடியவன் செல்வத்தை ஒருவரும் மதியார்.
10. நல்லோர் செல்வம் பருவ மழை போன்றது.

# 102. நாணுடைமை

1. கருமத்தால் நாணுதல் நாணுத் திருநுதல்
நல்லவர் நாணுப் பிற.

2. ஊணுடை எச்சம் உயிர்க்கெல்லாம் வேறல்ல
நாணுடைமை மாந்தர் சிறப்பு.

3. ஊனைக் குறித்த உயிரெல்லாம் நாண்என்னும்
நன்மை குறித்தது சால்பு.

4. அணிஅன்றோ நாணுடைமை சான்றோர்க்கு அஃதின்றேல்
பிணிஅன்றோ பீடு நடை.

5. பிறர்பழியும் தம்பழியும் நாணுவார் நாணுக்கு
உறைபதி என்னும் உலகு.

6. நாண்வேலி கொள்ளாது மன்னோ வியன்ஞாலம்
பேணலர் மேலா யவர்.

7. நாணால் உயிரைத் துறப்பர் உயிர்ப்பொருட்டால்
நாண்துறவார் நாண்ஆள் பவர்.

8. பிறர்நாணத் தக்கது தான்நாணா னாயின்
அறம்நாணத் தக்கது உடைத்து.

9. குலஞ்சுடும் கொள்கை பிழைப்பின் நலஞ்சுடும்
நாணின்மை நின்றக் கடை.

10. நாண்அகத் தில்லார் இயக்கம் மரப்பாவை
நாணால் உயிர்மருட்டி யற்று.

## 102. நாணுடைமை

1. பெண்களைப் போல உத்தமர்களும் புறம்பான செயலுக்கு கூசுவார்கள்.
2. மனிதன் என்றால் தீமைக்குக் கூச வேண்டும்.
3. தீமைக்கு நாணுவதுதான் மனிதப் பண்பு.
4. தீமைக்கு கூசுவதுதான் அழகு.
5. பிறருடைய தவறுக்கும் நல்லவர் நாணுவர்.
6. நாணம் ஆடை போன்றது. அதுதான் பாதுகாப்பு.
7. நல்லவர்க்கு உயிர் பெரிதன்று. மானமே பெரிது.
8. வெட்கம் இல்லாதவன் பஞ்சமாபாதகன்.
9. வெட்கம் இல்லாதவனால் அவன் குடும்பத்துக்கே கேடு.
10. நாணம் இல்லாதவன் வெறும் பொம்மை.

# 103. குடிசெயல் வகை

1. கருமம் செயஒருவன் கைதூவேன் என்னும்
பெருமையின் பீடுடையது இல்.

2. ஆள்வினையும் ஆன்ற அறிவும் எனஇரண்டின்
நீள்வினையால் நீளும் குடி.

3. குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்.

4. சூழாமல் தானே முடிவெய்தும் தம்குடியைத்
தாழாது உஞற்று பவர்க்கு.

5. குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு.

6. நல்லாண்மை என்பது ஒருவற்குத் தான்பிறந்த
இல்லாண்மை ஆக்கிக் கொளல்.

7. அமரகத்து வன்கண்ணர் போலத் தமரகத்தும்
ஆற்றுவார் மேற்றே பொறை.

8. குடிசெய்வார்க்கு இல்லை பருவம் மடிசெய்து
மானம் கருதக் கெடும்.

9. இடும்பைக்கே கொள்கலங் கொல்லோ குடும்பத்தைக்
குற்றம் மறைப்பான் உடம்பு.

10. இடுக்கண்கால் கொன்றிட வீழும் அடுத்தூன்றும்
நல்லாள் இலாத குடி.

## 103. குடிசெயல் வகை

1. கடமையை நிறைவேற்ற உறுதிகொண்டவனே உத்தமன்.
2. முயற்சியும் அனுபவமுமே பிறவிப் பயன்.
3. விடாமுயற்சிக்கு தெய்வம் உதவும்.
4. முயற்சியால் மனிதனுக்கும் குடும்பத்துக்கும் பெருமை.
5. நல்லதையே செய்பவனை எல்லோரும் நம்புவார்கள்.
6. ஊக்கமான செயலால் ஒளிபெறும் குடும்பம்.
7. உழைப்பில் உயர்பவன் வீரரில் வீரன்.
8. உழைப்பை நம்புகிறவனுக்கு காலம் ஒத்துழைக்கும்.
9. செயலும் ஊக்கமும் இல்லாதவன் நடைபிணம்.
10. செயலும் திறமும் இல்லாத குடும்பம் அழியும்.

# 104. உழவு

1. சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை.

2. உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃ தாற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து.

3. உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்.

4. பலகுடை நீழலும் தங்குடைக்கீழ்க் காண்பர்
அலகுடை நீல லவர்.

5. இரவார் இரப்பார்க்கொன்று ஈவர் கரவாது
கைசெய்தூண் மாலை யவர்.

6. உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்
விட்டேம்என் பார்க்கும் நிலை.

7. தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும்
வேண்டாது சாலப் படும்.

8. ஏரினும் நன்றால் எருஇடுதல் கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு.

9. செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து
இல்லாளின் ஊடி விடும்.

10. இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்.

## 104. உழவு

1. உலகத்துக்கு ஆதரவு விவசாயந்தான்.
2. உழவர்கள்தாம் மற்றவர்களுக்கு உயிர்.
3. சுதந்திர புருஷர்கள் என்றால் விவசாயிகள் தாம்.
4. விவசாய வளம் உள்ள நாடுதான் முதன்மை யான நாடு.
5. கொடுத்துக் காப்பாற்றுகிறவர்கள் உழவர்கள்.
6. உழவர்கள் இல்லை என்றால் ஒன்றுமே இல்லை.
7. உரந்தான் நிலத்துக்கு உயிர்.
8. நீர்வளமும் பாதுகாப்பும் மிக மிக முக்கியம்.
9. கவனம் இல்லை என்றால் நிலம் வறண்டு விடும்.
10. சோம்பேறிகளை பூமாதேவி வெறுப்பாள்.

# 105. நல்குரவு

1. இன்மையின் இன்னாதது யாதெனின் இன்மையின்
இன்மையே இன்னா தது.

2. இன்மை எனஒரு பாவி மறுமையும்
இம்மையும் இன்றி வரும்.

3. தொல்வரவும் தோலும் கெடுக்கும் தொகையாக
நல்குரவு என்னும் நசை.

4. இற்பிறந்தார் கண்ணேயும் இன்மை இளிவந்த
சொற்பிறக்கும் சோர்வு தரும்.

5. நல்குரவு என்னும் இடும்பையுள் பல்குரைத்
துன்பங்கள் சென்று படும்.

6. நற்பொருள் நன்குணர்ந்து சொல்லினும் நல்கூர்ந்தார்
சொற்பொருள் சோர்வு படும்.

7. அறஞ்சாரா நல்குரவு ஈன்றதா யானும்
பிறன்போல நோக்கப் படும்.

8. இன்றும் வருவது கொல்லோ நெருநலும்
கொன்றது போலும் நிரப்பு.

9. நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் நிரப்பினுள்
யாதொன்றும் கண்பாடு அரிது.

10. துப்புரவு இல்லார் துவரத் துறவாமை
உப்பிற்கும் காடிக்கும் கூற்று.

# 105. நல்குரவு

1. வறுமைக்கு நிகரான கொடுமை வறுமை ஒன்றுதான்.
2. வறுமை என்பது கொடுமை. அது கொல்லாமல் கொல்லும்.
3. வறியவன் செயலுக்கோ வார்த்தைக்கோ மதிப்பில்லை.
4. குடும்ப வாழ்வுக்கு எமன் வறுமை.
5. வறுமை வந்தால் தொடர்ந்து துன்பம் வரும்.
6. வறியவனின் ஆராய்ச்சி எடுபடாது.
7. பெற்ற தாய்கூட ஏழை மகனை மதிக்க மாட்டாள்.
8. நாளைக்கு என்ன செய்ய என்று அலறுவான் வறியவன்.
9. நெருப்பை விட அதிகம் பொசுக்கும் வறுமை.
10. வறியவனின் சந்நியாசம் கேலிக்கூத்து.

# 106. இரவு

1. இரக்க இரத்தக்கார்க் காணின் கரப்பின்
அவர்பழி தம்பழி யன்று.

2. இன்பம் ஒருவற்கு இரத்தல் இரந்தவை
துன்பம் உறாஅ வரின்.

3. கரப்பிலா நெஞ்சின் கடனறிவார் முன்நின்று
இரப்புமோ ரேஎர் உடைத்து.

4. இரத்தலும் ஈதலே போலும் கரத்தல்
கனவிலும் தேற்றாதார் மாட்டு.

5. கரப்பிலார் வையகத்து உண்மையால் கண்ணின்று
இரப்பவர் மேற்கொள் வது.

6. கரப்பிடும்பை இல்லாரைக் காணின் நிரப்பிடும்பை
எல்லாம் ஒருங்கு கெடும்.

7. இகழ்ந்தெள்ளாது ஈவாரைக் காணின் மகிழ்ந்துள்ளம்
உள்ளுள் உவப்பது உடைத்து.

8. இரப்பாரை இல்லாயின் ஈர்ங்கண்மா ஞாலம்
மரப்பாவை சென்றுவந் தற்று.

9. ஈவார்கண் என்னுண்டாம் தோற்றம் இரந்துகோள்
மேவார் இலாஅக் கடை.

10. இரப்பான் வெகுளாமை வேண்டும் நிரப்பிடும்பை
தானேயும் சாலும் கரி.

# 106. இரவு

1. நல்லவர்களிடம் ஒன்று பெறுவது நல்லது.
2. பண்பாளரிடம் வேண்டும் யாசகம் ஆகாது.
3. அருளாளர்களிடம் கை நீட்டி வாங்குவது நல்லது.
4. பண்பாளரிடம் பெறுவது கொடுப்பதற்குச் சமம்.
5. தாராள மனதுடையவர்களின் கொடையே கொடை.
6. அருளாளர் கொடுக்க வேண்டாம். அவர்கள் பார்வையே போதும்.
7. அன்போடு கொடுப்பவரைப் பார்த்தால் மனம் துள்ளும்.
8. வாங்குகிறவர் இல்லை என்றால் வாழ்க்கை யில் உயிர் இல்லை.
9. வாங்குபவர் இல்லை என்றால் கொடுக் கிறவர் வாடி விடுவர்.
10. ஒன்றை வேண்டி நிற்பவனுக்கு பொறுமை வேண்டும்.

## 107. இரவச்சம்

1. கரவாது உவந்தீயும் கண்ணன்னார் கண்ணும்
இரவாமை கோடி யுறும்.

2. இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்.

3. இன்மை இடும்பை இரந்துதீர் வாமென்னும்
வன்மையின் வன்பாட்டது இல்.

4. இடமெல்லாம் கொள்ளாத் தகைத்தே இடமில்லாக்
காலும் இரவொல்லாச் சால்பு.

5. தெண்ணீர் அடுபுற்கை யாயினும் தாள்தந்தது
உண்ணலி னூங்கினியது இல்.

6. ஆவிற்கு நீரென்று இரப்பினும் நாவிற்கு
இரவின் இளிவந்தது இல்.

7. இரப்பன் இரப்பாரை எல்லாம் இரப்பின்
கரப்பார் இரவன்மின் என்று.

8. இரவென்னும் ஏமாப்பில் தோணி கரவென்னும்
பார்தாக்கப் பக்கு விடும்.

9. இரவுள்ள உள்ளம் உருகும் கரவுள்ள
உள்ளதூஉம் இன்றிக் கெடும்.

10. கரப்பவர்க்கு யாங்கொளிக்குங் கொல்லோ இரப்பவர்
சொல்லாடப் போஓம் உயிர்.

# 107. இரவச்சம்

1. என்ன இருந்தாலும் கை ஏந்தி வாங்குவது கேவலம்.
2. வாங்கித்தான் பிழைக்க வேண்டும் என்றால் கொடுமைதான்.
3. வறுமையைச் சமாளிக்க யாசகம் எடுப்பது தான் வழி என்றால் அது கேவலம்.
4. கொடிய வறுமையிலும் பிறரிடம் கேளாதவர் உயர்ந்தவர்.
5. முயற்சியில் வந்தது கூழானாலும் அது அமிழ்தம்.
6. தாகத்துக்கு தண்ணீர் கேட்பதும் கேவலம்.
7. வஞ்சகரிடம் கேட்கக் கூடாது என்பதே என் விண்ணப்பம்.
8. வஞ்சகனைக் கண்டாலே வறியவன் கலங்குவான்.
9. யாசகத்தை நினைத்தாலே நெஞ்சு வெடித்து விடும்.
10. வஞ்சகக் கஞ்சனின் உயிர் வன்மையானது தான்.

## 108. கயமை

1. மக்களே போல்வர் கயவர் அவரன்ன
ஒப்பாரி யாங்கண்டது இல்.

2. நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்
நெஞ்சத்து அவலம் இலர்.

3. தேவர் அனையர் கயவர் அவருந்தாம்
மேவன செய்தொழுக லான்.

4. அகப்பட்டி ஆவாரைக் காணின் அவரின்
மிகப்பட்டுச் செம்மாக்கும் கீழ்.

5. அச்சமே கீழ்களது ஆசாரம் எச்சம்
அவாஉண்டேல் உண்டாம் சிறிது.

6. அறைபறை அன்னர் கயவர்தாம் கேட்ட
மறைபிறர்க்கு உய்த்துரைக்க லான்.

7. ஈர்ங்கை விதிரார் கயவர் கொடிறுடைக்கும்
கூன்கைய ரல்லா தவர்க்கு.

8. சொல்லப் பயன்படுவார் சான்றோர் கரும்புபோல்
கொல்லப் பயன்படும் கீழ்.

9. உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல்
வடுக்காண வற்றாகும் கீழ்.

10. எற்றிற் குரியர் கயவரொன்று உற்றக்கால்
விற்றற்கு உரியர் விரைந்து.

## 108 கயமை

1. கயவரும் மனிதர்போலவே நடிப்பார்.

2. நினைத்தது நினைத்தபடி தீங்கு செய்வான் கயவன்.

3. மனம் போனபடி தவறு செய்வான் கயவன்.

4. ஏழைகளின் முன் வீறாப்புப் பண்ணுவான் கயவன்.

5. பயந்து பயந்து சாவான் கயவன்.

6. கயவன் வாய் சும்மா இருக்காது.

7. அடிப்பவனுக்கு மட்டுமே அள்ளிக் கொடுப்பான் கயவன்.

8. சொல்லுக்குக் கட்டுப்படமாட்டான் கயவன்.

9. பொறாமை பிடித்தவன் கயவன்.

10. பொய்ச் சத்தியம் பண்ணுவான் கயவன்.

# 3. காமத்துப்பால்

## 8. களவியல்

### 109. தகையணங்குறுத்தல்

1. அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொல் மாலுமென் நெஞ்சு.
2. நோக்கினாள் நோக்கெதிர் நோக்குதல் தாக்கணங்கு
தானைக்கொண் டன்னது உடைத்து.
3. பண்டறியேன் கூற்றென் பதனை இனியறிந்தேன்
பெண்டகையால் பேரமர்க் கட்டு.
4. கண்டார் உயிருண்ணும் தோற்றத்தால் பெண்டகைப்
பேதைக்கு அமர்த்தன கண்.
5. கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல்
நோக்கம்இம் மூன்றும் உடைத்து.
6. கொடும்புருவம் கோடா மறைப்பின் நடுங்கஞர்
செய்யல மன்இவள் கண்.
7. கடாஅக் களிற்றின்மேல் கட்படாம் மாதர்
படாஅ முலைமேல் துகில்.
8. ஒண்ணுதற் கோஓ உடைந்ததே ஞாட்பினுள்
நண்ணாரும் உட்கும்என் பீடு.
9. பிணையேர் மடநோக்கும் நாணும் உடையாட்கு
அணிஎவனோ ஏதில தந்து.
10. உண்டார்கண் அல்லது அடுநறாக் காமம்போல்
கண்டார் மகிழ்செய்தல் இன்று.

# 3. காமத்துப்பால்

## 8. களவியல்

### 109. தகையணங்குறுத்தல்

1. காதலோடு பார்த்தால் அழகுமயமாகத் தெரிவாள் பெண். அதிசயமாகவே தெரிவாள்.
2. காதலன் பார்க்கிற பொழுது பெண் குனிந்து தரையைப் பார்ப்பாள்.
3. பெண்ணின் அழகு காதலனை கசக்கிப் பிழியும்.
4. பெண்ணின் காதல் பார்வை ஒரு பாசவலை.
5. காதலியின் பார்வை இளைஞனை வதைக்கும்.
6. கண்ணைப் போலவே புருவமும் கதிகலங்க வைக்கிறது காதலனை.
7. பெண்ணின் மார்பு யானையின் மத்தகந்தான்.
8. காதலியின் நெற்றி அழகே அழகு.
9. காதலியின் ஒவ்வொரு அங்கமும் அழகு மயம்.
10. கள்ளை விடக் காமம் பொல்லாதது.

## 110. குறிப்பறிதல்

1. இருநோக்கு இவளுண்கண் உள்ளது ஒருநோக்கு
நோய்நோக்கொன் றந்நோய் மருந்து.

2. கண்களவு கொள்ளும் சிறுநோக்கம் காமத்தில்
செம்பாகம் அன்று பெரிது.

3. நோக்கினாள் நோக்கி இறைஞ்சினாள் அஃதவள்
யாப்பினுள் அட்டிய நீர்.

4. யான்நோக்குங் காலை நிலன்நோக்கும் நோக்காக்கால்
தான்நோக்கி மெல்ல நகும்.

5. குறிக்கொண்டு நோக்காமை அல்லால் ஒருகண்
சிறக்கணித்தாள் போல நகும்.

6. உறாஅ தவர்போல் சொலினும் செறாஅர்சொல்
ஒல்லை உணரப் படும்.

7. செறாஅச் சிறுசொல்லும் செற்றார்போல் நோக்கும்
உறா அர்போன்று உற்றார் குறிப்பு.

8. அசையியற்கு உண்டாண்டோர் ஏஎர்யான் நோக்கப்
பசையினள் பைய நகும்.

9. ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல்
காதலார் கண்ணே யுள.

10. கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனும் இல.

## 110. குறிப்பறிதல்

1. ஒரு பார்வையில் துன்பப் படுத்துகிறாள். இன்னொரு பார்வையில் இன்பம் ஊட்டு கிறாள்.
2. கடைக்கண் பார்வையும் புன்முறுவலுமே போதும்.
3. காதலை வளர்ப்பது, பெண்ணின் பார்வை யும் நாணமுந்தான்.
4. நான் பார்த்தால் குனிவாள். பார்க்கா விட்டால் சிரிப்பாள்.
5. நெளித்து வளைத்துப் பார்க்கிற அவள் பார்வையே பார்வை.
6. தெரியாதவர் போல் நடித்தாலும் அதில் ஆசை உண்டு.
7. வெறித்த பார்வை, படப்படப்பு அவ்வளவும் ஆசையின் அறிகுறி.
8. பெண்ணின் புன்னகையில் என்னென்னவோ இருக்கின்றன.
9. காதலர்கள் ஒருவரை ஒருவர் தெரியாதவர் போலப் பார்ப்பார்கள்.
10. பார்வையே பேசும், வாயை விட நன்றாகப் பேசும் பார்வை.

## 111. புணர்ச்சி மகிழ்தல்

1. கண்டுகேட்டு உண்டுயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உள.

2. பிணிக்கு மருந்து பிறமன் அணியிழை
தன்நோய்க்குத் தானே மருந்து.

3. தாம்வீழ்வார் மென்றோள் துயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணான் உலகு.

4. நீங்கின் தெறூஉம் குறுகுங்கால் தண்ணென்னும்
தீயாண்டுப் பெற்றாள் இவள்.

5. வேட்ட பொழுதின் அவையவை போலுமே
தோட்டார் கதுப்பினாள் தோள்.

6. உறுதோறு உயிர்தளிர்ப்பத் தீண்டலால் பேதைக்கு
அமிழ்தின் இயன்றன தோள்.

7. தம்மில் இருந்து தமதுபாத்து உண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு.

8. வீழும் இருவர்க்கு இனிதே வளியிடை
போழப் படாஅ முயக்கு.

9. ஊடல் உணர்தல் புணர்தல் இவைகாமம்
கூடியார் பெற்ற பயன்.

10. அறிதோறு அறியாமை கண்டற்றால் காமம்
செறிதோறும் சேயிழை மாட்டு.

# 111. புணர்ச்சி மகிழ்தல்

1. காதலர் கலவியில் ஐம்புலன்களும் ஒடுங்கிவிடும்.
2. காதலில் ஏற்பட்ட சிரமம் கலவியில் ஓடிவிட்டது.
3. சொர்க்கம் என்றால் காதலரின் ஒருமித்த கூட்டுறவுதான்.
4. விலக விலகச் சுடுகிற தீ காதல் தீ.
5. காதலியின் உறவு ஆனந்த சாகரம்.
6. உயிர் காக்கும் சஞ்சீவி காதலியின் மேனி.
7. சுதந்திர இன்பம் என்றால் காதலியின் உறவுதான்.
8. உயிரும் ஒன்றாகி உடலும் ஒன்றாகிவிடும் கலவியில்.
9. கொஞ்சம் ஊடலும் தேவைதான்.
10. உறவாட உறவாட இன்பம் புதிது புதிதாய் கிடைக்கிறது.

## 112. நலம் புனைந்துரைத்தல்

1. நன்னீரை வாழி அனிச்சமே நின்னினும்
மென்னீரள் யாம்வீழ் பவள்.

2. மலர்காணின் மையாத்தி நெஞ்சே இவள்கண்
பலர்காணும் பூவொக்கும் என்று.

3. முறிமேனி முத்தம் முறுவல் வெறிநாற்றம்
வேலுண்கண் வேய்த்தோ ளவட்கு.

4. காணிற் குவளை கவிழ்ந்து நிலன்நோக்கும்
மாணிழை கண்ணொவ்வேம் என்று.

5. அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாள் நுசுப்பிற்கு
நல்ல படாஅ பறை.

6. மதியும் மடந்தை முகனும் அறியா
பதியிற் கலங்கிய மீன்.

7. அறுவாய் நிறைந்த அவிர்மதிக்குப் போல
மறுவுண்டோ மாதர் முகத்து.

8. மாதர் முகம்போல் ஒளிவிட வல்லையேல்
காதலை வாழி மதி.

9. மலரன்ன கண்ணாள் முகமொத்தி யாயின்
பலர்காணத் தோன்றல் மதி.

10. அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்
அடிக்கு நெருஞ்சிப் பழம்.

# 112. நலம் புணர்ந்துரைத்தல்

1. எதுவுமே காதலிக்கு இணையாகத் தோன்றாது காதலனுக்கு.
2. பூவைப் பார்த்தால் காதலி ஞாபகம் வந்து விடுகிறது.
3. காதலியின் ஈர்ப்பில் சுற்றிச் சுற்றி வருவான் காதலன்.
4. காதலியின் கண்ணுக்குமுன் குவளைமலர் சாதாரணம்.
5. பூவை அதிகமாகச் சூடினாலும் தளர்ந்து விடுவாள் காதலி.
6. சந்திரனா, முகமா என்று நிச்சயிக்க முடியவில்லை.
7. சந்திரனில் மறு உண்டு. இவள் முகத்தில் அது இல்லை.
8. என் காதலி முகம் போல் சந்திரனே! உன்னிடம் ஒளி இல்லை.
9. சந்திரனே! உன்னைப் போல் என் காதலி எல்லோருக்கும் முகத்தைக் காட்ட மாட்டாள்.
10. அணிச்சமலரினும் மென்மையானவள் காதலி.

## 113. காதற் சிறப்புரைத்தல்

1. பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயிறு ஊறிய நீர்.

2. உடம்பொடு உயிரிடை என்னமற் றன்ன
மடந்தையொடு எம்மிடை நட்பு.

3. கருமணியிற் பாவாய்நீ போதாயாம் வீழும்
திருநுதற்கு இல்லை இடம்.

4. வாழ்தல் உயிர்க்கன்னள் ஆயிழை சாதல்
அதற்கன்னள் நீங்கு மிடத்து.

5. உள்ளுவன் மன்யான் மறப்பின் மறப்பறியேன்
ஒள்ளமர்க் கண்ணாள் குணம்.

6. கண்ணுள்ளின் போகார் இமைப்பின் பருவரார்
நுண்ணியர்எங் காத லவர்.

7. கண்ணுள்ளார் காத லவராகக் கண்ணும்
எழுதேம் கரப்பாக்கு அறிந்து.

8. நெஞ்சத்தார் காத லவராக வெய்துண்டல்
அஞ்சுதும் வேபாக்கு அறிந்து.

9. இமைப்பின் கரப்பாக்கு அறிவல் அனைத்திற்கே
ஏதிலர் என்னும்இவ் வூர்.

10. உவந்துறைவர் உள்ளத்துள் என்றும் இகந்துறைவர்
ஏதிலர் என்னும்இவ் வூர்.

## 113. காதற் சிறப்புரைத்தல்

1. தேனும் பாலும் போன்றது காதலியின் உமிழ்நீர்.
2. உடம்பும் உயிரும் போல நானும் என் காதலியும்.
3. கண்ணுள் மணியே! நீ ஒதுங்கு! காதலிக்கு இடம் வேண்டும்!
4. அவள் இல்லை என்றால் நானும் இல்லை.
5. மறக்க முடியவில்லை காதலியை.
6. கண்ணுக்குள்ளேயே நிற்பர் காதலர்.
7. அவர் கண்ணில் இருப்பதால் கண்ணுக்கு மை தீட்ட மாட்டேன் என்கிறாள் பெண்.
8. காதலர் நெஞ்சில் இருப்பதால் சூடாக உண்ண மாட்டேன் என்கிறாள்.
9. இமையாமல் எப்போதும் காதலரைப் பார்க்கிறேன் என்றும் சொல்கிறாள்.
10. உள்ளத்திலேயே இருக்கிறார். இதை பிறர் அறியார் என்றும் ஒரு போடு போடுகிறாள்.

# 114. நாணுத் துறவுரைத்தல்

1. காமம் உழந்து வருந்தினார்க்கு ஏமம்
மடலல்லது இல்லை வலி.

2. நோனா உடம்பும் உயிரும் மடலேறும்
நாணினை நீக்கி நிறுத்து.

3. நாணொடு நல்லாண்மை பண்டுடையேன் இன்றுடையேன்
காமுற்றார் ஏறும் மடல்.

4. காமக் கடும்புனல் உய்க்குமே நாணொடு
நல்லாண்மை என்னும் புணை.

5. தொடலைக் குறுந்தொடி தந்தாள் மடலொடு
மாலை உழக்கும் துயர்.

6. மடலூர்தல் யாமத்தும் உள்ளுவேன் மன்ற
படல்ஒல்லா பேதைக்கென் கண்.

7. கடலன்ன காமம் உழந்தும் மடலேறாப்
பெண்ணின் பெருந்தக்கது இல்.

8. நிறையரியர் மன்அளியர் என்னாது காமம்
மறையிறந்து மன்று படும்.

9. அறிகிலார் எல்லாரும் என்றேஎன் காமம்
மறுகின் மறுகும் மருண்டு.

10. யாங்கண்ணின் காண நகுப அறிவில்லார்
யாம்பட்ட தாம்படா வாறு.

## 114. நாணுத் துறவுரைத்தல்

காதல் கைகூடாத பொழுது மடல் ஏறுவர்.

2. மடல் ஏறுதல் கோரமான செயல்தான்.

3. வெட்கம் இல்லாமல் மடலேறுதல் கிறுக்குத்தான்.

4. காம் வெள்ளம் நாணம் எனும் அணையை உடைத்து விடும்.

5. பனை மட்டையில் செய்த குதிரையில் ஏறுவதற்கு காதலியின் பாராமுகந்தான் காரணம்.

6. காமக்கிறுக்கில் தூக்கம் போய்விட்டது.

7. மடல் மாஊர்வது ஆண்தான். பெண் இல்லை.

8. பெண்கள் காம வெறியில் புலம்புவர்.

9. என் பரிதாபம் ஒருவருக்கும் தெரிய வில்லையே என்று பெண் மறுகுவாள்.

10. காமக்கிறுக்கில் ஒவ்வொருவரும் உழன்றவர் தாம்.

# 115. அலர் அறிவுறுத்தல்

1. அலரெழ ஆருயிர் நிற்கும் அதனைப்
பலரறியார் பாக்கியத் தால்.

2. மலரன்ன கண்ணாள் அருமை அறியாது
அலரெமக்கு ஈந்ததிவ் வூர்.

3. உறாஅதோ ஊரறிந்த கௌவை அதனைப்
பெறாஅது பெற்றன்ன நீர்த்து.

4. கவ்வையால் கவ்விது காமம் அதுஇன்றேல்,
தவ்வென்னும் தன்மை இழந்து.

5. களித்தொறும் கள்ளுண்டல் வேட்டற்றால் காமம்
வெளிப்படுந் தோறும் இனிது.

6. கண்டது மன்னும் ஒருநாள் அலர்மன்னும்
திங்களைப் பாம்புகொண் டற்று.

7. ஊரவர் கௌவை எருவாக அன்னைசொல்
நீராக நீளும்இந் நோய்.

8. நெய்யால் எரிநுதுப்பேம் என்றற்றால் கௌவையால்
காமம் நுதுப்பேம் எனல்.

9. அலர்நாண ஒல்வதோ அஞ்சலோம்பு என்றார்
பலர்நாண நீத்தக் கடை.

10. தாம்வேண்டின் நல்குவர் காதலர் யாம்வேண்டும்
கௌவை எடுக்கும்இவ் வூர்.

# 115. அலர் அறிவுறுத்தல்

1. அந்தரங்க உறவு வெளிப்பட வெளிப்படத் தான் காதலுக்கு உறுதி.
2. அன்பின் பெருமை தெரியாது காதலை இகழ்ந்து பேசுவர்.
3. ஒன்றைப் பத்தாகப் பெருக்கி பலரும் பேசுவார்கள்.
4. இல்லாததை பிறர் சொல்வதால் அது வாய்க்கும் என்று காதலர் மகிழ்வர்.
5. ஊராரின் பேச்சு மதுபோல போதை கொடுக்கும்.
6. காதலர் சந்தித்தது ஒருநாள். அதை மாதக் கணக்கில் பேசுவர் பலர்.
7. ஊரார் பேச்சு உரம். வீட்டார் கண்டிப்பு தண்ணீர்.
8. விளக்குக்கு எண்ணை போன்றது ஊராரின் பேச்சு.
9. ஊரார் பேச்சு ஏற ஏற காதலர்க்கு துணிவு உண்டாகும்.
10. பெண்ணைக் கூட்டிக் கொண்டு இளைஞன் ஓடுவதற்கே அலரும் கண்டிப்புமே காரணம்.

# 9. கற்பியல்

## 116. பிரிவாற்றாமை

1. செல்லாமை உண்டேல் எனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க்கு உரை.

2. இன்கண் உடைத்தவர் பார்வல் பிரிவஞ்சும்
புன்கண் உடைத்தால் புணர்வு.

3. அரிதரோ தேற்றம் அறிவுடையார் கண்ணும்
பிரிவோ ரிடத்துண்மை யான்.

4. அளித்தஞ்சல் என்றவர் நீப்பின் தெளித்தசொல்
தேறியார்க்கு உண்டோ தவறு.

5. ஓம்பின் அமைந்தார் பிரிவோம்பல் மற்றவர்
நீங்கின் அரிதால் புணர்வு.

6. பிரிவுரைக்கும் வன்கண்ண ராயின் அரிதவர்
நல்குவர் என்னும் நசை.

7. துறைவன் துறந்தமை தூற்றாகொல் முன்கை
இறைஇறவா நின்ற வளை.

8. இன்னாது இனன்இல்ஊர் வாழ்தல் அதனினும்
இன்னாது இனியார்ப் பிரிவு.

9. தொடிற்சுடின் அல்லது காமநோய் போல
விடிற்சுடல் ஆற்றுமோ தீ.

10. அரிதாற்றி அல்லல்நோய் நீக்கிப் பிரிவாற்றிப்
பின்இருந்து வாழ்வார் பலர்.

# 9. கற்பியல்

## 116. பிரிவாற்றாமை

1. ‘உன் பிரிவால் என் உயிர் போகும்’ என்கிறாள் காதலி.
2. தாங்க முடியாத வேதனை காதலர் பிரிவதுதான்.
3. பிரிவின் துயரை யாராலும் தாங்க முடியாது.
4. ‘உன்னை விடமாட்டேன்’ என்றவரே பிரிந்து சென்றால்....
5. ஒருநாள் பிரிந்திருந்தாலும் தாங்க முடியாது.
6. போய் வருகிறேன் என்று கூசாமல் சொல்பவர் கொடியவர்தான்.
7. காதலன் பிரிந்ததுமே காதலியின் உடல் மெலியும்.
8. காதலனைக் காணாமல் வாழ்வது வேதனை.
9. தொட்டால் சுடுவது தீ. விட்டால் சுடுவது காதல்.
10. பிரிந்தும் வாழ்கிறார் சிலர் என்றால் அது அதிசயந்தான்.

# 117. படர்மெலிந் திரங்கல்

1. மறைப்பேன்மன் யானிஃதோ நோயை இறைப்பவர்க்கு
ஊற்றுநீர் போல மிகும்.

2. கரத்தலும் ஆற்றேன்இந் நோயைநோய் செய்தார்க்கு
உரைத்தலும் நாணுத் தரும்.

3. காமமும் நாணும் உயிர்காவாத் தூங்கும்என்
நோனா உடம்பி னகத்து.

4. காமக் கடல்மன்னும் உண்டே அதுநீந்தும்
ஏமப் புணைமன்னும் இல்.

5. துப்பின் எவனாவர் மற்கொல் துயர்வரவு
நட்பினுள் ஆற்று பவர்.

6. இன்பம் கடல்மற்றுக் காமம் அஃதடுங்கால்
துன்பம் அதனிற் பெரிது.

7. காமக் கடும்புனல நீந்திக் கரைகாணேன்
யாமத்தும் யானே உளேன்.

8. மன்னுயி ரெல்லாம் துயிற்றி அளித்திரா
என்னல்லது இல்லை துணை.

9. கொடியார் கொடுமையின் தாம்கொடிய இந்நாள்
நெடிய கழியும் இரா.

10. உள்ளம்போன்று உள்வழிச் செல்கிற்பின் வெள்ளநீர்
நீந்தல மன்னோஎன் கண்.

# 117. படர்மெலிந் திரங்கல்

1. மூடி மறைத்தால் பொங்கி வரும் காதல் நோய்.
2. மறைக்க முடியாது காதலை. வாய்விட்டுச் சொல்லவும் முடியாது.
3. ‘காமம் ஒரு பக்கம் நாணம் ஒரு பக்கம்’ என்ன செய்வேன் நான்.
4. காமத்தை வெல்ல வழியே இல்லை.

5. பிரிந்து வாழும் கொடியவர் பொல்லாத வர்கள் தாம்.
6. சேர்ந்தால் இன்பம் பிரிந்தால் துன்பம். இதுதான் காதல்.
7. காதல் வெறிக்கு இரவும் இல்லை. பகலும் இல்லை. வேதனைதான்.
8. பிரிந்தவர்க்கு துணையே இல்லை.

9. பிரிவின் தொல்லையை விட இரவின் தொல்லை அதிகம்.
10. மனம் வெதும்புகிறது. கண்ணோ நீர் சொரிகிறது.

# 118. கண்விதுப்பழிதல்

1. கண்தாம் கலுழ்வ தெவன்கொலோ தண்டாநோய்
தாம்காட்ட யாம்கண் டது.

2. தெரிந்துணரா நோக்கிய உண்கண் பரிந்துணராப்
பைதல் உழப்பது எவன்.

3. கதுமெனத் தாம்நோக்கித் தாமே கலுழும்
இதுநகத் தக்கது உடைத்து.

4. பெயலாற்றா நீருலந்த உண்கண் உயலாற்றா
உய்வில்நோய் என்கண் நிறுத்து.

5. படலாற்றா பைதல் உழக்கும் கடலாற்றாக்
காமநோய் செய்தஎன் கண்.

6. ஓஒ இனிதே எமக்கிந்நோய் செய்தகண்
தாஅம் இதற்பட் டது.

7. உழந்துழந்து உள்நீர் அறுக விழைந்திழைந்து
வேண்டி யவர்க்கண்ட கண்.

8. பேணாது பெட்டார் உளர்மன்னோ மற்றவர்க்
காணாது அமைவில கண்.

9. வாராக்கால் துஞ்சா வரின்துஞ்சா ஆயிடை
ஆரஞர் உற்றன கண்.

10. மறைபெறல் ஊரார்க்கு அரிதன்றால் எம்போல்
அறைபறை கண்ணா ரகத்து.

## 118. கண்விதுப்பழிதல்

1. காதலரைக் காட்டியது கண்தான். அதுதான் இப்பொழுது கலங்குகிறது.
2. கண்டதும் காதல் கொண்ட கண்ணை ஏமாற்றி விட்டார் காதலர்.
3. ஆசையோடு பார்த்தது கண். இப்போது ஆளைக் காணவில்லையே என்று பதறுகிறது.
4. அழுது அழுது நீர் வற்றிவிட்டது கண்.
5. காதல் வெறியை உண்டாக்கிய கண்ணுக்கு நல்ல தண்டனைதான்.
6. என்னைக் காட்டிக் கொடுத்த கண் இப்போது மாட்டிக் கொண்டது.
7. அவரை நம்பி ஏமாந்த கண்ணுக்கு இது போன்ற தண்டனை வேண்டும்.
8. ஏமாற்றி விட்டார் காதலர். அதனால் கலங்குகிறது கண்.
9. காதலர் வந்தாலும் உறங்காது, அவர் வராவிட்டாலும் உறங்காது கண்.
10. கண்ணே போதும் காதலைக் காட்டிக் கொடுக்க.

## 119. பசப்புறு பருவரல்

1. நயந்தவர்க்கு நல்காமை நேர்ந்தேன் பசந்தஎன்
பண்பியார்க்கு உரைக்கோ பிற.

2. அவர்தந்தார் என்னும் தகையால் இவர்தந்தென்
மேனிமேல் ஊரும் பசப்பு.

3. சாயலும் நாணும் அவர்கொண்டார் கைம்மாறா
நோயும் பசலையும் தந்து.

4. உள்ளுவன் மன்யான் உரைப்பது அவர்திறமால்
கள்ளம் பிறவோ பசப்பு.

5. உவக்காண்எம் காதலர் செல்வார் இவக்காண்என்
மேனி பசப்பூர் வது.

6. விளக்கற்றம் பார்க்கும் இருளேபோல் கொண்கன்
முயக்கற்றம் பார்க்கும் பசப்பு.

7. புல்லிக் கிடந்தேன் புடைபெயர்ந்தேன் அவ்வளவில்
அள்ளிக்கொள் வற்றே பசப்பு.

8. பசந்தாள் இவள்என்பது அல்லால் இவளைத்
துறந்தார் அவர்என்பார் இல்.

9. பசக்கமன் பட்டாங்கென் மேனி நயப்பித்தார்
நன்னிலையர் ஆவர் எனின்.

10. பசப்பெனப் பேர்பெறுதல் நன்றே நயப்பித்தார்
நல்காமை தூற்றார் எனின்.

# 119. பசப்புறு பருவரல்

1. காதலர் பிரிந்தால் காதலியின் மேனி வெளுத்து விடும்.
2. காதலர் தந்தது என்னும் உரிமையில் உடல் பூராவும் தடவும் பசலை.
3. வனப்பு, கூச்சம் இவற்றுக்குப் பதில் ஏக்கத்தையும் பசலையையும் கொடுத்தார்.
4. அவரையே நினைத்துக் கொண்டிருக்கிறேன். ஆனாலும் வெளிறி விடுகிறது மேனி.
5. அவர் பிரிவதற்கும் பசலை வருவதற்கும் தொடர்பு என்ன?
6. எப்பொழுது பிரிவார் என்று பார்த்துக் கொண்டிருக்கிறது பசலை.
7. கட்டின பிடி தளர்வதற்குள் பசலை வந்து அப்பி விட்டது.
8. பசலையைத்தான் பார்க்கிறார்கள். அவர் பிரிந்து சென்றதை யாரும் பார்ப்பதில்லை.
9. அவர் தந்த பசலை அவர் போன்றதுதான் எனக்கு.
10. பசலை தானே காதலின் உறுதியைக் காட்டுகிறது!

## 120. தனிப்படர் மிகுதி

1. தாம்வீழ்வார் தம்வீழப் பெற்றவர் பெற்றாரே
காமத்துக் காழில் கனி.

2. வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால் வீழ்வார்க்கு
வீழ்வார் அளிக்கும் அளி.

3. வீழுநர் வீழப் படுவார்க்கு அமையுமே
வாழுநம் என்னும் செருக்கு.

4. வீழப் படுவார் கெழீஇயிலர் தாம்வீழ்வார்
வீழப் படாஅர் எனின்.

5. நாம்காதல் கொண்டார் நமக்கெவன் செய்பவோ
தாம்காதல் கொள்ளாக் கடை.

6. ஒருதலையான் இன்னாது காமம்காப் போல
இருதலை யானும் இனிது.

7. பருவரலும் பைதலும் காணான்கொல் காமன்
ஒருவர்கண் நின்றொழுகு வான்.

8. வீழ்வாரின் இன்சொல் பெறாஅது உலகத்து
வாழ்வாரின் வன்கணார் இல்.

9. நசைஇயார் நல்கார் எனினும் அவர்மாட்டு
இசையும் இனிய செவிக்கு.

10. உறாஅர்க்கு உறுநோய் உரைப்பாய் கடலைச்
செறாஅஅய் வாழிய நெஞ்சு.

# 120 தனிப்படர் மிகுதி

1. சேர்ந்து அனுபவிப்பதுதான் இன்ப நுகர்ச்சி
2. பிரியாத சேர்க்கை பருவ மழை போன்றது.
3. காதலரின் இணை பிரியாமையே காதலின் மாட்சிமை.
4. கணவனின் பிரியத்தை இழந்துவிடக் கூடாது பெண்.
5. கணவனின் மோகம் போய் விட்டால் அவ்வளவு தான்.
6. ஒருவரை ஒருவர் மோகிக்க வேண்டும்.
7. காதலர்களில் ஒருவருக்குப் பிரியம் குறைந்தாலும் சிக்கல்தான்.
8 காதலர்கள் ஒருவரை ஒருவர் புகழ்ந்து பாராட்ட வேண்டும்.
9. வருத்தம் வந்தாலும் காதலர்களிடம் மரியாதை போகாது.
10. கோபத்தைத் தணிக்க வேண்டும். எரிச்சலை வளர்க்கக் கூடாது.

# 121. நினைந்தவர் புலம்பல்

1. உள்ளினும் தீராப் பெருமகிழ் செய்தலால்
கள்ளினும் காமம் இனிது.

2. எனைத்தொன்று இனிதேகாண் காமம்தாம் வீழ்வார்
நினைப்ப வருவதொன்று இல்.

3. நினைப்பவர் போன்று நினையார்கொல் தும்மல்
சினைப்பது போன்று கெடும்.

4. யாமும் உளேங்கொல் அவர்நெஞ்சத்து எந்நெஞ்சத்து
ஓஒ உளரே அவர்.

5. தந்நெஞ்சத்து எம்மைக் கடிகொண்டார் நாணார்கொல்
எந்நெஞ்சத்து ஓவா வரல்.

6. மற்றியான் என்னுளேன் மன்னோ அவரொடுயான்
உற்றநாள் உள்ள உளேன்.

7. மறப்பின் எவனாவன் மற்கொல் மறப்பறியேன்
உள்ளினும் உள்ளம் சுடும்.

8. எனைத்து நினைப்பினும் காயார் அனைத்தன்றோ
காதலர் செய்யும் சிறப்பு.

9. விளியுமென் இன்னுயிர் வேறல்லம் என்பார்
அளியின்மை ஆற்ற நினைந்து.

10. விடாஅது சென்றாரைக் கண்ணினால் காணப்
படாஅதி வாழி மதி.

## 121. நினைந்தவர் புலம்பல்

1. நினைத்தாலே இன்பம். காதலுக்கு கள்ளை விட போதை அதிகம்.
2. நினைக்க நினைக்க அனுபவித்த இன்பம் வரும்.
3. தும்மல் வராது நின்றால் காதலர் கலங்குவர்.
4. என்னைப் போல் அவரும் பிரிவில் வாடுவாரா?
5. எப்படி வருகிறார் என் நினைப்பில்....?
6. நான் மட்டுமா இருக்கிறேன். என்னுடன் அவரும் இருக்கிறார்.
7. நினைத்துக் கொண்டிருந்தும் வேதனை. மறந்தால் தாங்க முடியுமா?
8. எத்தனை தடவை நினைத்தாலும் சளைக்காது வருவார்.
9. நீயும் நானும் ஒன்றென்றவர். எப்படிப் பிரிந்தார்?
10. ஏமாற்றினவரை எப்படிப் பார்ப்பது.

## 122. கனவுநிலை உரைத்தல்

1. காதலர் தூதொடு வந்த கனவினுக்கு
யாதுசெய் வேன்கொல் விருந்து.

2. கயலுண்கண் யானிரப்பத் துஞ்சிற் கலந்தார்க்கு
உயலுண்மை சாற்றுவேன் மன்.

3. நனவினால் நல்கா தவரைக் கனவினால்
காண்டலின் உண்டென் உயிர்.

4. கனவினான் உண்டாகும் காமம் நனவினான்
நல்காரை நாடித் தரற்கு.

5. நனவினால் கண்டதூஉம் ஆங்கே கனவுந்தான்
கண்ட பொழுதே இனிது.

6. நனவென ஒன்றில்லை யாயின் கனவினால்
காதலர் நீங்கலர் மன்.

7. நனவினால் நல்காக் கொடியார் கனவினால்
என்எம்மைப் பீழிப் பது.

8. துஞ்சுங்கால் தோள்மேல ராகி விழிக்குங்கால்
நெஞ்சத்தர் ஆவர் விரைந்து.

9. தனவினால் நல்காரை நோவர் கனவினால்
காதலர்க் காணா தவர்.

10. நனவினால் நம்நீத்தார் என்பர் கனவினால்
காணார்கொல் இவ்வூ ரவர்.

## 122. கனவுநிலை உரைத்தல்

1. கனவில் வருகிறார், கட்டித் தழுவுகிறார். கனவே துணை.
2. விழித்திருந்தால் வரமாட்டார். தூங்கினால் வருவார்.
3. கனவும் இல்லை என்றால் வாழ்வும் இல்லைதான்.
4. வராத காதலரை இழுத்துக் கொண்டு வருகிறது கனவு.
5. கனவில் பார்ப்பது தனி ஆனந்தந்தான்.
6. கனவில் அனுபவிக்கும் இன்பமும் இன்பந்தான்.
7. விழிப்பில் ஒதுங்குகிறவர் கனவில் வந்து காலைப் பிடிக்கிறார்.
8. தூக்கத்தில் ஏறி உட்காருகிறார். விழித்தால் ஓடுகிறார்.
9. கனவு கண்டு அனுபவிக்காதவர்களுக்குத் தான் கலக்கம்.
10. கனவில் வருகிற காதலரை பிரிந்தார் என்று எப்படிச் சொல்ல?

# 123. பொழுதுகண்டு இரங்கல்

1. மாலையோ அல்லை மணந்தார் உயிருண்ணும்
வேலைநீ வாழி பொழுது.

2. புன்கண்ணை வாழி மருள்மாலை எம்கேள்போல்
வன்கண்ண தோநின் துணை.

3. பனிஅரும்பிப் பைதல்கொள் மாலை துனிஅரும்பித்
துன்பம் வளர வரும்.

4. காதலர் இல்வழி மாலை கொலைக்களத்து
ஏதிலர் போல வரும்.

5. காலைக்குச் செய்தநன்று என்கொல் எவன்கொல்யான்
மாலைக்குச் செய்த பகை.

6. மாலைநோய் செய்தல் மணந்தார் அகலாத
காலை அறிந்தது இலேன்.

7. காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலரும்இந் நோய்.

8. அழல்போலும் மாலைக்குத் தூதாகி ஆயன்
குழல்போலும் கொல்லும் படை.

9. பதிமருண்டு பைதல் உழக்கும் மதிமருண்டு
மாலை படர்தரும் போழ்து.

10. பொருள்மாலை யாளரை உள்ளி மருள்மாலை
மாயும்என் மாயா உயிர்.

# 123. பொழுதுகண்டு இரங்கல்

1. *மாலை நேரத்தில் காதல் வெறி மளமள என்று ஏறும்.*
2. *மாலைப் பொழுதே! நீ ஏன் கொடுமை செய்கிறாய்?*
3. *காதலர் இல்லை என்றால் வாலை நீட்டுகிறது மாலை.*
4. *காதலர் இல்லை என்றால் கொலை வெறியோடு வருகிறது மாலை.*
5. *மாலை நேரத்துக்கு நான் ஒரு வஞ்சகமும் செய்ய வில்லையே!*
6. *அவர் கூட இருக்கும்போது மாலையின் கொடுமை தெரியவில்லை.*
7. *காதலுக்கு வெறி ஊட்டுவது மாலை வேளைதான்.*
8. *செவ்வானம் தீ. ஆயர் குழல் அதை ஊதும் காற்று.*
9. *மாலை நேரம் வந்துவிட்டால் புத்தி மயங்கி விடுகிறது.*
10. *நான் பெரிதில்லை காதலருக்கு பணம்தான் பெரிது.*

## 124. உறுப்புநலன் அழிதல்

1. சிறுமை நமக்கொழியச் சேட்சென்றார் உள்ளி
நறுமலர் நாணின கண்.

2. நயந்தவர் நல்காமை சொல்லுவ போலும்
பசந்து பனிவாரும் கண்.

3. தணந்தமை சால அறிவிப்ப போலும்
மணந்தநாள் வீங்கிய தோள்.

4. பணைநீங்கிப் பைந்தொடி சோரும் துணைநீங்கித்
தொல்கவின் வாடிய தோள்.

5. கொடியார் கொடுமை உரைக்கும் தொடியொடு
தொல்கவின் வாடிய தோள்.

6. தொடியொடு தோள்நெகிழ நோவல் அவரைக்
கொடியர் எனக்கூறல் நொந்து.

7. பாடு பெறுதியோ நெஞ்சே கொடியார்க்கென்
வாடுதோள் பூசல் உரைத்து.

8. முயங்கிய கைகளை ஊக்கப் பசந்தது
பைந்தொடிப் பேதை நுதல்.

9. முயக்கிடைத் தண்வளி போழப் பசப்புற்ற
பேதை பெருமழைக் கண்.

10. கண்ணின் பசப்போ பருவரல் எய்தின்றே
ஒண்ணுதல் செய்தது கண்டு.

# 124. உறுப்புநலன் அழிதல்

1. பிரிவில் வாடும் காதலியின் கண் பொலிவை இழக்கிறது.
2. பிரிவின் கொடுமையை கண்ணும் நீரும் சொல்கின்றன.
3. சேரும்போது தோள் பூரிக்கும். பிரியும்போது மெலியும்.
4. துணைக்கு ஆள் இல்லை என்றால் தோளுக்கு வாட்டந்தான்.
5. துவண்ட தோளும், கழன்ற வளையும் பிரிவின் கொடுமையை எடுத்துச் சொல்லும்.
6. பிரிவின் வேதனையால் காதலரைத் திட்டக் கூடாது.
7. நெஞ்சே! காதலரிடம் சென்று பிரிவின் கொடுமையைச் சொல்லமாட்டாயா.
8. கட்டிப் பிடித்த கையை விலக்குவதற்குள் நெற்றியில் பசலை ஏறிவிட்டது.
9. பிடிதளரவும் கண்களில் சோர்வு உண்டாகியது.
10. மேனியில் விழுந்த பசலையைப் பார்த்து பசலை விழந்தகண் தளர்கிறது.

## 125. நெஞ்சொடு கிளத்தல்

1. நினைத்தொன்று சொல்லாயோ நெஞ்சே
   எனைத்தொன்றும்
   எவ்வநோய் தீர்க்கும் மருந்து.

2. காதல் அவரில ராகநீ நோவது
   பேதைமை வாழிஎன் நெஞ்சு.

3. இருந்துள்ளி என்பரிதல் நெஞ்சே பரிந்துள்ளல்
   பைதல்நோய் செய்தார்கண் இல்.

4. கண்ணும் கொளச்சேறி நெஞ்சே இவையென்னைத்
   தின்னும் அவர்க்காண லுற்று.

5. செற்றா ரெனக்கை விடல்உண்டோ நெஞ்சேயாம்
   உற்றால் உறாஅ தவர்.

6. கலந்துணர்த்தும் காதலர்க் கண்டால் புலந்துணராய்
   பொய்க்காய்வு காய்திஎன் நெஞ்சு.

7. காமம் விடுஒன்றோ நாண்விடு நன்னெஞ்சே
   யானோ பொறேன்இவ் விரண்டு.

8. பரிந்தவர் நல்காரென்று ஏங்கிப் பிரிந்தவர்
   பின்செல்வாய் பேதைஎன் நெஞ்சு.

9. உள்ளத்தார் காத லவராக உள்ளிநீ
   யாருழைச் சேறிஎன் நெஞ்சு.

10. துன்னாத் துறந்தாரை நெஞ்சத்து உடையேமா
    இன்னும் இழத்தும் கவின்.

## 125. நெஞ்சொடு கிளத்தல்

1. மனமே! பிரிவாற்றாமைக்கு ஒரு மருந்து சொல்.

2. அன்பில்லாதவரை எண்ணி ஏன் வருந்துகிறாய் மன்மே!

3. நெஞ்சே! கூட இருந்தே என் குரல் வளையே நெரிக்கிறாய்.

4. மனமே! அவரைத் தேடி நீ போ! கண்ணையும் கூட்டிக் கொண்டு போ!

5. மறக்க முடியாத மனமே! உன்னால் அவரை விட முடியுமா?

6. மனமே! கண்டவுடன் மயங்குகிற உனக்கு விருப்பு என்னத்துக்கு.

7. ஆசையையும் விட முடியவில்லை. வெட்கத்தையும் விட முடியவில்லை.

8. மனமே! பிரிவின் துயர் அவருக்குத் தெரியாதா? ஏன் அவருக்கு பரிவு காட்டுகிறாய்.

9. காதலர் இங்கு என் எண்ணத்தில்தான் இருக்கிறார். மனமே அவரை உனக்கு தெரியவில்லை.

10. மனதில் அவர் இருந்தும் உடம்பு வாடுகிறது!

# 126. நிறையழிதல்

1. காமக் கணிச்சி உடைக்கும் நிறையென்னும்
நாணுத்தாழ் வீழ்த்த கதவு.

2. காம மெனஒன்றோ கண்ணின்றென் நெஞ்சத்தை
யாமத்தும் ஆளும் தொழில்.

3. மறைப்பேன்மன் காமத்தை யானோ குறிப்பின்றித்
தும்மல்போல் தோன்றி விடும்.

4. நிறையுடையேன் என்பேன்மன் யானோஎன் காமம்
மறையிறந்து மன்று படும்.

5. செற்றார்பின் செல்லாப் பெருந்தகைமை காமநோய்
உற்றார் அறிவதொன்று அன்று.

6. செற்றவர் பின்சேறல் வேண்டி அளித்தரோ
எற்றென்னை உற்ற துயர்.

7. நாணென ஒன்றோ அறியலம் காமத்தால்
பேணியார் பெட்பச் செயின்.

8. பன்மாயக் கள்வன் பணிமொழி அன்றோநம்
பெண்மை உடைக்கும் படை.

9. புலப்ப லெனச்சென்றேன் புல்லினேன் நெஞ்சம்
கலத்த லுறுவது கண்டு.

10. நிணந்தீயில் இட்டன்ன நெஞ்சினார்க்கு உண்டோ
புணர்ந்தூடி நிற்பேம் எனல்.

## 126. நிறையழிதல்

1. அடக்கம், நாணம் இரண்டையும் தூளாக்கிவிடும் காதல் வெறி.
2. காதலுக்கு நேரமும் இல்லை. காலமும் இல்லை.
3. தும்மனை அடக்க முடியாது. காதலையும் அடக்க முடியாது.
4. என்னை மீறித் துள்ளிப் பாய்கிறது காதல்.
5. காதல் வெறி சுற்றிச் சுற்றி வரும்.
6. புறக்கணித்தவரைத் தேடிப் போக வைக்கிறது காதல்.
7, காதல் வெறிக்கு ஆளானவர் நாணம் என்பதை மறந்து விடுவார்கள்.
8. காதலனுடைய அலங்காரப் புகழ்ச்சியில் வீறாப்பு ஓடிவிடும்.
9. பிகுப் பண்ணுவோம் என நினைத்தேன். முடியவில்லை.
10. காதல் மனம் அனலில் வைத்த வெண்ணெய் போல் உருகும்.

# 127. அவர்வயின் விதும்பல்

1. வாளாற்றுப் புற்கென்ற கண்ணும் அவர்சென்ற
நாளொற்றித் தேய்ந்த விரல்.

2. இலங்கிழாய் இன்று மறப்பின்என் தோள்மேல்
கலங்கழியும் காரிகை நீத்து.

3. உரன்நசைஇ உள்ளம் துணையாகச் சென்றார்
வரல்நசைஇ இன்னும் உளேன்.

4. கூடிய காமம் பிரிந்தார் வரவுள்ளிக்
கோடுகொ டேறும்என் நெஞ்சு.

5. காண்கமன் கொண்கனைக் கண்ணாரக் கண்டபின்
நீங்கும்என் மென்றோள் பசப்பு.

6. வருகமன் கொண்கன் ஒருநாள் பருகுவன்
பைதல்நோய் எல்லாம் கெட.

7. புலப்பேன்கொல் புல்லுவேன் கொல்லோ
கலப்பேன்கொல்
கண்அன்ன கேளிர் வரின்.

8. வினைகலந்து வென்றீக வேந்தன் மனைகலந்து
மாலை அயர்கம் விருந்து.

9. ஒருநாள் எழுநாள்போல் செல்லும்சேட் சென்றார்
வருநாள்வைத்து ஏங்கு பவர்க்கு.

10. பெறின்என்னாம் பெற்றக்கால் என்னாம்
உறின்என்னாம்
உள்ளம் உடைந்துக்கக் கால்.

## 127. அவர்வயின் விதும்பல்

1. பிரிந்தவர் நினைப்பால் கண் பூத்துவிட்டது.
2. எப்படி மறக்கமுடியும்? உயிர் இருக்கும் வரை மறக்க முடியாது.
3. என் நலம் மறந்தார் பிரிந்தார். நானோ தன்னலம் கருதாது நினைக்கிறேன்.
4. வருவார் வருவார் என நம்பி மனம் துள்ளி விளையாடுகிறது.
5. அவரைப் பார்த்தால் போதும் பசலை ஓடிவிடும்.
6. அவர் வந்தால் போதும். ஆசை தீர அனுபவிப்பேன்.
7. வந்தவுடன் ஊடல் ஓடிவிடும். கூடல்தான்.
8. விரைவில் முடிய வேண்டும் போர். அதன்பின் தாமதிக்கமாட்டார்.
9. எப்பொழுது வருவார் என்ற ஏக்கத்தால் நேரம் போகமாட்டேன் என்கிறது.
10. உற்சாகம் போனபின் அவர் வந்தாலும் ஒன்றுதான் வராவிட்டாலும் ஒன்றுதான்.

# 128. குறிப்பறிவுறுத்தல்

1. கரப்பினுங் கையிகந் தொல்லாநின் உண்கண்
உரைக்க லுறுவதொன்று உண்டு.

2. கண்நிறைந்த காரிகைக் காம்பேர்தோட் பேதைக்குப்
பெண்நிறைந்த நீர்மை பெரிது.

3. மணியில் திகழ்தரு நூல்போல் மடந்தை
அணியில் திகழ்வதொன்று உண்டு.

4. முகைமொக்குள் உள்ளது நாற்றம்போல் பேதை
நகைமொக்குள் உள்ளதொன்று உண்டு.

5. செறிதொடி செய்திறந்த கள்ளம் உறுதுயர்
தீர்க்கு மருந்தொன்று உடைத்து.

6. பெரிதாற்றிப் பெட்பக் கலத்தல் அரிதாற்றி
அன்பின்மை சூழ்வது உடைத்து.

7. தண்ணந் துறைவன் தணந்தமை நம்மினும்
முன்னம் உணர்ந்த வளை.

8. நெருநற்றுச் சென்றார்எம் காதலர் யாமும்
எழுநாளேம் மேனி பசந்து.

9. தொடிநோக்கி மென்றோளும் நோக்கி அடிநோக்கி
அஃதாண்டு அவள்செய் தது.

10. பெண்ணினால் பெண்மை உடைத்தென்ப கண்ணினால்
காமநோய் சொல்லி இரவு.

# 128. குறிப்பறிவுறுத்தல்

1. கணவனைக் கண்ட மனைவிக்கு புது மகிழ்ச்சி. அதை அனுபவிக்கிறான் கணவன்.
2. "அழகில் ஒரு பூரிப்பு உண்டாகிறது" என்று பாராட்டுகிறான்.
3. மாணிக்கம் கோத்த நூல் போல மறைந்து கிடக்கிறதாம் அவள் புதுப் பொலிவு.
4. மொட்டில் மணம் போல அவள் புன் முறுவலில் ஒரு அற்புதம் இருக்கிறது.
5. மனைவியின் அந்தரங்க ஆனந்தம் கணவனைப் பரவசப்படுத்துகிறது.
6. பிரிய நினைக்கிற காதலன் அளவுக்கு மீறிப் புகழ்வான்.
7. காதலன் பிரிந்து செல்ல நினைப்பதை வளையல் கண்டு கொள்கிறது.
8. இன்று பிரிகிறார் என்றால், நேற்றே வெளிறி விடுகிறது மேனி.
9. வாய் திறந்து சொல்ல மாட்டாள். குறிப்பால் காட்டி விடுவாள் பெண்.
10. ஆசையைக் கண்ணாலேயே காட்டுவதுதான் பெண்மை.

## 129. புணர்ச்சி விதும்பல்

1. உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும்
கள்ளுக்கில் காமத்திற்கு உண்டு.

2. தினைத்துணையும் ஊடாமை வேண்டும் பனைத்துணையும்
காமம் நிறைய வரின்.

3. பேணாது பெட்பவே செய்யினும் கொண்கனைக்
காணாது அமையல கண்.

4. ஊடற்கண் சென்றேன்மன் தோழி அதுமறந்து
கூடற்கண் சென்றதுஎன் நெஞ்சு.

5. எழுதுங்கால் கோல்காணாக் கண்ணேபோல் கொண்கன்
பழிகாணேன் கண்ட விடத்து.

6. காணுங்கால் காணேன் தவறாய காணாக்கால்
காணேன் தவறல் லவை.

7. உய்த்தல் அறிந்து புனல்பாய் பவரேபோல்
பொய்த்தல் அறிந்தென் புலந்து.

8. இளித்தக்க இன்னா செயினும் களித்தார்க்குக்
கள்ளற்றே கள்வநின் மார்பு.

9. மலரினும் மெல்லிது காமம் சிலர்அதன்
செவ்வி தலைப்படு வார்.

10. கண்ணின் துனித்தே கலங்கினாள் புல்லுதல்
என்னினும் தான்விதுப் புற்று.

## 129. புணர்ச்சி விதும்பல்

1. நினைத்தாலே போதையை உண்டாக்குவது காதல்தான். கள் கூட இல்லை.
2. இன்பத்தை அனுபவிக்கும்போது முரண் படக் கூடாது.
3. கணவன் புளுகினாலும் அவனைப் பார்க்காமல் இருக்க முடியவில்லை.
4. ஊட வேண்டும் என்று நினைத்தாள். அதை மறந்து கூடலில் திளைத்தாள்.
5. மை தீட்டும் கோலும் கணவனுடைய பித்தலாட்டமும் கண்ணில் படாது.
6. கணவனைப் பார்க்கிற போது கோபம் விலகி விடுகிறது. பார்க்காவிட்டால் அன்பு விலகி விடுகிறது.
7. தெரிந்தும் வெள்ளத்தில் விழுபவர் போல் கணவன் பொய்யை மனைவி நம்புவாள்.
8. காதல் வெறிக்கு முன்னால் தவறுகள் ஓடிவிடும்.
9. புஷ்பத்தை விட நளினமானது காதல்.
10. ஊடல் காட்டுவது கூடலுக்குத்தான்.

## 130. நெஞ்சொடு புலத்தல்

1. அவர்நெஞ்சு அவர்க்காதல் கண்டும் எவன்நெஞ்சே
நீஎமக்கு ஆகா தது.

2. உறாஅ தவர்க்கண்ட கண்ணும் அவரைச்
செறாஅரெனச் சேறிஎன் நெஞ்சு.

3. கெட்டார்க்கு நட்டார்இல் என்பதோ நெஞ்சேநீ
பெட்டாங்கு அவர்பின் செலல்.

4. இனிஅன்ன நின்னொடு சூழ்வார்யார் நெஞ்சே
துனிசெய்து துவ்வாய்காண் மற்று.

5. பெறாஅமை அஞ்சும் பெறின்பிரிவு அஞ்சும்
அறாஅ இடும்பைத்தென் நெஞ்சு.

6. தனியே இருந்து நினைத்தக்கால் என்னைத்
தினிய இருந்ததுஎன் நெஞ்சு.

7. நாணும் மறந்தேன் அவர்மறக் கல்லாஎன்
மாணா மடநெஞ்சிற் பட்டு.

8. எள்ளின் இளிவாம்என்று எண்ணி அவர்திறம்
உள்ளும் உயிர்க்காதல் நெஞ்சு.

9. துன்பத்திற்கு யாரே துணையாவார் தாமுடைய
நெஞ்சம் துணையல் வழி.

10. தஞ்சம் தமரல்லர் ஏதிலார் தாமுடைய
நெஞ்சம் தமரல் வழி.

# 130. நெஞ்சொடு புலத்தல்

1. மனமே! பிரிந்து போனவரை நினைந்து என்னை ஏன் வருத்துகிறாய்.
2. விட்டுப் போனவர் பின் ஏன் இப்படி ஓடுகிறாய் மனமே!
3. என்னை விட்டுவிட்டு அவர் பின் போகிறாயே மனமே! இது துரோகம் இல்லையா?
4. மனமே! உன்னை நம்ப முடியாது நான்.
5. கணவர் திரும்பும் வரை வேதனை. திரும்பிய பின் பழையபடி பிரிவாரோ எனவும் வேதனை!
6. அவரை நினைக்க வைத்து என்னை வாட்டுகிறது மனம்.
7. மனதின் வஞ்சனையால் வெட்கம் கெட்டவள் ஆனேன்!
8. என்னை மதிக்காமல் அவரை நினைக்கிறது மனம்.
9. மனந்தான் துணை. அதுவும் இப்படிக் கைவிட்டால். . . . . ?
10. என் மனமே எனக்கு வஞ்சகம் செய்கிற தென்றால் பிறகு யாரை நம்பமுடியும்?

## 131. புலவி

1. புல்லா திராஅப் புலத்தை அவர்உறும்
அல்லல்நோய் காண்கம் சிறிது.

2. உப்பமைந் தற்றால் புலவி அதுசிறிது
மிக்கற்றால் நீள விடல்.

3. அலந்தாரை அல்லல்நோய் செய்தற்றால் தம்மைப்
புலந்தாரைப் புல்லா விடல்.

4. ஊடி யவரை உணராமை வாடிய
வள்ளி முதலரிந் தற்று.

5. நலத்தகை நல்லவர்க்கு ஏஎர் புலத்தகை
பூஅன்ன கண்ணா ரகத்து.

6. துனியும் புலவியும் இல்லாயின் காமம்
கனியும் கருக்காயும் அற்று.

7. ஊடலின் உண்டாங்கோர் துன்பம் புணர்வது
நீடுவ தன்றுகொல் என்று.

8. நோதல் எவன்மற்று நொந்தாரென்று அஃதறியும்
காதலர் இல்லா வழி.

9. நீரும் நிழலது இனிதே புலவியும்
வீழுநர் கண்ணே இனிது.

10. ஊடல் உணங்க விடுவாரோடு என்நெஞ்சம்
கூடுவேம் என்பது அவா.

## 131. புலவி

1. உடனே சம்மதிப்பது காதலுக்கு மரியாதை இல்லை.
2. முதலில் மறுப்பு. பிறகு சம்மதப்பு. அதுதான் காதல்.
3. மறுப்பு அதாவது ஊடல் அளவுக்கு மீறக் கூடாது.
4. ஊடலிலேயே நின்று விட்டால் காதல் பயிர் பட்டுப் போகும்.
5. ஊடல்தான் பெண்மைக்கு மெருகூட்டும்.
6. ஊடல் இல்லாத கூடல் பிஞ்சில் பழுத்த பழம்.
7. ஊடல் நீட்டித்தால் கூடலில் வெறுப்பு உண்டாகும்.
8. கண்டிப்பும் வேண்டும். கனிவும் வேண்டும். அது தான் காதல்.
9. நிழலில் வைத்த நீர் குளு குளு என்றிருக்கும். ஊடலோடு கூடிய கூடலும் அப்படியே.
10. கூடலை விரும்புகிறவர் கொஞ்சம் ஊடலில் தவிக்க வேண்டும்.

## 132. புலவி நுணுக்கம்

1. பெண்ணியலார் எல்லாரும் கண்ணின் பொதுஉண்பர்
நண்ணேன் பரத்தநின் மார்பு.

2. ஊடி யிருந்தேமாத் தும்மினார் யாம்தம்மை
நீடுவாழ் கென்பாக்கு அறிந்து.

3. கோட்டுப்பூச் சூடினும் காயும் ஒருத்தியைக்
காட்டிய சூடினீர் என்று.

4. யாரினும் காதலம் என்றேனா ஊடினாள்
யாரினும் யாரினும் என்று.

5. இம்மைப் பிறப்பில் பிரியலம் என்றேனாக்
கண்ணிறை நீர்கொண் டனள்.

6. உள்ளினேன் என்றேன்மற்று என்மறந்தீர் என்றென்னைப்
புல்லாள் புலத்தக் கனள்.

7. வழுத்தினாள் தும்மினே னாக அழித்தழுதாள்
யாருள்ளித் தும்மினீர் என்று.

8. தும்முச் செறுப்ப அழுதாள் நுமர்உள்ளல்
எம்மை மறைத்திரோ என்று.

9. தன்னை உணர்த்தினும் காயும் பிறர்க்குநீர்
இந்நீரர் ஆகுதிர் என்று.

10. நினைத்திருந்து நோக்கினும் காயும் அனைத்துநீர்
யாருள்ளி நோக்கினீர் என்று.

## 132. புலவி நுணுக்கம்

1. கண்ட கண்ட பெண்கள் ஏன் உங்களைப் பார்க்கிறார்கள் என்று மனைவி ஊடினாள்.
2. பொய்த்தும்மல் போட்டே ஊடலை நீட்டுகிறாள் பெண்.
3. ஒரு பூவைச் சூடினால் போதும், எவளை மயக்க இந்த மலர் என்று சொல்கிறாள்.
4. உன் மேல் எனக்குப் பிரியம் அதிகம் என்றால் "மற்றவர் மேல்?..." என்று சீறுகிறாள்.
5. இந்த ஜென்மத்தில் பிரியமாட்டேன் என்றால் "அடுத்த ஜென்மத்தில்?" என்று முனகுகிறாள்.
6. உன்னை இப்பொழுது நினைத்தேன் என்றால், ஓகோ! மறந்தீரோ என்று கோபிக்கிறாள்.
7. தும்மினால் போதும் "எவள் நினைக்கிறாளோ" என்கிறாள்.
8. தும்மல் தொடர "ஏன் மறைக்க வேண்டும்? அவளை நான் தெரியவேண்டாமா?" என்கிறாள்.
9. காலைப் பிடித்துக் கெஞ்சினால் "மற்றவர்களிடம் இப்படித்தானா?" என்கிறாள்.
10. "யாரை நினைத்து என்னை இப்படிப் பார்க்கிறீர்?" என்று குதிக்கிறாள்.

## 133. ஊடலுவகை

1. இல்லை தவறவர்க்கு ஆயினும் ஊடுதல்
வல்லது அவர்அளிக்கு மாறு.

2. ஊடலில் தோன்றும் சிறுதுனி நல்லளி
வாடினும் பாடு பெறும்.

3. புலத்தலின் புத்தேள்நாடு உண்டோ நிலத்தொடு
நீரியைந் தன்னா ரகத்து.

4. புல்லி விடாஅப் புலவியுள் தோன்றுமென்
உள்ளம் உடைக்கும் படை.

5. தவறில ராயினும் தாம்வீழ்வார் மென்றோள்
அகறலி னாங்கொன்று உடைத்து.

6. உணலினும் உண்டது அறல்இனிது காமம்
புணர்தலின் ஊடல் இனிது.

7. ஊடலில் தோற்றவர் வென்றார் அதுமன்னும்
கூடலில் காணப் படும்.

8. ஊடிப் பெறுகுவங் கொல்லோ நுதல்வெயர்ப்பக்
கூடலில் தோன்றிய உப்பு.

9. ஊடுக மன்னோ ஒளியிழை யாம்இரப்ப
நீடுக மன்னோ இரா.

10. ஊடுதல் காமத்திற்கு இன்பம் அதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின்.

## 133. ஊடலுவகை

1. ஊடலுக்கு என்ன காரணம் வேண்டும்? ஊடல்தான் காரணம்.
2. ஊடலில் ஆவேசம் உண்டாகும். அது நல்லதுதான்.
3. அன்புடையவர்களிடம் ஊடல் பண்ணுவது தான் ஆனந்தம்.
4. ஊடலில்தான் காதலின் வேகம் இருக்கிறது.
5. விட்டுப் பிடித்தால்தான் இன்பம் பெருகும்.
6. உண்பதற்குப் பசி முக்கியம். கூடலுக்கு ஊடல் முக்கியம்.
7. ஊடலில் விட்டுக் கொடுத்தால்தான் கூடலில் ருசி உண்டாகும்.
8. கூடலில் விளையும் இன்பத்துக்கு ஊடல்தான் பக்குவம்.
9. 'ஊடல் பெருக இரவே! நீ விரிவாயாக'
10. கூடலுக்கு ஊடல் தேவை. ஊடலுக்குக் கூடல் தேவை. அப்படி ஒரு பொருத்தம்!

## வித்வான் ல. சண்முக சுந்தரம் எழுதிய எமது புதிய வெளியீடுகள்

| | |
|---|---|
| பெருந்தேவனார் பாரதம் | — 50.00 |
| திருபாற்கடல் | — 50.00 |
| பொன்னூஞ்சல் | — 60.00 |
| நட்சத்திர மாலை | — 60.00 |

## பி.சி. கணேசன் எழுதிய

| | |
|---|---|
| இந்துமதம் பல்கலைக் கழகம் (ஐந்து தொகுதிகள்) | — 63.00 |

## பத்மா

| | |
|---|---|
| விநாயகர் அகவல் | |
| கந்தர் சஷ்டி கவசம் (மூலமும் உரையும்) | — 7.00 |